தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:126 | 21-11-2025 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

21.11.2025 கார்த்திகை 5
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று பிற்பகல் 2.37 வரை
பிரதமை பின்பு துவிதியை.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.26 வரை
அனுஷம் பின்பு கேட்டை

யோகம் :
இன்று காலை 11.02 வரை
அதிகண்டம் பின்பு சுகர்மம்.

கரணம் :
இன்று அதிகாலை 1.34 வரை
கிம்ஸ்துக்கினம் பின்பு பிற்பகல்
2.37 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று பிற்பகல் 2.36 வரை
சித்த யோகம் பின்பு யோகம்
சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 2.26 வரை
அசுவினி பின்பு பரணி

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மசோதாவை கிடப்பில் போட கவர்னருக்கு அதிகாரமில்லை: சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு

**புதுடெல்லி, நவ.21:**

மசோதாவுக்கு பதிலளிக்காமல் கிடப்பில் போட கவர்னருக்கு அதிகாரமில்லை என்று சுப்ரீம் கோர்ட் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி, தமிழக சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டு வைத்திருப்பதாக கூறி தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

இதை விசாரித்த நீதிமன்றம், சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஜனாதிபதிக்கும், கவர்னருக்கும் காலக்கெடு நிர்ணயித்து தீர்ப்பு அளித்தது. இந்த விவகாரத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு 14 விளக்க கேள்விகளை சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையில் நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம் நாத், பி.எஸ்.நரசிம்மா, அதுல் எஸ்.சந்துர்கர் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தொடர்ந்து விசாரித்தது. செப்டம்பர் 11-ந்தேதி நடந்த இறுதி விசாரணையின்போது தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த வழக்கில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு நேற்று தீர்ப்பை வாசித்தது. அதில் கூறியிருப்பதாவது:

### கிடப்பில் போட அதிகாரம் இல்லை

“மாநில சட்டசபைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், எந்த பதிலும் அளிக்காமல் கவர்னரால் கிடப்பில் போட முடியாது. கால வரம்பின்றி மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் கிடப்பில் போட்டு வைக்க அதிகாரம் இல்லை.

மத்திய அரசு குறிப்பிட்டதை போல் கவர்னருக்கு 4-வது தெரிவு கிடையாது. மாநில அரசு நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு அரசியல் சாசனத்தின் 200வது பிரிவின்படி, மசோதா மீது முடிவெடுக்க கவர்னருக்கு மூன்று வாய்ப்புகள் தான் உள்ளன. ஒப்புதல் அளிக்கலாம். அல்லது நிராகரிக்கலாம் அல்லது திருப்பி அனுப்பலாம். நான்காவது வாய்ப்பு கிடையாது. மசோதாவுக்கு ஒப்புதல் தராமல் வைத்து இருந்தால், சட்டமன்றத்திற்கு அதற்கான காரணத்தை கவர்னர் சொல்ல வேண்டும்.

### காலக்கெடு விதிக்க முடியாது

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தின் கருத்தை கேட்க வேண்டிய அவசியம் இல்லை. மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் கவர்னருக்கு நீதிமன்றம் காலக்கெடு விதிக்க முடியாது. அதே நேரத்தில் நீண்ட காலம் மசோதாவை கிடப்பில் வைத்திருந்தால் நீதிமன்றங்கள் ஆய்வு செய்ய முடியும்.

மசோதவை நிறுத்தி வைப்பது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது. கவர்னரின் செயல்பாடுகளை நீதிமன்றங்கள் கேள்வி எழுப்ப முடியாது.

### ஒரு மாநிலத்திலத்துக்கு 2 அதிகார அமைப்பா?

ஒரு மாநிலத்துக்கு இரண்டு அதிகார அமைப்புகள் இருப்பதை எங்களால் ஏற்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அமைச்சரவையும்தான் மாநிலத்தில் முதன்மையானதாக இருக்க முடியும்.

கவர்னர்கள் மாநில அரசுக்கு இடையூறு விளைவிக்கும் நடைமுறைகளை மேற்கொள்ளக் கூடாது.

ஒரு மசோதா சட்டமாக மாறும்போது மட்டுமே நீதித்துறை மறு ஆய்வு செய்ய முடியும்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க ஜனாதிபதி மற்றும் கவர்னருக்கு காலக்கெடு நிர்ணயம் செய்து உச்ச நீதிமன்றத்தின் 2 நீதிபதிகள் அமர்வு பிறப்பித்த உத்தரவு அரசியலமைப்புக்கு எதிரானது.

இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதன் மூலம் மாநில சட்டசபைகளில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு கவர்னர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பதை சுப்ரீம் கோர்ட் உறுதிப்படுத்தி இருக்கிறது.

அரசியல் சாசன அமர்வுக்கு தலைமை வகிக்கும் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாயின் பதவிக் காலம் வரும் 23-ம் தேதி நிறைவடைகிறது. அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் நாளை (21ந்தேதி) அவரது பணியின் கடைசி நாளாகும். அதற்கு ஒரு தினம் முன்பாக முக்கியத்துவம் வாய்ந்த மசோதா காலக்கெடு விவகாரத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



# ‘மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகளால் இடதுசாரி பயங்கரவாதம் ஒழிக்கப்படும்’



சத்தீஷ்கார் மாநிலம் சுர்குஜா மாவட்டத்தில் உள்ள அம்பிகாபூர் பகுதியில் நடைபெற்ற ‘ஜன்ஜாதியா கவுரவ் திவாஸ்’ என்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;-

“சத்தீஷ்கார் மற்றும் நாடு முழுவதும் நக்சல்கள், இடதுசாரி பயங்கரவாதத்தின் பாதையை கைவிட்டு, வளர்ச்சியின் பாதையில் இணைந்து வருகின்றனர். மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளால், இடதுசாரி பயங்கரவாதம் ஒழிக்கப்படும்.

பழங்குடியின தலைவர்களின் கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம், சத்தீஷ்கார் மக்கள் வலுவான, தன்னம்பிக்கை கொண்ட மற்றும் வளர்ந்த இந்தியாவை கட்டியெழுப்புவதற்கு விலைமதிப்பற்ற பங்களிப்பைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். பெண்களே சமூகத்தின் அடித்தளமாவார்கள். அவர்கள் முன்னேறும்போது, சமூகம் முன்னேறுகிறது.

சமீபத்தில் உலகக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனைகளை சந்தித்தேன். அப்போது பழங்குடியினத்தை சேர்ந்த வீராங்கனை கிராந்தி கவுட் கூறுகையில், கடுமையான உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் இந்திய அணியில் தனக்கு இடம் கிடைத்ததாக கூறினார். கிராந்தியின் பயணம் சவால்களால் நிறைந்திருந்தது. ஆனால் அவர் தனது தைரியம் மற்றும் விடாமுயற்சியின் மூலம், ஊக்கமளிக்கும் உதாரணமாக உருவெடுத்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு, குறிப்பாக பழங்குடி சமூகத்தின் மகள்களுக்கு, கடின உழைப்பு மற்றும் உறுதிப்பாட்டின் புரட்சிகரமான உதாரணத்தை கிராந்தி கவுட் வழங்கியுள்ளார். பழங்குடி சமூகங்கள் எப்போதும் விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வத்தையும், திறமையையும் காட்டியுள்ளனர். அதே சமயம், பாரம்பரிய விளையாட்டுகள் மறைந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும்.”

இவ்வாறு திரவுபதி முர்மு தெரிவித்தார்.

# ‘டாடா டெக்னாலஜிஸ்’ நிறுவனத்துடன் ரூ.2,590 கோடியில் ஒப்பந்தம் கையெழுத்து

**சென்னை, நவ.21:**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், நேற்று தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக்கல்லூரிகளைத் உலகத் தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) 2,590.303 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கு டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே முதலமைச்சர் முன்னிலையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, அண்ணா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் வெ.குமரேசன், டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஷைலேஷ் சரப், உலகளாவிய தலைவர் (அரசாங்க திட்டங்கள் மற்றும் திறன்கள்) சுஷில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 10வது முறையாக பீகார் முதல்வராக நிதிஷ்குமார் பதவி ஏற்றார்

## பிரதமர் மோடி நேரில் வாழ்த்து

**பாட்னா, நவ.21:**

ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ் குமார், பீகார் முதல்வராக 10வது முறையாக நேற்று பதவி ஏற்றார்.

விழாவில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

மத்திய அமைச்சர் ஜெ.பி. நட்டா, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள், கூட்டணி தலைவர்கள் பங்கேற்றனர். இவர்களும் நிதிஷ்குமாருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

பீகாரில் நடந்த சட்டசபை தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களை பிடித்து அமோக வெற்றி பெற்றது. கூட்டணியில் இடம் பெற்ற பா.ஜ.க. 89; ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களை பிடித்தன.

இதனையடுத்து தேசிய ஜனநாயக கூட்டணியின் புதிய எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் நிதிஷ்குமார் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

### கவர்னர் அழைப்பு



அதன் பிறகு கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் சென்று கவர்னர் ஆரிப் முகமது கானை சந்தித்த நிதிஷ்குமார், எம்.எல்.ஏ.க்களின் கடிதங்களை வழங்கி, புதிய ஆட்சி அமைப்பதற்கான நடைமுறைகளைத் தொடங்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி நடப்பு சட்டசபை கலைக்கப்பட்டு, மாநிலத்தில் ஆட்சியமைக்க நிதிஷ்குமாருக்கு கவர்னர் அழைப்பு விடுத்தார்.

இதனை தொடர்ந்து பாட்னாவில் உள்ள காந்தி அரங்கில் நேற்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில் 10வது முறையாக முதலமைச்சராக நிதிஷ் குமார் (வயது 74) பதவியேற்றார். கவர்னர் ஆரிப் முகமது கான் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதனை தொடர்ந்து 26 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

பா.ஜ.க.வின் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜயகுமார் சின்ஹா ஆகியோர் அமைச்சராகபொறுப்பேற்றனர். இவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்கிறார்கள்.

இதனையடுத்து பா.ஜ.க.வை சேர்ந்த திலீப் ஜெய்ஸ்வால், மங்கள் பாண்டே, ராம் கிருபால் யாதவ், சந்தோஷ் சுமன், நிதின் நபி, சஞ்சய் சிங் டைகர், அருண் சங்கர் பிரசாத், சுரேந்திர மேத்தா, நாராயண் பிரசாத், ராம நிஷாத், லகேந்திர குமார் ரோஷன், பிரமோத் குமார், சஞ்சய் குமார் சிங்,

தீபக் பிரகாஷ், சஞ்சய் குமார், ஸ்ரேயாசி சிங், ஐக்கிய ஜனதா தளத்தை சேர்ந்த விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரோவன் குமார், அசோக் சவுத்ரி, லெஷி சிங், மதன் சாஹ்னி, சுனில் குமார், முகமது ஜமா கான் ஆகியோர் அமைச்சர்களானார்கள்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY
NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-446

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்



தக்க பெரியாரின் கூட்டத்தில் உள்ளனவாய் நடக்கவல்ல ஒருவனுக்கு,அவனுடைய பகைவர் செய்யக்கூடியத் தீங்கு ஒன்றும் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



ஆள் பார்த்து கூலி
கொடுப்பவன்
மனிதன்....

ஆடிய ஆட்டத்திற்கு
எல்லாம் கூலி
கொடுப்பவன்
கடவுள்...

**உஷா முத்துராமன்**

## 'பசுமையான பூமி என்னாலே தொடங்கும்' என்ற மிதிவண்டிப் பயணத்தின் நிறைவு விழா




சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி, தமிழ்நாடு துறவியர் பேரவை ஏற்பாட்டில், கன்னியாகுமரி முதல் சென்னை வரையிலான 'பசுமையான பூமி என்னாலே தொடங்கும்' என்ற மிதிவண்டிப் பயணத்தின் நிறைவு விழா, சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடந்தது. இதில் மாணவர்களை துணை முதல்வர் உதயநிதி வாழ்த்தினார்.

## மகரிஷி வித்யா மந்திர பள்ளியின் என்.சி.சி மாணவர்களின் மரக்கன்றுகள் நடும் விழா



11 (TN) சிக்னல் கம்பெனி சேலம் நடத்திய மரக்கன்றுகள் நடும் விழாவில், ஹோசூர் மகரிஷி வித்யா மந்திர பள்ளியின் என்.சி.சி மாணவர்களும் பங்கேற்றனர். என்.சி.சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், 11.11.2025 அன்று, மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன், 100-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

## எஸ்ஐஆர் படிவங்களை பதிவேற்றும் பணி



நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் எஸ்ஐஆர் படிவங்களை பதிவேற்றும் பணிகளை கலெக்டர் அழகுமீனா நேற்று ஆய்வு செய்தார்.

## பாஜக அலுவலகத்தில் நடந்த ஆலோசனை கூட்டம்



திருநெல்வேலி மாவட்ட பாஜக அலுவலகத்தில் நேற்று நடந்த ஆலோசனை கூட்டத்தில் மாநிலத்தலைவர் நயினார்நாகேந்திரன் பேசினார்.

# அறிஞர் அண்ணா காந்திநகர் மாவட்ட கிளை நூலகத்தில் 58வது நூலக வார விழா!

**வேலூர்,நவ.21:**

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காந்திநகர் அறிஞர் அண்ணா கிளை நூலகத்தின் வாசகர் வட்டத்தின் சார்பில் காங்கேயநல்லூர் திருமுருக கிருபானந்த வாரியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 58வது நூலக வார விழா 19.11.2025 காலை 9.30 மணியளவில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வாசகர் வட்ட தலைவர் வி.பழனி தலைமை தாங்கினார். முன்னதாக துணைத்தலைவர் செ.நா.ஜனார்த்தனன் வரவேற்று பேசினார். பள்ளியின் தலைமையாசிரியை எஸ்.பிரேமா முன்னிலை வகித்து பேசினார்.



ஓய்வு பெற்ற பேராசிரியை எம்.எஸ்.கலைச்செல்வி 100 மாணவிகளுக்கு நூலக உறுப்பினர் அட்டைகளை வழங்கி பேசினார்.

வாசகர் வட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சீனிவாசன், எஸ்.எஸ்.சிவவடிவு, ஆர். விஜயகுமாரி, ஆறுமுகம், வாசகர் வட்ட தலைவர் பழனி உள்ளிட்டோர் பேசினர்.

பள்ளியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முடிவில் நல்நூலகர் தி.மஞ்சுளா, எ.சத்யவாணி ஆகியோர் நன்றி கூறினர்.

## பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி

**கள்ளக்குறிச்சி,நவ.21:**

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வட்டார வளமையத்தில் மாவட்ட அளவிலான பள்ளி மேலாண்மை குழு உளுந்தூர்பேட்டை திருநாவலூர் திருக்கோவிலூர் இருந்து தெரிவு செய்யப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சியை உளுந்தூர் பேட்டை வட்டார வளமைய மேற்பார்வையாளர் மா. சு. சக்திவேல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி தொடங்கி வைத்தார்.



இப்ப பயிற்சியில் பள்ளி மேலாண்மை குழுவின் முக்கியத்துவம் பள்ளி மேலாண்மை குழு சார்ந்து பள்ளிக்கல்வித்துறையால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள் முக்கிய அரசாணைகள் பெற்றோர் செயலில் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 ன் படி குழந்தைகளின் உரிமைகளை நிவர்த்தி செய்ய தேவைகளுக்கு ஏற்ப தீர்மானங்கள் எவ்வாறு நிறைவேற்றுவது செயல்படுத்துவது மற்றும் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி முன்னாள் மாணவர்கள் பங்களிப்பு சிஎஸ்ஆர் நிதியை பெற்று எஸ் எம் சி மூலம் பள்ளியின் தேவைகளை நிறைவேற்றுவது சார்ந்து பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இப் பயிற்சியினை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் வட்டார கல்வி அலுவலர் அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டு பள்ளி மேலான குழுவின் முக்கியத்துவம் சார்ந்து உரையாற்றினர்.

இப்ப பயிற்சியை வழங்குவதற்காகமாநில கருத்தாளர்கள் திரு ஷியாம் சுந்தர் திரு சதீஷ்திருமதி யோக நந்திதிரு சுரேஷ் செயல்பட்டனர்.

இப்ப பயிற்சியில்மூன்று ஒன்றியங்களை சார்ந்த 61இருபால் தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்றநர்கள் காசு லிங்கம் ரம்யா சரிதா ஜெயலக்ஷ்மி ஜெயக்குமார் ரகுபதி ராஜலட்சுமி ராதா அவர்கள் கலந்து கொண்டனர்.

இப்ப பயிற்சிக்கான ஏற்பாடுகளையும் நன்றி உரையையும் வட்டார பள்ளி மேலாண்மை குழு ஒருங்கிணைப்பாளர் அரசு அவர்கள் வழங்கினார்.

## கார்த்திகை மாத அமாவாசையை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி







**பொள்ளாச்சி, நவ.21:**

பொள்ளாச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கார்த்திகை மாத அமாவாசை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து பிரசாதம் நெய்வேத்தியங்களுடன், பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி, வேத மந்திரங்கள் ஒலிக்க மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப் பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எம்.ஆர்.டி.எஸ். ரயில்வே மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அழகுப்படுத்தும் பணிக்கும் அடிக்கல்



சென்னை சுவாமி சிவானந்தா சாலையில் உள்ள எம்.ஆர்.டி.எஸ். ரயில்வே மேம்பாலத்தின் கீழ் உள்ள பகுதியை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அழகுப்படுத்தும் பணியினை அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

## 63 நாயன்மார்களின் விமானங்கள் வர்ணம் பூசப்பட்டு தயார் நிலையில் உள்ளது





**திருவண்ணாமலை, நவ.21:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அண்ணாமலையார் ஆலயத்தில் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் வண்ணம் தீட்டுதலும் வேலைப்பாடுகளுடன் அலங்காரத்தில் மற்றும் 63 நாயன்மார்களின் விமானங்கள் வர்ணம் பூசப்பட்டு தயார் நிலையில் உள்ளது.


**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அரசுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை மேயர் ஜெகன் பெரியசாமி வாழ்த்தினார்



தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டு துறை தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் பகுதிநேர நாட்டுப்புற கலை பயிற்சி மையத்தில் 2024-25 ஆம் ஆண்டிற்கான அரசுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை மேயர் ஜெகன் பெரியசாமி வாழ்த்தினார்.

# அண்ணாமலையார் திருக்கோவிலில் ஒன்பது கோபுரங்களும் மின் ஒளியில் ஜொலித்தன



திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அண்ணாமலையார் திருக்கோவிலில் உள்ள ஒன்பது கோபுரங்களும் மின் ஒளியில் ஜொலித்தன.

# தேசிய பால் தின விழாவை முன்னிட்டு நடமாடும் ஆவின் பாலகம் துவக்க விழா




**திருவண்ணாமலை, நவ.21:**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தேசிய பால் தின விழாவை முன்னிட்டு பால் உற்பத்தியாளர்கள் உடன் கலந்தாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்கள், மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள், உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழக தோழர்கள் அனைவரின் தலைமையில் நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## நவ. 25, 26 முதல்வர் கோவை, ஈரோடு பயணம்

**சென்னை, நவ.21:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், நவம்பர் 25, 26 தேதிகளில் கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்கிறார். கோவையில் அமைக்கப் பட்டுள்ள 'செம்மொழி பூங்கா' மற்றும் பொல்லான் பகடை மணி மண்டபத்தை நவம்பர் 25 அன்று முதலமைச்சர் திறந்து வைக்கிறார் அதே நாளில் கோவையில் நடைபெறும் முதலீட்டாளர் மாநாட்டில் முதல்வர் பங்கேற் கிறார். முதலமைச்சர் முன்னிலையில் பல்வேறு முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்!

**சென்னை, நவ. 21:**

குமரிக்கடலில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி, தற்போது லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு பகுதிகளில் உள்ளது. தென்கிழக்கு வங்கக் கடலில் நவம்பர் 22-இல் உருவாகும் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக வலுப் பெறும். இது மேற்கு - வட மேற்கு திசையில் நகரும் என்றும், இதனால், நவம்பர் 24 அன்று காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகும் என இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது. மேலும், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு உள்ள தாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர்களுக்கு ஜனவரியில் தகுதித் தேர்வு

**சென்னை, நவ. 21:**

தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாமல் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 2026 ஜன வரி 24, 25 தேதிகளில் தகுதி தேர்வு நடைபெறும் என ஆசி ரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது. இத்தேர்வை எழுதுவதற்கு, நவம்பர் 20 முதல் டிசம்பர் 20 வரை www.trb.tn.gov.in இணையதளத்தில் விண்ண ப்பிக்கலாம். 2025 செப்டம்பர் ஒன்றாம் தேதிக்கு முன் னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என வாரியம் தெரிவித்துள்ளது.

## டிஎன்பிஎஸ்சி 'குரூப் - 2' பணியிடங்கள் அதிகரிப்பு!

**சென்னை, நவ.21:**

குரூப் 2 மற்றும் 2ஏ ஆகிய பதவிகளில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 1,270 ஆக அதிகரிக்கப்பட்டு உள்ளதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.




தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் சார்- பதிவாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், வன வர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் உதவியா ளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கான 645 காலிப்பணி யிடங்களை நிரப்புவதற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு 2-க்கு, கடந்த ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 13 வரை ஆன்லைன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விண்ணப்பங்களைப் பெற்றது. தொடர்ந்து முதல்நிலைத் தேர்வு செப்டம்பர் 28 அன்று நடைபெற்றது. இந்தத் தேர்வினை எழுதுவதற்கு 5 லட்சத்து 53 ஆயிரத்து 635 பேர் விண்ணப்பம் செய்தனர். அவர்களில் ஒருவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

மீதமுள்ளவர்களில் 2 லட்சத்து 12 ஆயிரத்து 495 ஆண்களும், 3 லட்சத்து 41 ஆயிரத்து 114 பெண்களும், மாற்றுப் பாலினத்தவர் 25 பேரும் உள்ளனர். இந்த நிலையில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் கோபாலசுந்த ரராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு 2 (தொகுதி II மற்றும் IIA பணிகள்) இல் 625 காலிப்பணியிடங்கள் கூடுதலாக அறிவிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பிஎச்.டி மாணவர்களின் செயல்முறை விளக்கத்தில் தமிழக ஆளுநர் பங்கேற்க வேண்டும்: அமைச்சர் அன்பில் மகேஸ்



**சென்னை, நவ.21:**

'தமிழகத்தில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் செயல்முறை விளக்கத்தில் ஆளுநர் ஆர் .என் .ர வி பங்கேற்க வேண்டும்' என்று அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார். பொது நூலகத் துறை சார்பில் சிறப்பாக செயல்பட்ட நூலகங்கள், நூலகர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ், 40 நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது (நல்நூலகர் விருது), 25 நூலகர்களுக்கு நூலக ஆர்வலர் விருது (வாசகர் வட்டம்) ஆகியவற்றை வழங்கினார். மேலும், உறுப்பினர், புரவலர் மற்றும் நன்கொடை அதிகமாக சேர்க்கப்பட்ட 12 நூலகங்களுக்கும் அவர் கேடயங்களை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து, மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள் வழங்குவதற்காக சாம்சங் நிறுவனத்துடன், தமிழக பள்ளிக்கல்வித் துறை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதன் மூலம் காஞ்சிபுரம், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலர் பி.சந்திரமோகன், இயக்குநர் ச.கண்ணப்பன், பொது நூலகத் துறை இயக்குநர் ச.ஜெயந்தி, இணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: மாநில கல்விக் கொள்கை அடிப்படையில் புதிய பாடத் திட்டத்தை அமல்படுத்தும் விதமாக உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான ஆலோசனைக் கூட்டம் 24-ம் தேதி நடைபெற உள்ளது.

வரும் கல்வியாண்டுகளில் புதிய பாடத்திட்டத்தை கொண்டுவர முயற்சித்து வருகிறோம். தமிழகம் எந்தெந்த துறைகளில் முதன்மையானதாக இருக்கிறதோ, அதையெல்லாம் ஆளுநர் விமர்சனம் செய்கிறார்.

ஆராய்ச்சிப் படிப்புகளில் தரம் இல்லை என ஆளுநர் சொல்வதை ஏற்க முடியாது. எங்கே தவறு உள்ளது என்பதை சுட் டிக்காட்டினால் திருத்திக் கொள்ள தயாராக உள்ளோம். தரத்தை தெரிந்துகொள்ளலாம் தமிழகத்தில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் செயல்முறை விளக்க நிகழ்ச்சியில் ஆளுநர் பங்கேற்று கேள்விகள் கேட்க வேண்டும்.

அப்போது மாணவர்கள் சொல்லும் பதிலில் இருந்து நமது கல்வியின் தரத்தை ஆளுநர் தெரிந்துகொள்வார். ராமேசுவரம் அருகே மாணவி கொலையான விவகாரத்தில் சம்பவம் பள்ளி வளாகத்துக்கு வெளியே நடந்துள்ளது. ஆனாலும், அதுகுறித்து விசாரிக்கப்படும். அதேபோல், பள்ளி வளாகத்துக்குள்ளும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் சவால் விடும் தேமுதிக - பிரேமலதா பிரகடனம்

**வேடச்சந்தூர், நவ.21:**

ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் சவால்விடும் கட்சியாக தேமுதிக உள்ளதாக தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் நேற்று இரவு 'உள்ளம் தேடி இல்லம் நாடி' பிரச்சார பயணம் மேற்கொண்ட பிரேமலதா அங்கு பேசியதாவது: 2026 தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தேமுதிக பெறும். ஆளும் கட்சிக்கும் ஆண்ட கட்சிக்கும் சவால்விடும் வகையில் தமிழகத்தில் வாக்குச் சாவடி முகவர்களை நியமித்துள்ளோம். அடுத்ததாக கடலூரில் 'மக்கள் உரிமை மீட்பு மாநாட்டை நடத்த இருக்கிறோம்.

அதற்காக அனைவரும் கடலூரை நோக்கி வரவேண்டும். அந்த மாநாட்டின் வெற்றிதான் நமது 2026 தேர்தல் வெற்றிக்கான அச்சாரம். வரும் தேர்தலில் மக்கள் விரும்பும் வெற்றிக் கூட்டணியை அமைப்போம். எஸ்ஐஆர் பணிகளின் போது நமது வாக்கு இருக்கிறதா என உறுதிப்படுத்த வேண்டும். அப்படி உறுதிப்படுத்தி விட்டால் நமது வாக்கை யாரும் திருட முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.

# முட்டை திடீர் விலை ஏற்றத்திற்கு காரணம் என்ன?

**நாமக்கல், நவ.21:**

முட்டை உற்பத்திக்கு பெயர் பெற்றது நாமக்கல் மாவட்டமாகும். சிறு, குறு பண்ணைகள் என 1300-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் நாமக்கல்லில் செயல்பட்டு வருகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் தமிழ்நாடு மட்டுமின்றி, அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரா, கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களுக்கும், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. தினமும் 80 லட்சம் முதல் 1 கோடி முட்டைகள் வரை நாமக்கல்லில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அரசுப் பள்ளிகளில் உணவு வழங்கும் பொழுது, சத்துணவாக முட்டையும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான முட்டைகளும் நாமக் கல்லில் இருந்து தான், தமிழகத்தின் பல்வேறு பகுதியில் உள்ள அரசுப் பள்ளி களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தினந்தோறும் முட்டை விலை விவரங் களை தொகுத்து வெளியிட்டு வருகிறது. இதில், கடந்த சில வாரங்களாக முட்டை விலை புதிய உச்சத்தை தொட்டுள்ளது. கடந்த மாதத்தில் 5 ரூபாய் வரை விற்கப்பட்ட வந்த முட்டை, தற்போது ரூ. 6.05 வரையிலும் விற்பனை செய்யப் பட்டு வருகிறது. முட்டை விலை உயர்வி னால் முட்டை பயன்பாடு சார்ந்த உணவுப் பொருட்களின் விலையையும் கணிசமாக அதிகரிக்க வேண்டிய சூழலில் கடை வியாபாரிகள், முட்டை விற்பனையாளர் கள், உணவகங்கள் நடத்துவோர் தள்ளப் பட்டுள்ளனர். முட்டை விலை தொடர்ந்து உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விலை உயர்வு குறித்து தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க மண்ட லத் தலைவர் கே. சிங்கராஜா கூறுகையில், "தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவின் பல் வேறு மாநிலங்களுக்கும் நாமக்கல்லில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் ஏற்று மதி செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு காலங்களிலுமே சீசனுக்கு ஏற்றாற்போல முட்டை விலையில் ஏற்ற, இறக்கம் இருந்து வருவது வாடிக்கையான ஒன்றா கும். ஆனால் கடந்த சில நாட்களாக முட்டை விலை அதன் உச்சத்தை தொட்டு தற்போது ஆறு ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலை உயர்வுக்கு பல்வேறு கார ணங்கள் உள்ளன.

முதலில் தற்போதைய சூழலைப் பொறுத்தவரை குளிர்காலம் என்பதால், வெளிமாநிலங்களில் முட்டை சார்ந்த உணவு தேவைக்காக முட்டைகள் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுவது விலை அதிகரிப்புக்கு ஒரு காரணம். முக்கிய மாக, டிசம்பர் மாத இறுதியில் வரும் கிறிஸ் துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டு நாட் களையொட்டி கேக் விற்பனை அதிகமாக இருக்கும். கேக் தயாரிப்பின் மூலப் பொருளாக முட்டை உள்ளதால், இதன் காரண மாகவும் முட்டை விலையில் தொடர்ந்து உயர்வு இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. தற்போது கோழிகளுக்கான தீவனம் முட்டை தொழில் சார்ந்த விற்பனை ஏஜெண்டுகளுக்கான கமிசன், வண்டி வாடகை, ஆள் கூலி, மின்கட்டணம், கட்டிட வாடகை, தொடர்ந்து தொழில் நடத்துவதற் கான இதர செலவினங்கள், பராமரிப்பு செலவுகள் அதிகரித்துள்ளது. இதன் கார ணமாகவும் முட்டை விலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முட்டை விலை உயர்வு இதே நிலையில் நீடிக்கும் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. சிறிய அளவிலான மாற்றங்கள் எதிர்வரும் நாட்களில் இருக்கலாம். ஏனெனில் தற்போது ஐயப்ப பக்தர்கள் மாலையிட தொடங்கியுள்ளதால், முட்டை நுகர்வு ஓரளவுக்கு குறைய தொடங்க லாம். இவையெல்லாம் அடுத்த நான்கு நாட்களுக்குப் பிறகே முட்டை விலையில் எத்தகைய மாற்றம் இருக்கும் என்பதை தெரிவிக்க முடியும். எனவே, தொழில் நடத்துபவர்களும் பொதுமக்களும் தொடர்ந்து நாமக்கல் முட்டை உற்பத்தியாளர்களுக்கு ஆதர வை அளிக்க வேண்டும்" என்றார். மொத்த கொள்முதல் விற்பனை 6 ரூபாய் என இருந்தாலும், பல்வேறு படிநிலை களை தாண்டி கடைகளுக்கு முட்டை வந்து, அது பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் பொழுது ரூ. 6.80 முதல் ரூ. 7 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கடந்த நான்கு நாட்களாக முட்டை வாங்குவதை பொது மக்களில் கணிசமானோர் தவிர்த்து வருகின்றனர். அதேநேரத்தில் முட்டை விலை உயர்வால் கோழிப் பண்ணை உரிமையா ளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## உணவே மருந்து!

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களில் ஒன்று நீரிழிவு எனும் சர்க்கரை நோய். ஒவ்வொரு 10 விநாடிக்கும் சர்க்கரை நோய் தொடர்பாக ஒருவர் உயிரிழக்கிறார். புகைப்பதற்கு அடுத்தபடியாக மாரடைப்புக்கு முக்கியக் காரணமாக இருப்பது சர்க்கரை நோய்தான்.

சிறுநீரக நோய்களுக்கு முக்கிய காரணமாக சர்க்கரை நோய் உள்ளது. இப்படி மனித வாழ்வின் தரத்தை வெகுவாகக் குறைக்கக் கூடிய சர்க்கரை நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஐ.நா. சபை அறிவித்ததுதான் உலக சர்க்கரை நோய் தினம் (நவ.14). சர்க்கரை என்பது நமது உடலுக்கு எரிபொருளாகப் பயன்படுவது. நாம் உண்ணும் அனைத்து உணவிலும் உள்ள சர்க்கரையை உடல் எரித்து உங்களுக்கு ஆற்றலாக வழங்குகிறது. இதுதான் இயற்கை. உடலுக்கு எரிபொருளாக இருக்கக்கூடிய சர்க்கரை எவ்வாறு நோயாக மாறுகிறது?

பசிக்காமல் சாப்பிடுவது; பசித்துச் சாப்பிடாமல் இருப்பது; அவசர அவசரமாக சாப்பிடுவது; வயிறு புடைக்க சாப்பிடுவது; சாப்பிட்ட பிறகு குளிப்பது; சாப்பிட்ட பிறகு வயிறு வீங்கும் அளவுக்கு தண்ணீர் பருகுவது; உணவை சுவைக்காமல் சாப்பிடுவது; உணவை பற்களால் நன்கு அரைக்காமல் சாப்பிடுவது; பால், தேநீர், குளிர்பானம் மற்றும் செயற்கை உணவுகளை சாப்பிடுவது; மலம் மற்றும் சிறுநீரை அடக்குவது; இரவு நேரங்களில் உறங்காமல் விழித்திருப்பது; வாயால் மூச்சு விடுவது; குடிப்பழக்கம்; உழைக்காமல் வாழ்வது; அதிக நேரம் குளிர்சாதன அறையில் நேரத்தைச் செலவிடுவது.

மேற்கண்ட விஷயங்களை நாம் செய்யும் போது நாம் உண்ணக்கூடிய உணவானது முழுமையாக ஜீரணம் ஆகாது. அந்த உணவில் இருந்து பெறக்கூடிய சர்க்கரை நம்முடைய உடலில் உள்ள உறுப்புகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு தரமான சர்க்கரையாக இருக்காது. நமது ஜீரண மண்டலத்திலிருந்து ஜீரணமான சர்க்கரை ரத்தத்தில் கலக்கிறது. இவ்வாறு ரத்தத்தில் கலக்கக்கூடிய சர்க்கரையை உடல் உறுப்புகள் ஏற்றுக் கொள்கின்றன.

சர்க்கரை தரமானதா, தரமற்றதா என்பதை உடல் உறுப்புகள் அறிந்து கொள்வதற்கு ஓர் அமைப்பு அவசியம் தேவை. அதற்குப் பெயர்தான் இன்சுலின்; அது உடலில் உள்ள எந்தெந்த சர்க்கரையை குறித்துக் காட்டுகிறதோ, அதை மட்டும் தான் உறுப்புகள் ஏற்றுக்கொள்ளும். இதுதான் சர்க்கரையின் தரம் பிரித்தறிந்து உட்கொள்வதற்கு உடல் கையாளும் உத்தி.

நாம் உண்ணும் உணவு முழுமையாக ஜீரணமாகாமல் ரத்தத்தில் கலந்தால், அதைக் குறைப்பதற்கு இன்சுலின் சுரக்காது. இன்சுலின் குறைக்கப்படாத சர்க்கரை உங்கள் ரத்த ஓட்டத்தில் சுற்றிக் கொண்டே இருக்கும். இதை சிறுநீரகங்கள் அதிகமாக நீர் வடிவில் வெளியேற்றம் செய்யும். இப்படி வெளியேறும் நீர் ஓரளவுக்கு அதிகமாக இருந்தால் அதுவே நீரிழிவு என்ற சர்க்கரை நோய். வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டு தெளிவான சரியான ஜீரணத்தை உடலுக்கு வழங்கினால் சர்க்கரை நோய் அறவே வராது.

சர்க்கரை நோய் வராமல் தடுக்க அல்லது வந்தால் அதைக் கட்டுப்பாட்டில் வைக்க, எப்போது சாப்பிட்டாலும் முதலில் நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் சாலட்டில் ஆரம்பித்து, அதற்கு அடுத்தபடியாக புரதம் நிறைந்த உணவுகளையும், இறுதியாக கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சாலடுகள், அனைத்துக் காய்கறிகளின் ஊட்டச் சத்தையும் உள்ளடக்கிய சிறந்த உணவாகும். அவை குறைந்த கலோரிகள் மற்றும் அதிக ஊட்டச்சத்துகள் கொண்டவை.

இந்த முறையில் நீங்கள் சாப்பிட ஆரம்பித்தால் 46% ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதைத் தடுக்க முடியும். இதே உணவு முறை டைப்- 2 சர்க்கரை நோயாளிகளின் ரத்த சர்க்கரை அளவை 53% குறைக்கும் என்கிறார்கள். நியூயார்க் வெஸ்ட் கார்னெல் மெடிசன் அமைப்பு ஆராய்ச்சியாளர்கள், சாப்பிட்டவுடன் நமது ரத்தத்தில் சர்க்கரையை அதிகரிப்பது ஜிஎல்பி-1 என்ற ஹார்மோன்தான்; மேற்கண்ட வகையில் சாப்பிடும்போது ஜிஎல்பி-1 தீவிரம் தவிர்க்கப்படுகிறது என்கிறார்கள்.

சர்க்கரை அளவை எப்போதும் கட்டுப்பாட்டில் வைக்க உங்கள் உணவில் 55% கார்போஹைட்ரேட் உணவுகளும், 35% புரதம் நிறைந்த உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் கனடா ஆன்டரியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

# “அடுத்த ஆண்டு ஜூனில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம்” - நயினார் நாகேந்திரன் உறுதி

**திருநெல்வேலி, நவ.21:**

“கோவை, மதுரையில் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டுவரப்படும்” என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் உறுதிபட தெரிவித்தார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் புழக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 14 சதவீதம், பாலியல் குற்றங்கள் 53 சதவீதம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 60 சதவீதம் அதிகரித்துள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 18,200 பாலியல் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இது கடந்த ஆட்சியைவிட 17 சதவிகிதம் அதிகமாகும்.

இந்தியாவிலேயே தற்கொலை முயற்சி அதிகம் நடைபெறும் மாநிலமாக தமிழகம் உள்ளது. தற்கொலைகளின் தலைநகராக மாறியிருக்கிறது. சொத்து வரி, மின் கட்டணம் உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி மாநகரப் பகுதி முழுவதும் பெரும்பாலான சாலைகள் பாதாள சாக்கடை பணிக்காக சேதப்படுத்தப்பட்டு அலங்கோலமாக காட்சியளிக்கிறது. கட்டிடங்கள் கட்டும் அனுமதிக்காக, ஒரு சதுர அடிக்கு ரூ.600 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இவைஎல்லாவற்றையும்மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் தெளிவாக உள்ளனர். ஆனால், உதயநிதி ஸ்டாலினை முதல்வராக்க வேண்டும் என்று பயபக்தியுடன் கூட்டணியை நடத்துவதில் திமுகவினர் தெளிவாக உள்ளனர்.

பிரதமர் மோடி கோவையில் கலந்துகொண்ட விவசாயிகள் மாநாட்டில் ரூ.18 ஆயிரம் கோடியை விவசாயிகளுக்கு வழங்கியிருந்தார். ஆனால் அவர் மீது குறை கூறி வருகின்றனர்.

மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்துவிட்டதாக மக்களை மடைமாற்றம் செய்ய ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். ஆனால் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் நிராகரிக்கப்படவில்லை. அதில் சில விளக்கங்கள் கேட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் மெட்ரோ ரெயில் திட்டத்தை கோவை பகுதிக்கு கொண்டு வரக் கூடாது என்ற நோக்கத்துடன் அந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தோன்றுகிறது.

கோவை மாவட்டத்தில் அதிகளவில் அதிமுக, பாஜகவினர் இருப்பதால் இந்த விவகாரத்தில் அரசியல் செய்யப்படுகிறது. இந்த திட்டத்தை மத்திய அரசு ஒட்டுமொத்தமாக மறுக்கவில்லை. திட்டத்துக்கான திருத்தப்பட்ட விரிவான அறிக்கையை திருப்பி அனுப்ப அறிவுறுத்தியுள்ளது. கோவையில் ரயில் நிலையத்துக்கும், பஸ் நிலையத்துக்கும் இடையேயான தூரம் குறைவாக இருக்கிறது. குறைந்தபட்சம் 22 மீட்டர் தொலைவு இருக்க வேண்டும்.

மெட்ரோ ரயில் திட்டம் குறித்த அறிக்கை கடந்த 14-ம் தேதியே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இவ்வளவு நாட்கள் கழித்து பிரதமர் வந்தபின்னர் போராட்டம் நடத்துகிறார்கள்.

அமெரிக்க அதிபருக்கே சவால்விடும் அளவுக்கு துணிச்சலுள்ள பிரதமருக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதித்துள்ளனர். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டுவரப்படும்” என்று தெரிவித்தார்.




## கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்கள்: பிரதமரிடம் பழனிசாமி கோரிக்கை மனு





**கோவை, நவ.21:**

கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களை விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி பிரதமர் மோடியிடம், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கோரிக்கை மனு வழங்கினார். மேலும் பிரதமரை வரவேற்ற பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை. உடன், புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம்.

கோவையில் நேற்று நடந்த தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்க வந்த பிரதமர் மோடியை விமான நிலையத்தில் வரவேற்ற பழனிசாமி, பின்னர் பிரதமரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: இயற்கை விவசாயத்தில் விளைச்சல் குறைவாக உள்ள நிலையில், விவசாயிகளுக்கு மண் புழுக்கள், நுண்ணுயிரிகள், இயற்கை உரங்களை மானிய விலையில் வழங்க வேண்டும். கோவையில் தேங்காய், தக்காளி, ஈரோட்டில் மஞ்சள், தருமபுரி, கிருஷ்ணகிரியில் மாம்பழம், டெல்டா மாவட்டங்களில் நெல், திருச்சியில் வாழை, கரும்பு என பரவலாக சாகுபடி செய்யப்படும் பயிர்களை இயற்கை விவசாயத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். இந்தப் பயிர்களுக்கு தனி மானியத் திட்டங்களை அறிவிப்பதுடன், இயற்கை வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்ய அரசு நேரடி சந்தையை அமைக்க வேண்டும்.

கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்டங்களை விரைவாக செயல்படுத்த வேண்டும். டிராக்டர், விவசாயக் கருவிகளுக்கான ஜிஎஸ்டி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. அதேபோல, விவசாய, வீட்டுப் பயன்பாட்டுக்கான மோட்டார் பம்புகள்மீதான ஜிஎஸ்டியை 5 சதவீதமாக குறைக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘ரூப் டாப்’ சூரிய ஒளி மின் உற்பத்திக்கு தமிழகத்தில் மட்டும் ‘நெட்வொர்க் கட்டணம்’ வசூலிப்பதால் பாதிப்பு



**சென்னை, நவ.21:**

இந்திய தொழில் வர்த்தக சபை கவுரவச் செயலாளர் பிரதீப் செய்தியாளரிடம் கூறியதாவது: தமிழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தியில் மொத்தமுள்ள 10,153 மெகாவாட் மின் உற்பத்திக் கட்டமைப்பில், 7,000 மெகாவாட் தரையில் அமைக்கப்படும் சூரிய ஒளி மின்உற்பத்திக்கான கட்டமைப்பு, 3,000 மெகாவாட் ‘ரூப் டாப்’ மின்உற்பத்திக்கான கட்டமைப்பு உள்ளது.

தங்களின் இடத்தில் உள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் (ரூப் டாப்) தாங்களாகவே முதலீடு செய்து பேனல்கள் அமைத்து சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்பவர்களுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், தமிழகத்தில் மட்டும் இதற்கு ‘நெட்வொர்க்’ கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மேலும், மின் கட்டணம், நிலைக் கட்டணம் ஆகியவற்றையும் தமிழக அரசு உயர்த்தியுள்ளதால், உள்நாட்டு சந்தையில் தமிழகத்தைச் சேர்ந்த தொழில் துறையினர், மற்ற மாநிலங்களுடன் போட்டியிட முடியாத நிலை தொடர்கிறது.

எனவே, உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தைக் குறைக்கவும், ‘நெட்வொர்க்’ கட்டணம் வசூலிக்கும் முறையை திரும்பப் பெறவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து, தொழில் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்த வேண்டும்: உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்

**வண்டலூர், நவ.21:**

விளையாட்டுத் துறையில் இந்தியாவில் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துவதே நமது இலக்காக இருக்க வேண்டும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். வண்டலூர் அருகே மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பில் சர்வதேச தரம் வாய்ந்த நீச்சல் குளம் கட்டப்பட்டுள்ளது.

அதே போன்று அதே வளாகத்தில் ரூ.2 கோடி மதிப்பில் மேஜைப்பந்து விளையாட்டுக்கான முதன்மை நிலை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான திறப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா தலைமை தாங்கினார்.



இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நீச்சல் குளம் மற்றும் மேஜைப்பந்து முதன்மை நிலை மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து வி.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு துணை முதல்வர் உதயநிதி தாம்பரம் மாநகராட்சி, மதுராந் தகம், செங்கல்பட்டு, மாமல்லபுரம் நகராட்சி, திருப்போரூர், திருக்கழுகுன்றம் உள்ளிட்ட பேரூராட்சிகளின் மாணவ, மாண வியருக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது: சாதி, மதம், இனம், மொழி, ஈகோ ஆகியவற்றை எல்லாம் தாண்டி நம்மை இணைப்பது இந்த விளையாட்டு ஒன்றுதான். இதில் சாதித்தால் நமது மாநிலத்துக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்ப்பதோடு, உங்களுக்கும் எதிர் கால வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும். ஏனெனில் நமது அரசு இந்தியாவிலேயே முதன் முறையாக மாநில அரசு வேலைகளில் 3 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்குகிறது.

இதன் மூலம் கடந்த ஆண்டு 100 பேருக்கு அரசு வேலை கிடைத்துள்ளது. இந்த ஆண்டும் 100 பேருக்கு கிடைக்க உள்ளது. உங்களுக்கு அனைத்து விதத்திலும் இந்த அரசு துணை நிற்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, அமைச்சர் தா.மோ.அன்பரசன், செங்கை ஆட்சியர் சினேகா, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர், எம்எல்ஏக்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி, உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கல்பாக்கத்தை ஒட்டிய கடலோர பகுதிகளில் பாதுகாப்பு ஒத்திகை - ஈசிஆர் சாலையில் வாகன சோதனை தீவிரம்

**கல்பாக்கம், நவ.21:**

மாமல்லபுரம், கல்பாக்கம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழுமத்தினரும் காவல்துறையினரும் இணைந்து பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக, ஈசிஆர் சாலையில் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவுவதை தடுப்பதற்காக பாதுகாப்புப் படையினர் ஆண்டுதோறும் பல்வேறு ஒத்திகை நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கடலோர பாதுகாப்பு குழும போலீஸாரும் உள்ளூர் சட்டம்-ஒழுங்கு போலீஸாரும் இணைந்து சாகர் கவாச் எனப்படும் கடல் பாதுகாப்பு ஒத்திகையை தொடங்கியுள்ளனர். இன்றும் நாளையும் இந்த ஒத்திகை நடைபெற உள்ளது.

ஒத்திகையின் முதல் நாளான இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமப்பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் மற்றும் போலீஸார் கடற்கரையில் தீவிர ரோந்து மற்றும் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், சர்வதேச சுற்றுலா தலமான மாமல்லபுரத்திலும், சென்னை அணுமின் நிலையம், இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள கல்பாக்கம் பகுதிக்கு செல்லும் சாலையிலும் சதுரங்கப்பட்டினம் போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், கல்பாக்கம் உள்பட கடலோர கிராமப்பகுதிகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதவிர, தீவிரவாதிகள் போல் கடல் வழியாக ஊடுருவ முயலும் நபர்களை பிடிக்கும் ஒத்திகையில் போலீஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்கரையில் கண்காணிப்பு மற்றும் சோதனைகளில் கடலோர பாதுகாப்பு குழும போலீஸார் ஈடுபட்டு வரும் நிலையில், சதுரங்கப்பட்டினம், வெங்கம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஈசிஆர் சாலையில் போலீஸார் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இன்று முதல் 6 நாட்களுக்கு தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு..!: வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ.21:**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- 19-11-2025 அன்று லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய மாலத்தீவு பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுபகுதி, நேற்று (20-11-2025) காலை 8.30 மணி அளவில் தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில், மேற்கு வட மேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும்.

தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, வருகின்ற 22-ஆம் தேதி வாக்கில், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.



இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வருகின்ற 24-ஆம் தேதி வாக்கில், தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேற்கு-வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெறக்கூடும்.

இன்று (21-11-2025): தமிழகத்தில்ஒருசிலஇடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி,ராமநாதபுரம்,கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

22-11-2025: கடலோர தமிழகத்தில்அநேகஇடங்களிலும், உள் தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

23-11-2025: கடலோர தமிழகத்தில்அநேகஇடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

24-11-2025: கடலோர தமிழகத்தில்அநேகஇடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கன்னியாகுமரி,திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

25-11-2025: கடலோர தமிழகத்தில்அநேகஇடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

26-11-2025: கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

சென்னையில் இன்று (21-11-2025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

# "செல்ஃபி மோகத்திலே"



2013ம் வருடம், உத்தர்காண்ட் மாநிலத்தின் பத்ரிநாத், கேதார்நாத் பகுதிகளில், மேக வெடிப்பால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் போது மீட்புப் பணிக்குச் சென்ற ராணுவ வீரர்களில் பலர் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர்.

அதில் ஒரே ஊரைச் சேர்ந்த ஐந்து பேர் இறந்துள்ளனர். அந்த ஐந்து பேருக்கும் மரியாதை செய்யும் விதமாக அவர்களின் சொந்த ஊரில் அரசாங்கம் ஒரு நினைவுத் தூணை நிறுவி, அதைச் சுற்றிலும் பூங்காக்கள் அமைத்து அந்த ஊருக்கு ஒரு தனி அந்தஸ்தை ஏற்படுத்தியிருந்தது.

இதில் அந்த ஊர் மக்களுக்கு வருத்தம் என்னவென்றால், கடந்த பதினோரு ஆண்டுகளில் வெளியூரிலிருந்து அங்கு வரும் மக்கள், பூங்காவில் உள்ள ஊஞ்சல், சீசா போன்றவற்றில் விளையாடியும், புகைப்படம் எடுத்தும், அவற்றை சோஷியல் மீடியாக்களில் பதிவிட்டும் மகிழ்ந்து கொண்டனரே தவிர, யாரும் ஒரு முறை கூட உயிர்த் தியாகம் செய்த அந்த வீரர்களின் நினைவுத் தூணுக்குக் கீழே பூக்கள் தூவி மலரஞ்சலியோ, தீபம் ஏற்றி தீபாஞ்சலியோ செய்வதில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது.

வழக்கம் போல் பூங்கா... விளையாட்டு... செல்ஃபி... எனக் கூட்டம் கலகலத்துக் கொண்டிருக்க, அதிசயமாய்ச் சில இளைஞர்களும், இளைஞிகளும் அந்த நினைவுத் தூணருகே சென்றனர்.


தனது ஜூஸ் கடையிலிருந்து அதைக் கவனித்த பதினாலு வயது "மோகன் காந்தி"க்கு மகிழ்ச்சியாயிருந்தது. ஆனால், அவனது அந்த மகிழ்ச்சியைக் குலைத்து விடும் விதமாய் அந்த இளையோர் கூட்டம் நினைவுத் தூணைப் பிடித்துக் கொண்டும், அதில் சாய்ந்து கொண்டும், அதைக் கட்டிப்பிடித்தும் புகைப்படம் எடுக்க, வெகுண்டெழுந்தான் மோகன் காந்தி.

"இதுகளுக்கெல்லாம் அந்தத் தூணின் மதிப்பும் மரியாதையும் என்ன தெரியும்?"
வேக,வேகமாய்ச் சென்று அவர்கள் மத்திதில் நின்று, "யாருங்க... யாருங்க நீங்கெல்லாம்?" கத்தலாய்க் கேட்டான்.
அவர்கள் அரண்டு விழிக்க,

"இந்தத் தூண் சும்மா அழகுக்கு வெச்ச தூணில்லை... இதோட வரலாற்றைச் சொல்றேன் தெரிஞ்சுக்கங்க..." என்று ஆரம்பித்து 2013... கேதார்நாத்... மேக வெடிப்பு... ஐந்து பேர் சாவு... எல்லாத்தையும் சொல்லி முடிக்க, அந்த இளையோர் கூட்டம் உறைந்து போய் நின்றது.

"அதுல செத்த ஐந்து பேர்ல என் அப்பா, என் பெரியப்பா, என் சித்தப்பா... என் மாமா.. என் நண்பனோட அப்பா... ன்னு எல்லோரும் இருக்காங்க... நீங்க இந்தத் தூணுக்கு அஞ்சலி செலுத்தாட்டிப் பரவாயில்லை... இந்த மாதிரி அசிங்கப்படுத்தாம இருங்க... அது போதும்!"

அந்தப் பதினாலு வயதுச் சிறுவன் போட்ட போட்டில் பயந்து ஓடியது அந்த இளைஞர் கூட்டம்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# அம்மா..டாடி !



" அம்மா..அம்மா !" அறைக்குள்ளிருந்து விஷால் கத்த, அடுக்களைக்குள் வேலைபார்த்துக்கொண்டிருந்த சூடாமணி கொதித்துக்கொண்டிருந்த சாம்பாரை சிம்மில் வைத்துவிட்டு வெளிப்பட்டாள்.
" எதுக்குடா இப்படி கூப்பாடு போடறே ?" அறைக்குள் நுழைந்து மகனிடம் கேட்டாள்
" பனியன சரியா போடமுடிய ல்லம்மா.!"
" ஆமா...ஏழாம் வகுப்பு படிக்கறே. இன்னும் பனியன்கூட போடத் தெரியல்ல !" பின்பக்கம் சுருட்டியி ருந்த பனியனை மெல்லப் பிரித்து சரியாக்கிவிட்டாள்.
" இவ்வளவுதானா..வேற ஏதாவது பாக்கி இருக்கா ?"
" அவ்வளவுதான். நீ போய் வேலையப் பாரு !" புன்னகையுடன் விஷால் சொல்ல சூடாமணி அடுக்களைக்குள் மீண்டும் நுழைந்தாள். ஆனால் இரண்டு நிமிடம் கூட ஆகியிருக்காது.
" அம்மா..அம்மா !"
மறுபடியும் விஷாலின் கூக்குரல் !
சாம்பார் நன்கு கொதித்திருந்தது. அடுப்பை அணைத்துவிட்டு மகனிடம் சென்றாள் சூடாமணி.
" என்ன ஆச்சு இன்னிக்கு ! அம்மா அம்மான்னு ஏலம் போடறே !"
" யூனிஃபார்ம் ஷர்ட்ட சரியா போட முடியல்ல !"
சட்டையின் ஒருபக்கம் ஏறியிருந்தது. பட்டன்களை தாறுமாறாகப் போட்டிருந்தான்விஷால்.
இதைப் பார்த்த சூடாவிற்கு சிரிப்பு பொத்துக்கிட்டு வந்தது.
" அட ராமா ! ஷர்ட் பட்டனக்கூட சரியாப்போடத்தெரியல்ல !" என்றவள் பட்டன்களைக் கழற்றி ஒவ்வொ ன்றாகச் சரியாகப் போட்டாள்.
" விஷால் கண்ணா ! ரூம்லகண்ணாடி பீரோ இருக்குல்ல. அதுல பார்த்து க்கிட்டே நல்லா டிரெஸ் பண்ணிக் கோ..ஓ.கே.வா?"
" ஓ.கே.ம்மா !" என்றான் விஷால்.
பிறகு மறுபடியும் கிச்சனில் நுழைந்த சூடா மகனின் லஞ்சுக்கு வேண்டிய சாப்பாட்டை கேரியர் டப்பாவில் வைத்தாள்.
" அம்மா..அம்மா ! "
ஹாலுக்குள் வந்த சூடா என்ன ஏது என கேட்கும் முன்னால் விஷால் தன் கால்களைக் காட்டியபடி அம்மாவிடம் கூறினான்"
ஷூ காலுக்குள்ள சரியா நுழையமாட்டேங்கிறதம்மா !"
சூடா மகன் காலடியில் உடகார்ந்தாள். கன்னாபின்னாவெனாறு அவன் போட்டிருந்த ஷூவையும் சாக்ஸை யும் கழற்றினாள். பிறகு சாக்ஸை நன்றாக நீவி விட்டு காலில் போட்டா ள். ஷூ இப்பொழுது வாகாக நுழைந்தது. லேஸைக் கொண்டு கட்டி முடிச்சுப் போட்டாள்.
" இப்ப சரியா ?" சூடா மகனிடம் கேட்க முகம் மலர்ந்த விஷால் ," தேங்க்யு ம்மா" என்றான்.
லஞ்ச் பேக் கூடவே பாட்டிலிலும் குடிநீர் ஃபில் செய்து பையின் சைடு பக்கம் வைத்து மகனிடம் நீட்டினாள். முதுகில் பாடப்புத்தகம், நோட்டுகள் அடங்கிய பை கையில் லஞ்ச் பேக் இவைகளை எடுத்துக்கொண்டு ரெடியானான் விஷால்.
" அம்மா பை ! டாடி பை ! உள்ளே அமர்ந்தபடி பேப்பர் படித்துக் கொண்டிருந்த ஈஸ்வரனின் காதில் விழுகிற மாதிரி கத்திக் கூறிவிட்டு புறப்பட்டான் விஷால்.
சைகிளில் ஏறி மகன் கண்ணிலி ருந்து மறையும் வரை இருந்துவிட்டு வீட்டினுள் நுழைந்தாள் சூடா.
" என்ன பயல் இன்னிக்கு மூச்சுக்கு முன்னூரு தடவ அம்மா அம்மான்னு உன்னை கூப்பிட்டான். " கிண்டலுடன் கேட்ட கணவரைப் பார்த்து லேசாகச் சிரித்தாள் சூடா.
" ஆமா...உன்னை அம்மான்னு வாய் நிறையக் கூப்பிடறான். என்னை மட்டும்' டாடி ' ன்னு கூப்பிடறான் !"
" விடுங்க. அவன் இஷ்டப்படி எப்படி வேணும்ன்னாலும் கூப்பிடட்டும். பெரியவன் ஆனால் மாறிடுவான் !"
" அது சரி. உன் வயிற்றில் பிறக்காதப்போதே உன்னை இத்தனை தடவை 'அம்மா' ன்னு கூப்பிடறானே. உண்மையிலேயே நமக்குப் பிறந்திருந்தால் பயல் ஆயிரம் தடவையாவது அம்மா ன்னு கூப்பிட்டிருப்பான் !"
" இருக்கலாம். அதனால உங்களு க்கும் பெருமைதானுங்களே ! "
மனைவியின் பதில் ஏதோ ஒரு விஷயம் பற்றி கோடிட்டு காட்ட உள்ளுக்குள் மறுகினார் ஈஸ்வரன்.



-வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்,
போரூர், சென்னை 600 116

ஆன்மிக களஞ்சியம்

# கூற்றுவர் நாயனார் வரலாறு

தொடர்-37




-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

கூற்றுவர் என்னும் நாயனார் களந்தை என்னும் பதியிலே கூற்றுவர் என்னும் குறுநில மன்னர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானது திருநாமத்தினை நாடோறும் ஓதியும் சிவனடியார் பாதம் பணிந்தும் ஒழுகினார். அவ்வொழுக்கத்தின் வலிமையாலே நால்வகைச் சேனையும் சிறக்கப் பெற்று மாற்றார்க்குக் கூற்றுவன் போல விளங்கினார். தம் தோள்வலிமையாலே நால்வகைச் சேனையும் சிறக்கப்பெற்று மாற்றார்க்குக் கூற்றுவன் போல விளங்கினார். தம் தோள் வல்லாமையால் பல போர்களிலும் பல அரசர்களையும் வென்று அவர்களது வளநாடுகளையெல்லாம் கவர்ந்தார். மணிமுடி ஒன்றொழிய அரசர் திருவெல்லாமுடையாராய் விளங்கினார்.

மணிமுடி சூட்டிக் கொடுக்கும்படி அதனைச் சூட்டும் உரிமையுடைய தில்லைவாழந்தணர்களைக் கேட்டார். அவர் சோழர் குல முதல்வர்களுக்கு அன்றி முடி சூட்டமாட்டோம் என்று மறுத்துத் தம்மில் ஒரு குடியை மணிமுடியைக் காவல் செய்யும்படி வைத்து, இவராணைக்கு அஞ்சி சேர நாட்டிற்குச் சென்றுவிட்டனர்.

அது கண்ட கூற்றனார் மனம் தளர்ந்து "முடியாக உமது பாதம் பெற வேண்டும்" என்று ஆடவல்லானைப் பரவி, அந்நினைவுடன் துயின்றார். அன்றிரவு மன்றிலாடும் பெருங்கூத்தர் எழுந்தருளி, தமது திருவடிகளையே முடியாக அவருக்குச் சூட்டியருள, அவற்றைத் தாங்கி அவர் உலகினைத் தனியாட்சி புரிந்தனர். இறைவர் கோயிலெல்லாம் உலகுவாழப்பூசை புரிவித்தனர். இவ்வாறு உம்பர் மகிழ நல் அரசாட்சி புரிந்திருந்து உமையொருபாகர் திருவடி சேர்ந்தனர்.

## பொய்யடிமையில்லாத புலவர் வரலாறு





"பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்"
-திருத்தொண்டத் தொகை.

பாண்டிநாட்டிலே சிறந்து விளங்குகின்ற துவாதசாந்தபுரமாகிய மதுராபுரியிலே, சோமசுந்தரக்கடவுளிடத்திலே, சதுரமாய் இரண்டு சாணளவினதாகி மெய்ப்புலவர்களுக்கெல்லாம் முழம் வளர்ந்து இருத்தற்கு இடங்கொடுக்கின்ற சங்கப்பலகையைப் பெற்று, அதனில் இருந்துகொண்டு தமிழ் மொழியை வளர்த்த கடைச்சங்கப்புலவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாக நாற்பத்தொன்பதின்மர். அவர்கள் விபூதி ருத்திராக்ஷதரர்களாய், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபபரர்களாகி, அகத்தியம் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல்களின்படி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னு நாற்கவிகளினாலும் மெய்யன்போடு பரமசிவனையே பாடி, பொய்யடிமையில்லாத புலவர்கள் எனப் பெயர்பெற்றுச் சிவபதம் அடைந்தார்கள்.

தொடரும்...

# சங்கடங்களை உடனடியாக நீக்குவார் சக்கரத்தாழ்வார்

சக்கரத்தாழ்வார் பின்னால் நரசிம்மர் இருப்பது ஏன் ??

திருமாலின் கையிலுள்ள சக்கரத்தை சக்கரத்தாழ்வார் என்பர்.

திருமாலால் ஏவப்படும் ஆயுதம் இது. சக்கரத்தை வழிபட்டால் துன்பம் உடனடியாக தீரும் என்பது ஐதீகம்.

பக்தனான பிரகலாதனை காக்க திருமால், நரசிம்மாராக அவதரித்தார்.

தாயின் கருவில் இருந்து வராததாலும், கருடன் வராத காரணத்தாலும், இந்த அவதாரத்தை அவசர திருக்கோலம் என்பர்.


பக்த பிரகலாதனுக்காக ஓடிவந்த ஸ்ரீநரசிம்ம மூர்த்தி யோக வடிவில் சக்கரத்தாழ்வார்க்கு பின்புறத்தில் இருப்பார்.

நமக்கு ஒரு கஷ்டம் இருப்பதை சக்கரத்தாழ்வாரிடம் சொல்லிவிட்டால் போதும் அவர் வேகமாகச் சுழல்வார். அப்போது பின்னால் இருக்கும் நரசிம்மர் நம் முன்னே வந்து உடனடியாக குறைகளைத் தீர்ப்பதாக ஐதீகம்.

சக்கரத்தாழ்வாரின் தலை நெருப்புபோல ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

பாதங்கள் சக்கரத்ததைப் போல சுழன்று அருள் செய்ய எப்போதும் ஆயத்த நிலையில் இருக்கும்.

சக்கரத்தாழ்வாரை ஆறின் மடங்குகளான எண்ணிக்கையில் 6, 12, 24, 48 என்று வலம் வருவர்.




இதனால் இவருக்கு ஆறுச்சாமி என்ற செல்லப் பெயரும் உண்டு.

சக்கரத்தாழ்வாரை நம்பினால் சங்கடம் நீங்கி வாழ்வில் சகல நன்மையும் உண்டாகும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நாளையென்பது நரசிம்மருக்கு கிடையாது என்பர்.

துன்பத்திலிருந்து விடுபட்டு உடனடியாக நற்பலன்களை அடைய சக்கரத்தாழ்வரையும் நரசிம்மரையும் ஒரு சேர வழிபடுவது மிகச் சிறப்பு.

இதன் அடிப்படையில்தான் சக்கரதாழ்வர்க்கு பின் நரசிம்மர் இருப்பார்.

ஓம் நமோ நாராயணா...!

தொகுப்பு:
**பா. சீனிவாசன்,**
வந்தவாசி.

## தினம் ஒரு தலைவர்கள்

# தோண்டியா வாக் வரலாறு

தொண்டியா வாக் (செப்டம்பர் 10, 1800 இல் இறந்தார்) 18 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் ஒரு சிப்பாய் மற்றும் சாகசக்காரர். மைசூரின் ஆட்சியாளரான ஹைதர் அலியின் சேவையில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார் . மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போரின் போது , அவர் அலியின் வாரிசான திப்பு சுல்தானை விட்டு வெளியேறி , பின்னர் மராட்டிய -மைசூர் எல்லையில் உள்ள பகுதிகளைத் தாக்கினார். மராட்டியர்கள் அவரை பின்வாங்க கட்டாயப்படுத்திய பிறகு, அவர் திப்புவிடம் அடைக்கலம் தேடி இஸ்லாத்திற்கு மாறி, தனது பெயரை மாலிக் ஜஹான் கான் என்று மாற்றிக்கொண்டார் . நான்காவது ஆங்கிலோ-மைசூர் போரில் திப்பு இறந்த பிறகு , முன்னாள் மைசூர் இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களைக் கொண்ட ஒரு படையை அவர் உருவாக்கி, மைசூர் இராச்சியத்தின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றினார். அவர் தன்னை உபய-லோகாதீஷ்வரர் ("இரண்டு உலகங்களின் ராஜா") என்று கூறிக் கொண்டார். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியும் மராட்டிய பேஷ்வாவும் அவரது எழுச்சியைத் தடுக்க படைகளை அனுப்பினர். இறுதியில் ஆர்தர் வெல்லஸ்லி தலைமையிலான பிரிட்டிஷ் படையால் அவர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார் .

ஆரம்ப கால வாழ்க்கை தோண்டியா வாக் மைசூர் இராச்சியத்தில் ( இன்றைய கர்நாடகா) சன்னகிரியில் பிறந்தார் . அவர் பவார் குலத்தைச் சேர்ந்த ஒரு மராட்டிய குடும்பத்தைச் சேர்ந்தவர் . ஹைதர் அலியின் ஆட்சிக் காலத்தில் , பிஷ்ணு பண்டிட்டின் தலைமையில் மைசூரின் படையில் ஒரு துருப்பு வீரராகச் சேர்ந்தார். படிப்படியாக, திப்பு சுல்தானின் ஆட்சிக் காலத்தில் அவர் ஒரு ஷிலேதர் (குதிரைப்படை அதிகாரி) பதவிக்கு உயர்ந்தார் .

மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போருக்குப் பிறகு

மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போரின் போது , வாக் திப்புவின் சேவையை விட்டு வெளியேறினார், பல வீரர்களையும் கணிசமான செல்வத்தையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். அவர் லட்சுமேஸ்வராவின் தேசாய் (மராட்டிய வருவாய் சேகரிப்பாளர்) கீழ் தஞ்சம் புகுந்தார். 1792 இல் போர் முடிவடைந்த பிறகு, மராட்டிய-மைசூர் எல்லையில் உள்ள பகுதிகளின் ஆட்சியாளராக தன்னை அறிவித்துக் கொண்டார். அவர் கிராமங்களை சூறையாடத் தொடங்கினார் மற்றும் தார்வாடைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரிகளை வசூலித்தார் . ஜனவரி 1793 இல், அவர் ஹாவேரியைக் கைப்பற்றினார் , மேலும் சவனூரை ஆக்கிரமித்தார் . ஸ்ரீரங்கப்பட்டினம் ஒப்பந்தத்தின்படி மைசூர் மராட்டியர்களுக்கு வழங்கிய பிற பிரதேசங்களையும் அவர் தாக்கத் தொடங்கினார் .

1794 ஆம் ஆண்டில், மராட்டிய தளபதி பரசுராம் பாவ், வாக்கின் எழுச்சியைத் தடுக்க தோண்டோபந்த் கோகலே (தோண்டு பந்த் என்றும் அழைக்கப்படுகிறார்) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். கோகலே அவரை தப்பி ஓடி திப்பு சுல்தானிடம் தஞ்சம் புகும்படி ஜூன் 1794 இல் கட்டாயப்படுத்தினார். ஒரு போர்வீரனாக அவரது திறனை உணர்ந்த திப்பு, அவரது கடந்த கால துரோகத்தை மன்னித்து, இஸ்லாத்திற்கு மாறுமாறு கேட்டுக் கொண்டார் . வாக் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார், மேலும் அவருக்கு "ஷேக் அகமது" என்ற புதிய பெயர் வழங்கப்பட்டது, இருப்பினும் அவர் தன்னை "மாலிக் ஜஹான் கான்" என்று அழைக்க விரும்பினார். மைசூர் இராணுவத்தில் அவருக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டது. இருப்பினும், சிறிது நேரம் கழித்து, அவர் திப்புவின் ஆதரவை இழந்து சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு கட்டத்தில், திப்பு வாக்கை விடுவிக்கக் கருதினார், ஆனால் அவரது அமைச்சர் மிர் சாதிக் அவரை அவ்வாறு செய்வதைத் தடுத்தார்.



நான்காவது ஆங்கிலோ-மைசூர் போருக்குப் பிறகு 1799 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி திப்பு சுல்தானை தோற்கடித்த பிறகு , தோண்டியா வாக் மற்றும் பிற கைதிகள் பிரிட்டிஷ் துருப்புக்களால் விடுவிக்கப்பட்டனர். வாக் ஷிகாரிபூரை அடைந்தார் , அங்கு அவர் திப்புவின் முன்னாள் படையிலிருந்து ஒரு படைவீரர்களை திரட்டினார். பாலத்தின் கிருஷ்ணப்ப நாயக்கரின் ஆதரவைப் பெற்றார், மேலும் தன்னை உபய-லோகதீஷ்வர (இரு உலகங்களின் ராஜா) என்று அறிவித்தார். அவர் பிட்னூரின் நாயக்கர் என்ற பட்டத்தையும் ( கெலாடியின் நாயக்கர்களின் பாணியில் ) ஏற்றுக்கொண்டார். மைசூர் மீது ஆங்கிலேயர்கள் தங்கள் பிடியை வலுப்படுத்துவதில் மும்முரமாக இருந்தபோது, வாக் ஷிமோகா மற்றும் அதைச் சுற்றியுள்ள வணிகர்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்கத் தொடங்கினார் . ஹங்கல் , ஹர்பனஹள்ளி , ராணேபென்னூர் , சவனூர் , சோதே மற்றும் விட்டல் ஆகிய இடங்களின் பாளையக்காரர் நிலப்பிரபுக்கள் அவரது மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டனர். அவரது அதிகாரத்தின் உச்சத்தில், அவர் 90,000 குதிரைப்படை மற்றும் 80,000 காலாட்படை கொண்ட படையை சேகரித்ததாக நம்பப்படுகிறது. ஜூலை 1799 வாக்கில், அவர் ஆங்கிலேயர்களுக்கு ஒரு தொந்தரவாக மாறிவிட்டார், அவருக்கு எதிராக ஒரு படையை அனுப்பினார்.

ஜூலை 4, 1800 அன்று, ஜெனரல் வெல்லஸ்லி, பட்வர்தனுக்கு ஒரு கடிதம் அனுப்பி, போரில் அவரது துணிச்சலைப் பாராட்டினார், மேலும் வாக்கிற்கு எதிரான பிரிட்டிஷ் நடவடிக்கைகளில் சேர அவரை அழைத்தார். பிரிட்டிஷ் படைகள் வாக்கைத் தொடர்ந்து பின்தொடர்ந்தன, ஜூலை 12 அன்று சவனூரை கைப்பற்றின . மோசமான வானிலையால் வெல்லஸ்லியின் முன்னேற்றம் மெதுவாக இருந்தது. இதற்கிடையில், வாக் கித்தூரை நோக்கி முன்னேறினார் , பின்னர் வெல்லஸ்லியின் இராணுவத்தைப் பற்றி கேள்விப்பட்டு குந்தோலுக்கு பின்வாங்கினார் . அவர் 600 வீரர்களை குந்தோலில் விட்டுவிட்டு, ஜூலை 17 அன்று கனவி வழியாக அன்னிகேரியை அடைந்தார். ஜூலை 25 அன்று, வெல்லஸ்லி பட்வர்தனைச் சந்தித்து, வாக்கை எதிர்த்துப் போராடத் திட்டமிட்டார். அடுத்த நாள், பிரிட்டிஷ்-மராட்டிய கூட்டுப் படை டம்பல் கோட்டையைக் கைப்பற்றியது, இது வாக்கின் ஆயிரம் வீரர்களால் பாதுகாக்கப்பட்டது. வாக் தொடர்ந்து எதிரிப் படைகளைத் தவிர்த்து, சவுண்டட்டி , அன்னிகேரி, முனவல்லி, கிட்டூர், கானாபூர் மற்றும் பாதாமி ஆகியவற்றைக் கடந்து சென்றார் . ஜூலை மாத இறுதிக்குள், வெல்லஸ்லியின் படைகள் வாக்கின் முன்னாள் பிரதேசங்கள் அனைத்தையும் கைப்பற்றின. வாக்கின் பல ஆட்கள் அவரை விட்டு வெளியேறிய பிறகு, அவர் நிஜாமின் பிரதேசத்தை நோக்கி தப்பி ஓடினார். ஜூலை 30 அன்று, மனோவில் மலபிரபா நதியைக் கடக்கும்போது, வாக்கின் படைகள் மீது ஆங்கிலேயர்கள் திடீர் தாக்குதலைத் தொடங்க முடிந்தது . வாக் தப்பிக்க முடிந்தது, ஆனால் வெல்லஸ்லியின் படை மராட்டியர்கள் மற்றும் நிஜாம் ஆதரவுடன் மூன்று தனித்தனி நெடுவரிசைகளில் அவரைப் பின்தொடர்ந்தது. ஆகஸ்ட் 1800 இல் இரு தரப்பினருக்கும் இடையே பல மோதல்கள் நடந்தன.

ஆகஸ்ட் 25 ஆம் தேதி, வாக் மலபிரபா நதியைக் கடக்க முடிந்தது. செப்டம்பர் 9 ஆம் தேதி, கர்னல் ஸ்டீவன்சன் தலைமையிலான ஒரு படை வாகைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றது. மறுநாள் காலை, கொனகல் அல்லது கோனகல்லி (இன்றைய ராய்ச்சூர் மாவட்டத்தில் ) அருகே ஜெனரல் வெல்லஸ்லியின் 19வது லைட் டிராகன்களுடன் நடந்த போரில் வாக் கொல்லப்பட்டார். மராட்டிய நாளேடுகளின்படி, வெல்லஸ்லி தனது இரத்தக்கறை படிந்த மீசையை இங்கிலாந்துக்கு ஒரு கோப்பையாக எடுத்துச் சென்றார். வெல்லஸ்லி வாக்கின் 4 வயது மகன் சலபத் கானுக்குப் பாதுகாப்பு அளித்தார், மேலும் அவர் ஐரோப்பாவுக்குச் செல்வதற்கு முன்பு அவரது பராமரிப்புக்காக பணம் செலுத்தினார். அவர் வளர்ந்ததும், சலபத் கான் மைசூர் மன்னரால் பணியமர்த்தப்பட்டார். 1822 இல் காலராவால் இறந்தார்.

# AI தொழில்நுட்பத்தால் பாதிப்பா!



ரிவால்வர் ரீட்டா' பட ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் பேசிய கீர்த்தி சுரேஷ், "இப்போ இருக்கின்ற பெரிய பிரச்சனை AI. தொழில்நுட்பம் என்பது மனிதர்கள் கண்டுபிடித்தது. அது நம்மையே மீறி எங்கேயோ போகின்றது போல் இருக்கிறது. சமூக வலைத்தளத்தில் பார்க்கும்போது, நான் இதுபோன்று உடை அணிந்தேனா என்று..? அவ்வளது ரியலாக இருக்கிறது பார்ப்பதற்கு..

சமீபத்தில் நடந்த படப்பூஜையின் புகைப்படங்களில் என் டிரஸ்ஸ பாத்து நானே ஷாக் ஆயிட்டேன். அவ்வளவு ஆபாசமாக நான் போஸ் கொடுக்கவில்லையே என்று. அப்போது தான் தெரிந்தது நான் இல்லை. என்னை வைத்து உருவாக்கிய AI படம் என்று.. AI ஒரு எரிச்சலூட்டும் விதமாக தான் இருக்கிறது. இது எங்கு போகுதுன்னு தெரியல. தொழில்நுட்பம் வளர வளர பாதிப்பும் அதிகரித்து வருகிறது" என்று தெரிவித்தார்.

கீர்த்தி சுரேஷ் பேசியது தொடர்பாக நடிகர் விஜய் ஆன்டனியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், "வரும் காலங்களில் AI தொழில்நுட்பத்தால் விவசாயிகள் அதிக அளவில் பயன்பெற வாய்ப்புள்ளது. மனிதனின் உழைப்பை எளிமைப்படுத்தும் ஒரு தளமாக தான் தற்போதைய AI விளங்கி வருகிறது" என்று தெரிவித்தார்.



வ்ஜய் டிவ்ய்ன் பாரத் கண்ணம்மா சீரியலில் வில்லி ரோலில் நடித்து பிரபலம் ஆனவர் ஃபரினா.
அதன் பிறகு இவர் பெரிதாக சீரியல்களில் நடிக்கவில்லை என்றாலும் டிவி நிகழ்ச்சிகளை தொகுப்பாளராக இருந்து வருகிறார்.
தற்போது காரில் மிகவும் ஸ்டைலாக வலம் வரும் ஃபரினாவின் போட்டோஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# அபிஷன் ஜீவிந்த் படத்தின் டைட்டில் டீசரை வெளியிடுகிறார் சூப்பர்ஸ்டார்




சசிகுமார், சிம்ரன் நடிப்பில் வெளியான படம் 'டூரிஸ்ட் ஃபேமிலி'. கடந்த மே மாதம் வெளியான இப்படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இப்படத்தை அறிமுக இயக்குநர் அபிஷன் ஜீவின்ந்த் இயக்கி இருந்தார். இலங்கையைச் சேர்ந்த ஒரு தமிழ் குடும்பம் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்து சந்திக்கும் சவால்களை காமெடி கலந்து சொல்லப்பட்டு இருந்ததால் அனைவராலும் ரசிக்கப்பட்டது.

இப்படத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து இயக்குநர் அபிஷன் ஜீவின்ந்த் அடுத்து எந்த நடிகரை வைத்த படம் இயக்குவார் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரே கதாநாயகனாக அறிமுகமாவதாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூறப்பட்டது.

இந்த நிலையில், அபிஷன் ஜீவின்ந்த் கதாநாயகனாக அறிமுகமாகும் படத்தின் படப்பிடிப்புகள் நிறைவடைந்துள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுதொடர்பான புகைப்படங்கள் தற்போது வெளியாகி உள்ளது. இப்படத்தில், அபிஷன் ஜீவிந்துக்கு ஜோடியாக கேரளாவில் வளர்ந்து வரும் நட்சத்திரமான அனஸ்வர ராஜன் நடித்துள்ளார். இப்படத்தை 'டூரிஸ்ட் ஃபேமிலி', 'லவ்வர்' படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய மதன் இயக்கியுள்ளார். MRP என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் கதாநாயகனாக அறிமுகமாகும் புதிய படத்தின் டைட்டில் டீசர் நாளை வெளியாகும் என தயாரிப்பாளர் சௌந்தர்யா ரஜினிகாந்த் அறிவித்துள்ளார்.

இந்த படத்தின் டைட்டில் டீசரை நாளை மாலை 6 மணிக்கு நடிகர் ரஜினிகாந்த் வெளியிட உள்ளதாக அவர் வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளார்.

# தைரியம் இருந்தால் DNA பரிசோதனைக்கு வாங்க



தன்னை திருமணம் செய்து கர்ப்பமாக்கி ஏமாற்றிவிட்டதாக சமையல் கலை நிபுணரும், நடிகருமான மாதம்பட்டி ரங்கராஜ் மீது பிரபல ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார். இதுதொடர்பான வழக்கும் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இதனை தொடர்ந்து, தனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளதாக ஜாய் கிரிசில்டா கடந்த சில நாட்களுக்கு முன்பு இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

இதனிடையே, தன்னை 2வது திருமணம் செய்ததை மகளிர் ஆணையத்தின் முன் மாதம்பட்டி ரங்கராஜ் ஒப்புக் கொண்டார் என்று ஜாய் கிரிசில்டா இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் தெரிவித்திருந்தார். இதனை தொடர்ந்து, ஜாய் கிரிசில்டாவின் இந்த கூற்றை மாதம்பட்டி ரங்கராஜ் நேற்று திட்டவட்டமாக மறுத்தார்.

மேலும், "ஜாய் கிரிசில்டாவின் குழந்தைக்கு டிஎன்ஏ பரிசோதனை எடுக்க வேண்டும். அதில் நான்தான் தந்தை என தெரியவந்தால் குழந்தையை கவனிக்கும் பொறுப்பை வாழ்நாள் முழுவதும் ஏற்க தயார்" என்று மாதம்பட்டி ரங்கராஜ் தெரிவித்தார்.

இந்நிலையில், DNA பரிசோதனைக்கு வாங்க கணவரே என்று மாதம்பட்டி ரங்கராஜை கிண்டலடித்து ஜாய் கிரிசில்டா தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த பதிவில், "என் கணவர் மாதம்பட்டி ரங்கராஜை யாராவது பார்த்தால் தயவுசெய்து DNA பரிசோதனைக்கு வர சொல்லுங்க. 15 நாள் ஆச்சு, இப்போ எங்க தலைமறைவா இருக்காரு? தைரியமும் நேர்மையும் இருந்தால் தயவுசெய்து பரிசோதனைக்கு வாங்க கணவரே" என்று பதிவிட்டுள்ளார்.

# காலேஜ் கட அடிச்சிட்டு படம் பாக்க போகாதீங்க



தமிழ் சினிமாவில் வளர்ந்துவரும் நடிகர்களில் ஒருவர் கவின். கவினின் லிஃப்ட், டாடா, ஸ்டார் போன்ற படங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றநிலையில், அண்மையில் வெளிவந்த 'கிஸ்' கலவையான விமர்சனங்களை பெற்றிருந்தது. இதனைத்தொடர்ந்து தற்போது கவின் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'மாஸ்க்'.

இப்படத்தில் ஆண்ட்ரியா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

தெலுங்கு நடிகை ருஹானி சர்மா கவினுக்கு ஜோடியாக நடித்துள்ளார். இவர்களைத் தவிர சார்லி, பாலா சரவணன், விஜே அர்ச்சனா ஆகியோரும் படத்தில் நடித்துள்ளனர்.

வெற்றிமாறனின் கிராஸ் ரூட் ஃபிலிம்ஸ் நிறுவனமும், பிளாக் மெட்ராஸ் நிறுவனமும் படத்தை தயாரிக்க அறிமுக இயக்குநர் விகர்னன் அசோக் படத்தை இயக்கியுள்ளார். இப்படம் நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில் மதுரை தனியார் கல்லூரியில் நடந்த பட பிரமோஷன் விழாவில் கவின் பேசியது இணையத்தில் வைரலாகி வருகிறது. மாணவர்களிடையே பேசிய கவின்,

"ஒருவேளை படித்திருந்தால் இதை விட சிறப்பான இடத்திற்கு கூட நான் சென்றிருப்பேன். என்ன பிடிக்கிறதோ அதை படியுங்கள், என்ன வேலை பிடிக்கிறதோ அதை செய்யுங்கள், சந்தோஷமாக இருங்கள், மற்றவர்களையும் மகிழ்ச்சியாக பார்த்துக் கொள்ளுங்கள்.

மாஸ்க் நவ.21 (இன்று) வெளியாகிறது. வெள்ளிக்கிழமை கல்லூரி இருக்கும். அதனால் அனைவரும் சமத்தாக கல்லூரி செல்லுங்கள். அந்த வேலையை முடித்துவிட்டு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறையில் சென்று பாருங்கள். எதுவும் பிரச்சனை இல்லை. சினிமா ஒரு பொழுதுபோக்குதான். தேவைப்படும்போது செல்லுங்கள், முடிந்தவுடன் வெளியே வந்துவிடுங்கள். பொழுதுபோக்கு பொழுதுபோக்காக இருக்கும்வரை நல்லது" எனப் பேசியிருந்தார். கவினின் இந்தப் பேச்சு பலரிடமும் பாராட்டுகளை பெற்றுவருகிறது.



நடிகை திஷா பாட்னி சூர்யாவின் கங்குவா படம் மூலமாக தமிழ் சினிமாவில் பிரபலம் ஆனார்.
அவர் தற்போது சேலையில் செம ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை பாருங்க.

# TVK கட்சியில் இணைவேனா?



TTF வாசன் நடித்துள்ள ஐபிஎல் படம் வரும் 28ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

இயக்குனர் ஷங்கர், முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கும் வாய்ப்புக்காக காத்துக்கொண்டு இருக்கிறேன்

ராதா ஃபிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் ஜி.ஆர். மதன்குமார் தயாரிப்பில் கருணாநிதி இயக்கத்தில் கிஷோர்- TTF வாசன், அபிராமி, குஷிதா ஆகியோரின் நடிப்பில் தயாராகி இருக்கும் படம் "ஐபிஎல்".

பிச்சு மணி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு அஸ்வின் விநாயகமூர்த்தி இசையமைத்திருக்கிறார். திரில்லராக தயாராகி இருக்கும் இப்படம் வரும் 28ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

ஐபிஎல் படம் தொடர்பான புரமோஷன் நிகழ்ச்சியில் பேசிய TTF வாசன், "தமிழக வெற்றிக்கழகத்தில் இணைவது போன்ற அரசியல் ஆசை இல்லை.

நடிகர் விஜயுடன் என்னை ஒப்பீடு செய்ய வேண்டாம், இயக்குனர் ஷங்கர், முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கும் வாய்ப்புக்காக காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று தெரிவித்தார்.



இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஸ்ரேயா சரண், தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் எடுத்துக்கொள்ளும் புகைப்படங்களை அவ்வப்போது பதிவு செய்வார். அதே போல் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களையும் இன்ஸ்டா பக்கத்தில் பதிவிடுகிறார்.

அந்த வகையில், தலையில் மல்லிப்பூ, கண்ணாடி முன் நின்று அழகிய சேலையில் சமீபத்தில் நடிகை ஸ்ரேயா போட்டோஷூட் நடத்தியுள்ளார். அந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகிறது. இதோ அந்த புகைப்படங்கள்:

# திரைவாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறும் நடிகை துளசி!



ஷீரடி சாய்பாபாவுடன் நிம்மதியான பயணத்தை தொடர உள்ளதாக தெரிவித்துள்ளார்

பழம்பெரும் நடிகை துளசி திரைவாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்ட அவர், ஷீரடி சாய்பாபாவுக்கு தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க உள்ளதாக தெரிவித்துள்ளார். நடிகை சாவித்ரி மூலம் குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமான இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் என 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சீதாலட்சுமி, சங்கராபரணம் ஆகிய படங்களுக்காக தெலுங்கு திரையுலகின் நந்தி விருதை இருமுறை பெற்றுள்ளார். தமிழ் மற்றும் தெலுங்கில் சிறந்த குணச்சித்திர நடிகையாகவும் வலம்வருகிறார்.

இவர் நடித்த படங்களில் டிஸ்கோ சிங், நல்லவனுக்கு நல்லவன், சகலகலா வல்லவன் போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். தற்போதைய தலைமுறையினருக்கு தெரியவேண்டுமானால் பண்ணையாரும் பத்மினியும் படத்தைக் கூறலாம். இப்படம் இவருக்கு நல்ல வரவேற்பை பெற்றுத்தந்தது. தெலுங்கு திரையுலகின் முக்கிய நடிகையாக இருக்கும் இவர் கன்னட நடிகர் சிவமணியை திருமணம் செய்துகொண்டார். கடந்த வாரம் வெளியான லவ் ஓடிபி படத்தில் நடித்துள்ளார்.

ஓய்வு குறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது;

"டிசம்பர் 31 ம் தேதி எனது ஷீரடி தரிசனத்தின் தொடர்ச்சியாக, ஓய்வு பெற விரும்புகிறேன். இனி என்னுடைய பயணத்தை சாய்நாதாவுடன் நிம்மதியாக தொடர இருக்கிறேன்.

வாழ்க்கையை கற்றுக் கொள்ள உதவிய அனைவருக்கும் நன்றி சாய்ராம்" என தெரிவித்துள்ளார்.

# Career மீது பெண்கள் கவனம் செலுத்துங்கள்



பெண்கள் Career மீது அதிக கவனம் செலுத்துவது, புதிய இந்தியா பிறந்துள்ளதை காட்டுகிறது

தடுப்பூசிகளால் ஆட்டிசம் குறைபாடு ஏற்படுவதாகக்கூறி சர்ச்சையில் சிக்கிய Zoho இணை நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு அடுத்ததாக இளைஞர்கள் தங்களது 20 வயதுக்குள்ளாகவே திருமணம் முடித்து குழந்தை பெற்றுக்கொள்வது அவசியம் தெரிவித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீதர் வேம்புவின் கருத்து இணைய தளத்தில் பேசும்பொருளாகியுள்ளது. இந்நிலையில், ஸ்ரீதர் வேம்புவின் கருத்துக்கு நேர்மாறாக பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வதை விட Career மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ராம்சரண் மனைவி உபசனா தெரிவித்துள்ளார்.

ஐஐடி ஹைதராபாத்தில் தான் உரையாற்றிய உபசனா, "அண்மையில் பங்கேற்ற ஐஐடி ஹைதராபாத் நிகழ்வில் எத்தனை பேருக்கு திருமணம் வேண்டும் என கேட்டேன். மாணவிகளை விட மாணவர்களே அதிகம் கை உயர்த்தினர். ஆண்களை காட்டிலும் பெண்களே Career மீது அதிக கவனம் செலுத்துவது, புதிய இந்தியா பிறந்துள்ளதை காட்டுகிறது பெண்களின் மிகப்பெரிய காப்பீடு என்பது உங்கள் கருமுட்டைகளை சேமிப்பதுதான். ஏனென்றால், நீங்கள் எப்போது திருமணம் செய்து கொள்ள வேண்டும், எப்போது குழந்தைகளைப் பெற விரும்புகிறீர்கள், எப்போது நிதி ரீதியாக சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் தேர்வு செய்யலாம். அதனால் தான் இன்று, நான் என் சொந்தக் காலில் நிற்கிறேன், நான் எனக்காகவே சம்பாதிக்கிறேன்" என்று தெரிவித்தார்.இந்த வீடியோவை உபசனா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டார்.

இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி பலரும் அவரது கருத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த விமர்சனங்களுக்கு உபசனா விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஒரு ஆரோக்கியமான விவாதத்தைத் தூண்டியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் & உங்கள் மரியாதைக்குரிய பதில்களுக்கு நன்றி.

ஒரு பெண் சமூக அழுத்தத்திற்கு அடிபணிவதற்குப் பதிலாக காதலுக்காக திருமணம் செய்து கொள்வது தவறா?

சரியான துணையைக் கண்டுபிடிக்கும் வரை அவள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது தவறா?

ஒரு பெண் தனது சொந்த சூழ்நிலைகளின் அடிப்படையில் எப்போது குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தேர்வு செய்வது தவறா?திருமணத்தைப் பற்றி அல்லது சீக்கிரம் குழந்தைகளைப் பெறுவதை மட்டும் யோசிப்பதை விட, ஒரு பெண் தனது இலக்குகளை நிர்ணயித்து, தனது வாழ்க்கையில் கவனம் செலுத்துவது தவறா?நான் 27 வயதில் காதலித்து திருமணம் செய்து கொண்டேன், அதை நான் என் சொந்த விருப்பத்தில் முடிவு எடுத்தேன். 29 வயதில், தனிப்பட்ட மற்றும் உடல்நலக் காரணங்களுக்காக என் கருமுட்டைகளை சேமித்து வைக்க முடிவு செய்தேன். 36 வயதில் எனது முதல் குழந்தையை பெற்றெடுத்தேன். இப்போது 39 வயதில் இரட்டை குழந்தைகளை எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

எனக்கு, திருமணம் மற்றும் Career ஆகிய இரண்டும் எனக்கு முதன்மையானவை. அவை நிறைவான வாழ்க்கையின் அர்த்தமுள்ள பகுதிகள். ஆனால் நான் அதற்கான காலக்கெடுவை தீர்மானிக்கிறேன்! அது privilege அல்ல, அது என் உரிமை!" என்று தெரிவித்துள்ளார்.2011 இல், உபாசனாவும் ராம் சரணும் நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர், மேலும் அவர்கள் 2012 இல் திருமணம் செய்து கொண்டனர். அவர்களின் முதல் குழந்தை, கிளின் காரா, 2023 இல் பிறந்தார். மேலும் உபாசனா தற்போது இரட்டை குழந்தைகளை எதிர்பார்க்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



நடிகை ஆஷிகா ரங்கநாதன் அழகிய உடையில் இருக்கும் சமீபத்திய போட்டோஷூட். ரசிகர்களை கவரும் ஸ்டில்கள் இதோ

# ஓ.டி.டி. தளத்தில் வெளியாகும் படங்கள்...



திரையுலகில் ஒவ்வொரு வாரமும் பல புதிய படங்கள் ரிலீசாகி வருகின்றன. திரையரங்குகளை போலவே ஓ.டி.டி. தளங்களிலும் ஏராளமான படங்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில், நாளை எந்தெந்த திரைப்படங்கள் ஓ.டி.டி தளங்களில் வெளியாக உள்ளன என்பதைக் காணலாம்.

**டீசல்**

அறிமுக இயக்குநர் சண்முகம் முத்துசாமி இயக்கி, ஹரீஷ் கல்யாண் கதாநாயகனாக நடித்துள்ள படம் டீசல். இந்த படத்தில் அதுல்யா ரவி கதாநாயகியாக நடித்துள்ளார். ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்ற இப்படம் சிம்பிளி சௌத் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது.

**பைசன்**

மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் வெளியான படம் ‘பைசன்’. இப்படத்தில் துருவ் விக்ரமுக்கு ஜோடியாக அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார். கபடி வீரரின் வாழ்க்கையை தத்துரூபமாக வெளிப்படுத்தி உள்ள ‘பைசன்’ படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தமிழில் வரவேற்பை பெற்ற ‘பைசன்’ படம் விரைவில் தெலுங்கில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது. பலதரப்பு மக்களையும் கவர்ந்த ‘பைசன்’ உலகளவில் இதுவரை ரூ.70 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. இதனிடையே, ‘பைசன்’ படத்தை நெட்ஃபிளிக்ஸ் ஓடிடி தளத்தில் காணலாம்.

**தி ஃபேமிலி மேன் சீசன் 3**

தி ஃபேமிலி மேன் வெப் தொடரின் சீசன் 3 நாளை முதல் அமேசான் பிரைமில் வெளியாக உள்ளது. கடந்த இரண்டு சீசன்களும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றதை தொடர்ந்து மூன்றாவது சீசன் மீது ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். இந்த சீசனில் மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி, ஷாரிஃப் ஹாம்ஷி, ஆஷ்லேஷா தாக்கூர், ஸ்ரேயா தன்வந்தரி மற்றும் வேதாந்த் சின்ஹா உள்ளிட்ட பலர் நடித்துள்ளார்கள். இந்த சீசனை தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் கண்டு களிக்கலாம்.

**தி பெங்கால் ஃபைல்ஸ்**

விவேக் அக்னிஹோத்ரி இயக்கியுள்ள இப்படம் 1946-ம் ஆண்டு மேற்கு வங்கத்தில் நடந்த இந்து இனப்படுகொலையை அடிப்படையாகக் கொண்டது. மேற்கு வங்கத்தில் திரையரங்குகளில் வெளியிட தடை செய்யப்பட்ட இப்படம் நாளை முதல் ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

**உசிரு**

குறிப்பிட்ட தேதிகளில் கர்ப்பிணிப் பெண்கள் கொல்லப்படுகிறார்கள். இப்படத்தில் போலீஸ்காரராக உள்ள திலக் சேகரின் மனைவி கர்ப்பமாக இருப்பதால் அவருக்கு இந்த வழக்கு தனிப்பட்ட விஷயமாக மாறுகிறது. இதனால் ஆபத்தில் இருந்து மனைவியை எப்படி காப்பாறுகிறார் என்பதை திரில்லராக எடுக்கப்பட்டுள்ளது. கன்னட நடிகர் திலக் சேகர் போலீஸ்காரராக முக்கிய வேடத்தில் நடிக்கிறார். திலக் சேகரின் மனைவியாக பிரியா ஹெக்டே நடித்துள்ளார். இப்படத்தை நாளை முதல் சன் நெக்ஸ்ட் ஓ.டி.டி. தளத்தில் காணலாம்.




## சுருக்குவதும் பெருக்குவதும்

ஆசைகளை என்றும் சுருக்கு
உழைக்கும் ஆர்வத்தைப்
பெருக்கு...

சுற்றும் நேரத்தைச் சுருக்கு
படிக்கும் நேரத்தைப் பெருக்கு

அலட்சிய மனப்பான்மை
சுருக்கு இலட்சிய
வேட்கையைப் பெருக்கு...

வீண் செலவுகள் சுருக்கு
பயன்பாட்டுப் பொருளைப்
பெருக்கு...



அதீத
நுகர்வைச்
சுருக்கு
அவசிய
உணவினைப்
பெருக்கு.

**கா. ஹபீப் முகமது.**

## நீ இருப்பது எங்கே ?

விழியில் விழுந்து விட்டாய்!
விடியலில் எழுந்து விட்டாய்!
புஜத்தினில் புதைந்து
விட்டாய்! நிஜத்தினில்
நிறைந்து விட்டாய்!

கனவென்று சொல்லாகது!
கவியொன்று சொல்லி
மாளாது! உள்ளுக்குள்ளே
உலவுகின்றாய்!
உயிரைக்கூட
களவுகொண்டாய்!

நீரிலும் நெருப்பிலும் !



நீ தெரிந்தாய்! வேர்வரை
நுழைந்து வதம் புரிந்தாய்!
யாரென்று தெரியாத
கள்ளியானாய்!பாரென்று
சொல்லிவிட்டு புள்ளியானாய்!

வாசம் நிறைந்து
நிற்கின்றாயா? தேசம் கடந்து
இருக்கின்றாயா?
நீ இருப்பது எங்கே?
உனைநினைத்து
துடிக்கும் உறுப்பது
இங்கே?

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி
கோட்டை.

## இருப்பார் இதயத்திலே!

எண்சீர் மண்டிலம்.

இல்லார்க்கு இருப்பவர்கள்
கொடுக்க வேண்டும்
இல்லையென்று சொல்லாமல்
உதவ வேண்டும்!
நல்லாரே என்றபெயர்
வாங்க வேண்டும்
நனிசிறந்த பெரியோராய்
வாழ வேண்டும்!
எல்லோரும் நல்லோராய்க்
காண வேண்டும் ஏற்றமுடன்
திகழ்ந்தேதான்
பேண வேண்டும்!
சொல்லாமல் அறந்தன்னைச்
செய்ய வேண்டும்
சுறுசுறுப்பாய் அறந்தன்னைப்
புரிய வேண்டும்!

இல்லார்க்கு இன்பத்தை
விளைக்க வேண்டும்
ஈடில்லாத்தொண்டினையே
செய்ய வேண்டும்!
இல்லையென்று
சொல்லாமல் வாழ வேண்டும்
ஈகையிலே நனிசிறந்து
விளங்க வேண்டும்!
பொல்லாப்பே இல்லாமல்
வாழ வேண்டும் பொலிவான
வாழ்வினையே
சூழவேண்டும்!
இல்லாதார் வாழ்வினிலே
இன்பம் வேண்டும்
ஏற்றத்தை எழிலாக
அமைக்க வேண்டும்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## உறவுகளின் சிகரம் தாய்

உயிரினங்களின் முதல்
மொழியே

ஒப்பற்ற அம்மா நீயே
உலகிற்கு அறிமுகம் செய்தாய்

உலகம் போற்றும் உறவு தாய்
உறவுகள் ஆயிரம் உண்டு

உயர்ந்த அன்னைக்கு இணை
ஏது?

பத்துத்திங்கள் என்னுயிர்
வளர்த்தாய்

எட்டி உதைத்தாலும் சிரித்தாய்
எண்ணி எண்ணிப் பூரித்தாய்

பால் நிலவைப் பார்த்திட



வைத்தாய்
பால் சோறோடு பண்பையும்
ஊட்டிய தாய்

தாலாட்டித் தூங்கிட வைத்தாய்

தன் தூக்கத்தை மறந்தாய்
நோயுற்ற போது துடித்தாய்
நோய் நீங்கிட மருந்தளித்தாய்

தாய்மொழியோடு தன்மானமும்
பயிற்றுவித்தாய்

தன்னிகரில்லாப் பாசமும்
பொழிந்தாய்

பசியோடு பசியாற வைத்தாய்
புசிப்பதை ரசித்துப்பசியாறிய
தாய்



தியாகத்தின்
திரு உருவம்
தாய்தரணியில்
பேசும்
தெய்வம் தாய்!

**கவிஞர்**
**இரா. இரவி**



கடவுளே–உன்
கால் பிடித்து கேட்கிறேன்
அவள் காதல் கிடைத்து
விட்டது எங்களுக்கான
சாதலை இன்னும்
ஆயிரமாண்டுகளுக்கு
தள்ளி வைத்தால் என்ன?
இப்பிரபஞ்சத்தில் எவனும்,
எவளும் இப்படி காதலிக்க
வில்லையென உலக மெச்ச
அவளை சலிக்காமல்
இன்னும்,இன்னுமென
காதல் செய்ய வேண்டும்!

நான் போதுமென்று
ஒரு போதும் சொல்லப்
போவதில்லை அடங்காத
இதயம் இன்னும்,
இன்னுமென
துடித்து
கொண்டே தான்
இருக்கும் அமுல்
பேபி கன்னங்கள்
சிவக்கும் வரை,



உதடுகள் வலிக்கும் வரை
நிறுத்தி விடாதே
உன் முத்தங்களை!

அரவணைத்து கொண்டு
உறங்குவதில் ஓர் அமைதி
இருக்கத் தான் செய்கிறது!

கோபம் வேண்டாம்
கொஞ்ச நேரத்திற்கு
மௌனமாக இரு
வன்மங்களை எல்லாம்
வட்டியும் முதலுமாய்
கட்டிப்பிடித்து
முத்தங்களாய் தீர்த்து விடு!

மௌன மொழி பேசும்–என்
தலைவியே இரவிலாவது
சப்தமிட்டு பேசு முத்தத்தால்!

நீ சத்தமிடும் நேரங்களில்
எல்லாம் முத்தத்தால்
நிரப்ப வேண்டும்!

**லி.நௌஷாத் கான்**

அதே நர்சரியில்தான்
நானும் தொட்டி மண்
செடி வாங்கினேன்.
உன் வீட்டில் பூத்துக்
குலுங்குகிறதே.
என் வீட்டில்
வாடி நிற்கிறதே.
வாயேன்..



ஒரு பார்வை
ஒரு ஸ்பர்சம்
உயிர்த்தண்ணீர்
ஊற்றி விட்டுப்
போ.

**ரிஷபன்**

## கவலை

எல்லாருமே பழகிவிட்டார்கள்
யாருடனும் பழகாமல்
இருப்பதற்கு.

எல்லாருமே முடிவு
கட்டிவிட்டார்கள் யாருக்குமே
உதவலாகாதென்று.

எல்லாருமே சிரித்துக்
கொள்கிறார்கள்
எந்த வருந்தவேண்டிய
விஷயத்துக்கும்.



எவருக்குமே
கவலையில்லை
இதெல்லாம்
எதில்போய்
முடியுமென்று.

**கே. பி. ஜனார்த்தனன்**

## வாசம் -சுவாசம்

உன்னுடன் சேர்ந்து
நடக்கையில் தான் பூக்களின்
வாசம் உணர்கிறேன்..

உன்னுடன் பேசி நடக்கையில்
காலத்தின் இனிமையை
உணர்கிறேன்....

உன்னுடன் இணைந்து
நடக்கையில் தான் கர்வம்
கொள்கிறேன் !

உன்னுடன் இணைந்து
நடக்கையில் உன் நிழலை
கூட மிதிக்க மனம்
வருவதில்லை...

உன்னுடன் அமர்ந்து
பேசுகையில் வெயில்
காற்று கூட தென்றலாய்
தெரிகிறது....

கண்விழித்து
பார்த்தேன்
எல்லாம்
கனவுகளாய்





கலைந்து போகின்றது !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## மந்திரஜாலங்கள்

பூக்கள் மழைப் போல
கையில் விழும் ...
வாசம் இல்லையெனினும்
மலர்ச்சி இருந்தாலும்
உண்மையென நம்பாதே

காலி கண்ணாடிக்
குடுவையில் நீர் மேலெழும்
காட்சி... தெய்வீகம்
எதுவுமில்லை தந்திரம்
மட்டுமே உண்மையென
நம்பாதே

காற்றில் கரைந்த காகிதம்
மீண்டும் காற்றில்
தோன்றும்...
அது அதிசயமில்ல
கண்ணை மயக்கும்
கலை.
உண்மையென
நம்பாதே



அசாத்யமாகத் தோன்றுபவை
விளையாட்டாய் புனையும்
தந்திரங்களை வியப்பாய்...
ரசிக்கலாம்...மகிழலாம்...
உண்மையென நம்பாதே

வானிலிருந்து விழும்
மலர்கள்... போர்வையிலிருந்து
பறக்கும் பறவைகள்...
எளிதில் கிடைக்கும்
செல்வம்... எல்லாம்
கண்களைக் கவரும்
வித்தைகள்...
மந்திரஜாலங்கள் ...


ஒன்றை மட்டும்
நினைவில் கொள்...

மாயை மனம் கவரும்,
உண்மை உள்ளத்தைக்
(உள்ளதை) காப்பாற்றும்.

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

# நூல் விமர்சனம்

நிலா தேடும் ஆகாயம் !
நூல் ஆசிரியர் கவிஞர்
பொள்ளாச்சி குமாரராஜன் !
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
மின்னல் கலைக்கூடம் . 117.
எல்டாம்ஷ் சாலை ..
சென்னை 18.
செல் 9841436213 விலை ரூபாய் 30.




'நிலா தேடும் ஆகாயம் ' நூலின் தலைப்பே சிந்திக்க வைக்கின்றது .ஆகாயத்தில்தானே நிலா தெரிகின்றது . ஆகாயத்தில் நிலா இருந்தாலும் ,நிலா ஆகாயத்தை தேடுகின்றதா ? அருகில் இருப்பதால் கண்ணில் பட வில்லையா? இப்படி பல கேள்விகள் நம் மனதில் எழுகின்றன .நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி குமாரராஜன் மண் பற்று மிக்கவர் .பிறந்த மண் பொள்ளாச்சியை தன் பெயரோடு இணைத்துக் கொண்டவர் .பொள்ளாச்சி என்றதும் நம் நினைவிற்கு வரும் திரு .பொள்ளாச்சி மகாலிங்கம் ,திரு .பொள்ளாச்சி நசன் வரிசையில் கவிஞர் பொள்ளாச்சி குமாரராஜன் அவர்களும் இடம் .பெறுகிறார் .இந்த நூல் இவருக்கு நான்காவது நூல் .

ஹைக்கூ ஆய்வுக் கவிஞர் இனிய நண்பர் , மு .முருகேஷ் அவர்களின் அணிந்துரை மிக நன்று .பதிப்பாளர் பொதிகை மின்னல் இதழ் ஆசிரியர் ,கவிஞர், இனிய நண்பர் வசீகரன் அவர்களின் பதிப்புரையும் ,அட்டைப்படம் ,அச்சு யாவும் மிக நேர்த்தியாக உள்ளன ..பாராட்டுக்கள்.

இயந்திரமயமான உலகில் ஊடகங்களின் ஆதிக்கம் காரணமாக நூல் வாசிக்கும் பழக்கமே வழக்கொழிந்து வரும் நிலையில் நீண்ட நெடிய மரபுக் கவிதைகள் படிக்க பலருக்கு நேரமும், பொறுமையும் இருப்பதில்லை . ஆனால் மூன்று வரி முத்தாய்ப்பான ,ரத்தினச் சுருக்கமான ,சுண்டக்காய்ச்சிய பாலாக உள்ள ஹைக்கூ கவிதைகளை எல்லோரும் விரும்பி படிக்கின்றனர் .நூல் முழுவதையும் ஒரே மூச்சில் வாசித்து .விடுகிறோம் .

கரும்பு தின்ன கூலி தேவை இல்லை .இந்த ஹைக்கூ நூல் படிக்க பரிந்துரை தேவை இல்லை .வாங்கிப் படித்து மகிழுங்கள் .

நம்நாட்டில் ஏழைகளுக்கு குடும்ப அட்டை மூலம் அரிசி இலவசமாக வழங்குகிறார்கள் .பல ஏழைகள் இதனால்தான் உணவு உண்கிறார்கள் .

ஆனால் ஆள்வோர் காய்கறிகள் உள்பட எல்லாப் பொருட்களின் விலையும் மிக அதிகமாக ஏறி வருவதை தடுப்பதே இல்லை .என்பதை உணர்த்தும் ஹைக்கூ .

கனவு தேசம் இது அரிசி இலவசம்
பல மடங்கு காய்கறி விலை !

இன்றைய காதலர்களுக்கு பக்குவம் இல்லை .புரிந்து கொள்ளும் தன்மை இல்லை .அடிக்கடி சண்டை இடுகின்றனர் .செல்லிடப்பேசி வருகைக்குப் பின் அடிக்கடிப் பேசி சண்டை இடுகின்றனர் .புரிதலின்றி தற்கொலையும் புரிகின்றனர் .

காதல் தினம் கொல்லும்
ஊடல்கள் !

உறவுகளிடம் சொல்ல முடியாத தகவலையும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வோம் .நட்பின் மேன்மை அவசியம் சொல்லும் ஹைக்கூ நன்று . பழகப்பழக துளிர்க்கிறது நட்பு ! மரத்திற்கு மழை வேண்டும் .மனிதன் வாழ மரம் வேண்டும் .மனிதன் உண்ணும் உணவு விளைய தண்ணீர் வேண்டும் .தாகம் தணிக்க தண்ணீர் வேண்டும்.மனிதன் உயிர் வாழ தண்ணீர் வேண்டும். மூன்று பங்கு தண்ணீரால் சூழ்ந்தது .உலகம் தண்ணீரையும் தலைவியையும் ஒப்பிட்டு ஒரு ஹைக்கூ .

தாவரங்களுக்குத்
தண்ணீர் எனக்கு அவள் !

எதையும் பேசித் தீர்க்கலாம் .எதற்கும் வன்முறை தீர்வாகாது .எந்த மதமும் வன்முறை கற்பிக்கவில்லை .வன்முறை கற்பித்தால் மதமே அன்று .சிலர் மூளைச் சலவை செய்து மத தீவிரவாதியாக மாற்றி விடுகின்றனர் .அவர்கள் பொதுமக்களுக்கும் உடைமைகளுக்கும் தீங்கு செய்து வருகின்றனர் .அதனை கண்டிக்கும் ஹைக்கூ .

தொடர் குண்டுவெடிப்பு
காஷ்மீர் ஆப்பிள்
உடன் தீப்பொறி !

நம் நாட்டில் கடவுளுக்கு பஞ்சம் இல்லை .ஆனால் .நாட்டில் பஞ்சம் மட்டும் தீர வில்லை .கல்வி நிறுவனங்கள் பகல் கொள்ளை நிறுவனங்களாக மாறி வருகின்றனர் .கல்வி ஏழைகளுக்கு எட்டாக்கனியாகி வருகின்றது .

கல்விக்கடவுள் கோடி
பாவம் கட்டணமின்றி
முதல் வகுப்பு மாணவன் !


நிலா பார்ப்பதற்கு மிகவும் அழகுதான் .கண்டு .ரசிக்கலாம் .பசியோடு இருக்கும் ஏழைக்கு நிலா .இனிப்பதில்லை .அவன் நிலாவை ரசிப்பதில்லை .இயல்பை மிக இயல்பாக பதிவு .செய்துள்ளார் .

பசி படர்ந்தவன்
தேடுவதில்லை நிலா !

ஹைக்கூ கவிதைகள் மூலம் சமுதாய அவலத்தைக் காட்டுவது மட்டுமல்ல .ஜப்பானிய ஹைக்கூ கவிஞர்களைப் போல இயற்கையைப் பாடுவதில் , ஹைக்கூ வடிப்பதில் தமிழ்க் ஹைக்கூ கவிஞர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை மெய்ப்பிக்கும் விதமாக ஹைக்கூ கவிதைகள் உள்ளன .மூன்று வரி அல்ல ! அல்ல ! மூன்றே சொற்களில் அழகிய ஹைக்கூ .

குடை கனத்த மழை !

கையில் குடை இருந்தாலும் கனத்த மழை பெய்தால் கடந்து செல்ல முடியாது என்பதைக் காட்சிப் படுத்தி உள்ளார் .நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி குமாரராஜன் அவர்களுக்கு பாராட்டுக்கள் வாழ்த்துக்கள். தொடர்ந்து எழுதுங்கள் .




நான் போதுமென்று
ஒரு போதும் சொல்லப்
போவதில்லை அடங்காத
இதயம் இன்னும்,
இன்னுமென
துடித்து கொண்டே தான்
இருக்கும் அமுல் பேபி
கன்னங்கள் சிவக்கும் வரை,
உதடுகள் வலிக்கும் வரை
நிறுத்தி விடாதே
உன் முத்தங்களை!

அரவணைத்து கொண்டு
உறங்குவதில் ஓர் அமைதி
இருக்கத் தான் செய்கிறது!
கோபம் வேண்டாம்
கொஞ்ச நேரத்திற்கு
மௌனமாக இரு
வன்மங்களை எல்லாம்
வட்டியும் முதலுமாய்
கட்டிப்பிடித்து
முத்தங்களாய் தீர்த்து விடு!

மௌன மொழி பேசும்–என்
தலைவியே இரவிலாவது
சப்தமிட்டு பேசு முத்தத்தால்!

நீ சத்தமிடும் நேரங்களில்
எல்லாம் முத்தத்தால்
நிரப்ப வேண்டும்!

லி.நௌஷாத் கான்



## வேலை

நான் வேலையில்லாத
நேரங்களில் உன்னை
நினைக்கிறேன்!
நீயோ என்னை
நினைப்பதையே
ஒரு வேலையாக
வைத்திருக்கிறாய்!

## அழகல்ல.... பேரழகு!

நீ எது செய்தாலும்
இத்தனை அழகாக
இருக்கிறதே!
நீ காதல் செய்தால்
இன்னும் எத்தனை அழகாக
இருக்கும்!

## கண்ணாமூச்சி

சுடிதார் துப்பட்டாவை
இழுத்துப் போர்த்துகிறாய்!
எனக்குக்கண்ணாமூச்சி
ஆட்டம் காட்டுகிறது
உனது அழகு!

## போய் வருகிறேன்!

போய் வருகிறேன் என்று
என்னைத் தவிர
எல்லோரிடமும்
சொல்லி விட்டு நகர்கிறாய்!
அது சரி நீ செல்லாமல்
என் மனதிலேயே இருப்பது
உனக்கும் எனக்கும் மட்டும்
தானே தெரியும்!

## சிணுங்கல்

உன் சிணுங்கல்களில்
அப்படி என்ன தானடி
வைத்திருக்கிறாய்!
என்னை வாரிச் சுருட்டி
அப்படியே எடுத்துக் கொண்டு
போய் விடுகிறதே!

## கா த ல்

என்னை மோகக் கயிற்றால்
கட்டி வைத்திருப்பது நீ!
ஆனால் யார் யாருடனோ
சுற்றுகிறாயாமே நீ என்று
எகத்தாளத்துடன்
என்னைக் கேட்கிறாய்?

## சொத்து

அங்கங்கே தேகத்தில்
வைத்திருப்பதுடன்
மட்டுமல்லாமல்
மனதிலும் வைத்திருக்கிறாய்!
அந்தக் கொழுப்பு என்ன
உனக்குப் பரம்பரை
சொத்தாடி?!

## கேள்வி


என்ன தான் நினைத்துக்
கொண்டிருக்கிறாய்?
என்று அடிக்கடி கேட்கிறாய்!
உன்னைத்தான் நினைத்துக்
கொண்டிருக்கிறேனென்று
உனக்கு எப்பொழுது தான்
தெரியப் போகிறது?!

## காதல்காரி

நீ கொஞ்சம் வித்தியாசமான
காதல்காரி தான்!
உனக்குக் கோபம் வந்து
விட்டால் நீ என் கனவில் கூட
வருவதில்லை!

## உண்மை

நீ கட்டுக்கடங்காதவள்
என்று எல்லோரும்
நினைக்கிறார்கள்!
என் காதல் உன்னைக் கட்டிப்



போட்டிருக்கும்
உண்மையைப்
பற்றி
அவர்களுக்
கெல்லாம்
என்ன
தெரியும்?!

**முத்து ஆனந்த்** வேலூர்






## இயற்கை வளம் காப்போம் !

இயற்கையை மனிதன் சிதைக்கச் சிதைக்க
இயற்கை மனிதனைச் சிதைக்கும் உணர்க !

ஏரி குளம் கண்மாய் கால்வாய் ஆக்கிரமிப்பு
எங்கு செல்லும் மழை நீர் சிந்திப்பீர் !

குளம் புதிதாக வெட்டாவிட்டாலும்
குளத்தைத் தூர் வாரி புதுப்பிக்கலாமே !

ஏரி புதிதாக கட்டாவிட்டாலும்
ஏரியின் கரை உயர்த்தி இருக்கலாமே !



விளைநிலங்களை வீட்டடி மனையாக்கும்
விபரீத எண்ணங்களுக்கு முடிவு கட்டுக !

நீர் வழிகளின் ஆக்கிரமிப்பு உயிருக்கு உலை வைப்பு
நீர் இனியாவது உணர்ந்து நடந்தால் சிறப்பு !

பணத்தாசையால் இயற்கை அழித்தல் கேடு
பண்பாக நடந்து இயற்கை வளம் காப்போம் !

கவிஞர் இரா .இரவி !

## பாதை மாறிய மனிதன்

" மனிதனை மனிதனே
தீவிரவாத செயலால் கொன்று
குவிக்கும் தீவிரவாதி ..."

ஆறு அறிவு மனிதனுக்கு
மட்டுமே மனிதம்
மனிதநேயம் இல்லாமல் ..."

மிருகத்தை போல்
கொன்று குவிக்கும் கல்
நெஞ்சம் காட்டு மிராண்டி
செயல் தீவிரவாதம் ..."

ஆயுதங்களும்
வெடி மருந்துகளும்
தான் வாழ்க்கை
என்றால் அன்பும்
பாசமும் எதற்கு ... "

நாளுக்கு நாள் உயிரை
கையில் பிடித்து

வெளியில் செல்ல வேண்டும்
என்றால்...."

தாய்மை என்ன பாடுபடும்
தீவிரவாதி என்று பிறர்
சொல்ல கேட்க அந்தத்
தாயும் செத்து உயிர்
வாழ்வாளே .. "


இறைவன் வாழத்தான்
இயற்கையை பூமியை
வானத்தை நிலவை சூரியனை
கொடுத்தான் ...."

அதை சொர்க்கமாக்குவதும்
நரகமாக்குவதும்
மனிதனின் சுயநலம்...."



மனித மனம் பண்பட
இன்றும்
பல புத்தர்கள் தேவை ..."

ஆர். சீதாராமன்
சீர்காழி



## தேங்காய்

மூடியுள்ள ஓட்டுக்குள்ளே
தேங்குமிளம் நீரினாலே..
தேங்காய் என்றழைப்பார்
என்னை.. ஆசையுடன்
ஈன்றவள் பெயர் தென்னை.!

வாங்கும் கழு நீரைக்கூட
வாய் ருசிக்கும் நீராயாக்கி..
வாரி வாரி தந்தாள் என்
அன்னை.. வாழும்போது
தேங்காய் என்பார் என்னை..

தென்னை பெற்ற என்னைப்
பற்றி.. தேங்காய் நான்
பேசுவதை.. செவிமடுக்க
வேண்டுமென உன்னை..
தேங்காய் நான் கேட்டுக்
கொள்வேன் இங்கே.!

அறைத்தாலும் சட்டினியாய்
நானாவேன் அருந்தமிழர்
இட்டலிக்கு துணையாவேன்..
நார்ாக உரித்தாலும்
மகிழ்வுடனே..
கயிறாவேன்.!கட்டிலுக்கு
மெத்தையாவேன்!

பிள்ளையார்க்கு
உடைத்துப்பார்..

பெரும் துன்பம் சிதறி ஓடும்..
எல்லோர்க்கும் எளியவன்
நான்.. என் பெயரே
தேங்காயாம்.!

தலையிலே தேய்க்கின்ற
எண்ணையாகி..
தாகத்தைத் தீர்க்கின்ற
இளநீராகி.. தென்னை பெற்ற
பிள்ளையெனப் பெருமை
பெற்றேன்.! உள்ளவரை
உதவுவதே எனது நோக்கம்.!

கல்யாண வீட்டினிலே
முன்னிருப்பேன்..
காலமெல்லாம் வாழ்கவென
வாழ்த்துரைப்பேன்.. இல்லாத
இடமில்லை இந்த நாட்டில்..
கடைத்தேங்காய் என்றபெயர்
பெற்றேனப்பா..!

பாங்காக வாழும் வழி
ஒன்றுரைப்பேன்..



தேங்காமல் ஓடுகின்ற
நதியாய் மாறு..
தேங்காய்.. ஓரிடத்தில்
நீ தேங்காய்.!
ஓடு.! தேங்காய்
என் கதைதன்னை
நினைத்துப் பாடு.!

வே.கல்யாண்குமார்.



## இற்கையோடு வாழ்வோம்

இயற்கையை ஒரு
இனிமையின் பிறப்பிடம்
அதை பாதுகாத்தால் அது
நம் நெஞ்சோடு இணைந்து
மகிழ்ச்சியாகும் ..
நெகிழியை ஒழித்து
இயற்கையை பாதுகாப்பது நம்
கடமை என்றோ
சுத்தம் சோறு போடும் என்று
அறிந்தும் நித்தம் அதை
கடைபிடிக்காமல் இருப்பது
நியாயமோ ... மரம் நடுவோம்
மண் வளம் காப்போம்
தினம் நீரூற்றி
மரத்தினை வளர்ப்பது
எதிர்கால சந்ததியினரை
உற்சாகப்படுத்துவது அன்றோ
இயற்கையை அனுபவிப்போம்



இயற்கை
போற்றுவோம்
இயற்கையை
காப்போம்

உஷா
முத்துராமன்

## பாசம்

பாசம் வைத்த பின்னே
பரிதவித்துப் போனேன்

எதிர்வீட்டுக் குட்டிப்பையனின்
குமிழ் போன்ற

பொக்கைவாய்ச் சிரிப்பில்
சொக்கிப் போனேன்

கையை நீட்டத் தாவி வந்து
இடுப்பில் அமர்ந்தான்

இரவுமில்லை பகலுமில்லை
எப்போதும் என்னை

பாட்டி என்றழைத்து
பருக்கைப் போன்ற

பற்களைக் காட்டி மெல்ல
மழலையில் பேசி

முத்தமிழில் கொஞ்சி
முத்தமழை தந்து

மூழ்கடித்தவன் நாளை
என்னை விட்டு செல்கிறான்

அவன் அப்பாவிற்கு மாற்றல்
ஆகி விட்டதாம்

நிஜப்பேரன் பேத்திகள்
வெளிநாட்டில்



நிழலென
வந்தவன்
நினைவைத்
தந்து
சென்றுவிட்டான்

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

## நீங்காதே...நிலவே...

உண்மை அன்பில் புதைந்து
போன பிறகு...

பாதை மாற்றமும்...பார்வை
திருப்பமும்..

உயிர் கொல்லும் வலிகள்...

உயர் மின்னழுத்தக்
கொல்லிகள்...

சிறகின்றி பறந்தவன்...
வீழ்ச்சியில் உழல்கிறேன்..

காற்றில் மிதந்தவன்
மூச்சுமுட்டி வேகிறேன்...

நீ போனால் என்ன?

என் காதல்...அரவணைக்
கிறது என்னை...



மறு
சுவர்க்கமாய்
வடிவமைக்
கிறது....
மண்ணை...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

## உன்னை நினைத்து....

உன்னை நினைத்துக்
கொண்டிருக்கிறேன்!
உன்னைத்தான் நினைத்துக்
கொண்டிருக்கிறேன்!
உன்னையே நினைத்துக்
கொண்டிருக்கிறேன்!
உன்னை மட்டுமே நினைத்துக்
கொண்டிருக்கிறேன்!

## அடேங்கப்பா....!

இது வரையில் நீ
குழம்பு ரசம் தான்
நன்றாகத் தாளிப்பாய்
என்று நினைத்துக்
கொண்டிருந்தேன்!
நீ சில சமயங்களில்
என்னையும் கூட
நன்றாகவே தாளிக்கிறாய்!

## ரகசியம்

நமக்குள் எந்த ரகசியமும்
இல்லையென்று
நாம் இருவரும் ரகசியமாகப்
பேசிக் கொண்டிருக்கிறோம்!
இதைக் கேட்டுக்
கொண்டிருந்த ரகசியம்
தனக்குள்ளாகவே
ரசித்துச் சிரித்தபடி
ரகசியமாய் நகர்கிறது!

## உண்மை

உன் அப்பன் உன்னைப்
பாழுங் கிணற்றில் தள்ளி
விட்டதாகப்
புலம்புகிறாய்!
நான் உன்னைக்
காதலிக்கும்
உண்மை
அவருக்கும்





தெரிந்து விட்டதோ?!

## பார்வை

பற்ற வைக்கிறது
உன் பார்வை!
தீபமாய்ச் சுடர் விடுகிறது
என் காதல்!

## தவிப்பு

என்னிடம் எதையோ சொல்ல
நினைத்துத் தவிக்கிறாய்!
நீ சொல்ல நினைப்பதை
யெல்லாம் தான் உன்
கண்கள் சொல்லி விடுகிறதே
பிறகென்ன?!

## வேட்டை

பல முறை முயற்சி செய்தும்
இது வரை நான் ஒரு முறை
கூட உன் வேட்டையிலிருந்து
தப்பித்ததேயில்லை!

## மயக்கம்

உன் நினைவின் முன்னே
எல்லா நினைவுகளும்
எனக்குத்தவிடு பொடியாகி
விடுகின்றன அன்பே!

முத்து ஆனந்த் வேலூர்

## கர்வம்

கர்வம்! வெற்றியில் தோன்றும்
உணர்வு

மனதை அலைப்பாயச்
செய்யும் மற்றவர் மனம்
வருந்திடச் செய்யும்

உள்ளே வந்ததும் எதிர்மறை
எண்ணங்கள் எழுந்து தனது
ஆதிக்கம் செய்யும்

ஒருநிலை கொள்ளா நிலை
தடமாறும் எதிரிகளை
சம்பாதித்து தோழமை
அழிக்கும்

உண்டாகும் மகிழ்ச்சி கானல்
நீராகும் தலைக் கனம் வந்து
தத்தளிக்கும்

பொய்யைக் கூட நிஜமென
சொல்லும் உண்மை அறிய
பொறுமை இன்றி

வாழ்க்கைப் பாதை
மாறித்தான் போகும்
சான்றோர் சொல் மதியா
மந்தம்

கொண்டே தானே சரியென

நினைக்கும் அக்கம் பக்கம்
பார்க்க பிடிக்காது

உறவு மறக்கும் உற்றார்
துறக்கும் கர்வம் கொண்டால்
வளரும் வன்மம்

நல்லவை கெட்டவை பிரித்து
பார்க்கா

நய வஞ்சகம் செய்யத்
தூண்டும்

வெற்றியை கொண்டாடி
கொஞ்சம் மகிழ்ந்து

கிடைத்ததை தக்க வைக்க
எண்ணி முயற்சி செய்து
மீண்டும் மீண்டும்

வெற்றிப் படியேற
பற்றும் கைப்பிடி
இலக்கு கண்டு கனவு
பலிக்கும்

இதையறிந்தவர்
தோல்வியுறாதார்
இன்புற்று வாழ இதுவே
வழியாம்

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

## குழந்தைகள் நலன் காப்போம்!

நேரிசை வெண்பா!

இற்றைக்குழந்தைகள்
நாளைத்தலைவர்கள்

பற்றுடன் கண்டாலே
பாசம்தான்...சற்றும்

குறையாமல் பார்த்திடுவோம்
கூர்ந்தே அவரை

நிறைவாகக்காண்போமே
நேர்ந்து!

ஒற்றுமை யோடே
ஒருங்கு கலந்திடப்

பற்றினைக்கொண்டே
பரிவினைக்..கற்றும்

விளங்கிட நல்மழலை
வீறுகொண்டே காண

களிப்புடன் காண்போம்
கனிவு!

குழந்தைக்கனவையே
கூர்ந்தாய்ந்து நாளும்

அழகாய் வளர்த்தே
அருளை... ஒழுக்கத்தை



நன்கு
கொடுத்தேதான்
நாளும்
விழிப்புணர்வில்

என்றுமே
நல்கல் இனிது!

முனைவர்
இராம.வேதநாயகம்.
திருவண்ணாமலை.



## ஒற்றை இலை:

ஒற்றை இலையாய்
ஒட்டிய இலையே!
ஒற்றைதான்நானும்
உன்னைப் போலவே!
ஒற்றை மரமாய்
ஒதுங்கி நின்றேன்
முற்றும் துறந்து
முழுவதும் ஒதுங்கி
பற்றினை அறுத்தேன்
பந்தம் மறுத்தேன்!

முற்றியதாகவே
பழுத்துப் போனேன் !
உற்றவர் ஒருவரும்
இல்லை என்பதில்
குற்றம் இலையே
குறைகள் இலையே
ஏற்றம் இறக்கம்
இருக்க வேண்டும்
ஏற்றம் இன்றி இறக்கம்
வரினும் சீற்றம் இல்லை
வாழ்க்கை பற்றியே!!

முற்றிலும் இலைகள்



மறுபடித்
துளிர்த்திட
பற்றினைப்
பற்றுடன்
பற்றிக்
கொள்வேன்

வைரமணி
சென்னை

## நினைவின் குடை

வெயிலோ மழையோ
தலை மறைத்து
இரண்டுமற்ற பொழுதில்
கைப்பிடித்து

மூன்றாம் காலெனத்
தன் ஒற்றைக் காலூன்றி
தாத்தாவோடு அன்றாடம்
வீதிவலம் முடித்துத்
திரும்பிய குடை
முற்றம் தாண்டி
வீட்டிற்குள் நுழைய
விரும்பியதே இல்லை.

தாத்தா மறைந்த
அத்துயர வீட்டில்
யார் கண்ணிலும்
படாமல்
எங்கோ மறைந்து
போனது

நாள் முழுதும்
தன்னை ஏறெடுத்தும் பாராத
அவரைச்சகியாதது போல.

தாத்தாவின் முதல் நினைவு
நாளின் பொருட்டு
ஒருக்களிக்கப்பட்ட
வீட்டின் பரணில் கண்பட்ட
அக்குடை குற்றுயிராய்
இறக்கப்பட்டது.

இத்தனை நாள்
பிழைத்துக் கிடந்த
அக்குடையை வியந்தவர்கள்



மறுநாள் எவ்வித
விசனமுமின்றி
வீட்டைவிட்டு
அனுப்பி வைத்தார்கள்
நினைவின் மழைக்கு
நினைவின் குடை
போதும் என்பது போல.

கீர்த்தி

## கேள்விகள் பத்து !

1–உங்களுக்கு சமைக்க
தெரியுமா ? "

2 –சப்பாத்தி புரோட்டா
வட்டமாக சாஃப்ட்டாக
செய்ய தெரியுமா ?"

3–டூ–வீலர், கார் ஓட்ட
தெரியுமா ?

4 –உங்களுக்கு சொந்தமாக
எத்தனை டூவீலர், கார்
உள்ளது?"

5 –உங்களின் வீடு
எத்தனை சென்ட் நிலத்தில்
அமைந்துள்ளது ?"

6 –நீங்கள் செய்வது
சொந்தத் தொழிலா ?
தனியார் நிறுவனமா ?
அரசு தொழிலா ?

7–யாரையும்
காதலித்தது உண்டா ?

8 –தற்போது எடுக்கப்பட்ட
ஃபுல் பாடி மாஸ்டர் செக்கப்
ரிசல்ட் உள்ளதா ?"

9 –புகை , மது பழக்கம்,
நான் வெட்ஜ் உண்ணும்
பழக்கம் உள்ளதா ?

10 –தினமும் வாக்கிங்,
யோகா செய்வதுண்டா ?

மேற்கண்ட கேள்விகளுக்கு
ஆம் என்றால் ஆம், இல்லை
என்றால் இல்லை என்று
குறிப்பிட்டு டிக் செய்யவும் .
எங்களுக்கு திருப்தி என்றால்
மட்டுமே பெண் பார்க்க
உங்களை அழைப்போம்...
திருமணத்தை எதிர்நோக்கி
இருக்கும் ஆண்களுக்கு



வரும் காலங்களில்
இப்படி ஒரு சோதனை
அமைந்தாலும்
அமையலாம் !
எல்லாம் நன்மைக்கே !

எம்.பி.தினேஷ்.
கோவை



## இதய வாசல்

பனிப் பருவத்தில்
பாலைவனமாய்
வெடிப்போடி கிடக்கும்
என் உதட்டை பார்த்து
எல்லோரும் சொல்கிறார்கள்
பனி வெடிப்பு என்று
எனக்கு மட்டும் தானே
தெரியும் அது என்னவனின்
முத்த வெடிப்பு என்று

கானல் நீரில் அங்கங்கே
ஆயிரம் சூரியன்
உன் கண்ணில் தென்படலாம்
ஆனால் என் கண்ணில்
தென்படும் ஒரு சூரியன்
நீதானே

நீ அழகாய் ரசிக்கும்

வாசல் பூக்கோலம்
காற்றில் கலைந்து,
மழையில் நனைந்து
அழிந்துவிடும்
முன்வாசலும் இல்லாத,
பின்வாசலும் இல்லாத
உன் இதய வாசலில்
நான் போட்டிருக்கும்
காதல் கோலம்
எக்காலத்திலும் அழியாது
எப்படிப்பட்ட புயலிலும்,
மழை வெள்ளத்திலும்

வாசமில்லா மலரை
ரசிக்கும் ராசனே ...
பூவாசம் வீசும் என்
சுவாச பூக்களை நேசித்து
சுவாசிக்க தெரியாதா

நீயோ... அவள் விரல்
இடுக்குகளில் வழிந்த
பூக்கோலத்தை பார்த்து
எப்பருவத்திலும்
பூத்துக்குலுங்க
நினைக்கிறாய்

உன் மன இடுக்குகளில்
நுழைந்த நானோ...
வெளியே வர மனமில்லாமல்
எக்காலத்திலும்
பூத்துக் குலுங்க
ஆசைப்படுகிறேன்
உனது இதய தோட்டத்தில்
காதல் பூக்களாக

பாரதி முத்து
ஓட்டேரி
வேலூர்



கடவுளே–உன் கால் பிடித்து
கேட்கிறேன் அவள் காதல்
கிடைத்து விட்டது
எங்களுக்கான சாதலை
இன்னும்
ஆயிரமாண்டுகளுக்கு
தள்ளி வைத்தால் என்ன?
இப்பிரபஞ்சத்தில் எவனும்,
எவளும் இப்படி காதலிக்க
வில்லையென உலக மெச்ச
அவளை சலிக்காமல்
இன்னும்,இன்னுமென
காதல் செய்ய வேண்டும்!

நான் போதுமென்று
ஒரு போதும் சொல்லப்
போவதில்லை
அடங்காத இதயம்
இன்னும்,இன்னுமென

துடித்து கொண்டே தான்
இருக்கும் அமுல் பேபி
கன்னங்கள் சிவக்கும் வரை,
உதடுகள் வலிக்கும் வரை
நிறுத்தி விடாதே
உன் முத்தங்களை!

அரவணைத்து கொண்டு
உறங்குவதில் ஓர் அமைதி
இருக்கத் தான் செய்கிறது!

கோபம் வேண்டாம்
கொஞ்ச நேரத்திற்கு
மௌனமாக இரு
வன்மங்களை எல்லாம்
வட்டியும் முதலுமாய்
கட்டிப்பிடித்து முத்தங்களாய்
தீர்த்து விடு!

மௌன மொழி பேசும்–என்
தலைவியே இரவிலாவது
சப்தமிட்டு பேசு முத்தத்தால்!

நீ சத்தமிடும் நேரங்களில்
எல்லாம் முத்தத்தால்
நிரப்ப வேண்டும்!

லி.நௌஷாத் கான்

# வாசகர் கடிதம்

வேளாண்துறையில் புதிய பயணம் மோடி அறிவிப்பு. நிதீஷ் குமார் தலைமையில் புதிய அமைச்சரவை பதவி ஏறபு. சார் படிவங்கள் நிரப்ப தாலுகா மற்றும் கலெக்டர் அலுவலகங்களில் உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டது. மழையின் காரணமாக குற்றால அருவிகளில் குளிக்க தடை செய்யப்பட்டுள்ளது குளிர் காலத்தில் காது வலி வராமல் தடுப்பது எப்படி என்ற கட்டுரை சிறந்த விழிப்புணர்வு. நெல்லையப்பர் கோவிலில் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. இந்தியாவின் புதிய இ பாஸ்போர்ட் வெளியிடப்பட்டது.

இன்றைய புதுக்கவிதைகள் அனைத்தும் சூப்பராக உள்ளது. கோவா சுற்றுலா கட்டுரை நான் ஏற்கனவே எழுதி வெளி வந்தது. சுற்றுலா கட்டுரை வெளியிடும்போது அதை எழுதியவர் பெயரையும் சேர்த்து வெளியிடலாமே. கோவையில் 214 கோடியில் செம்மொழி பூங்கா ஏற்படுத்தப்படும். சபரிமலையில் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது முன்பதிவு செய்யாதவர்களும் வருவதால் கூட்டம் அதிகமாக உள்ளது தாய்லாந்தில் இருந்து 1500 இந்தியர்கள் நாடு திரும்பினர். ரஷ்யாவில் புதிதாக இரண்டு இந்திய தூதரகங்கள் திறக்கப்பட்டது. ஏ ஐ சொல்வதை முழுமையாக நம்ப வேண்டாம். என சுந்தர் பிச்சை வேண்டுகோள். இன்றைய செய்திகள் அனைத்தும் அருமையாக இருந்தது. கட்டுரைகளும் கவிதைகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. தெய்வம் இதழில் வந்துள்ள அனைத்து கட்டுரைகளும் பிரமாதம். தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். மீண்டும் நாளை சந்திப்போம்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

இந்தியா வேளாண் துறையில் புதிய பாதையில் பயணம்#மாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு
காதலிக்க மறுத்ததால் 12ம் வகுப்பு மாணவியை வெட்டிக் கொன்ற இளைஞர் கைது
வங்கக் கடலில் 24ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு
செரிமானத்தை மேம்படுத்தும் வெந்தயம்
டிஜிட்டல் கைது: சென்னையைச் சேர்ந்த மூதாட்டியிடம் 24 லட்சம் மோசடி ஐகோர்ட்டில் குற்றவாளி கூண்டில் நின்றதை வீடியோவாக எடுத்து ரீல்ஸ் வெளியிட்ட இளைஞர் கைது
பள்ளிகளில் தண்ணீர் தேங்கக் கூடாது: அமைச்சர் அறிவுறுத்தல்
இந்தியாவின் புதிய இ பாஸ்போர்ட்#பாதுகாப்பு சிறப்பு அம்சங்கள் உள்ளன
சர்ச்சைக்குள்ளான தனுஷ் அட்ஜஸ்ட்மெண்ட் விவகாரம்#நடிகை மான்யா ஆனந்த் விளக்கம்
பெண் குழந்தைக்கு தந்தையானார் நடிகர் பிரேம்ஜி
புதுக் கவிதைகளின் அணிவகுப்பு அபாரம்
நூல் விமர்சனம் விமரிசை
வாசகர் கடிதங்கள் திகட்டாதவை
வாக்குச் சாவடி நிலை அலுவலருக்கான ஊதியம் ரூ.6000லிருந்து ரூ.12000 ஆக உயர்வு
மது போதையில் ரயிலில் செல்வோரை மடக்கிப் பிடிக்க போலிசார் தீவிரம்
மூன்றாம் தலைமுறை நெல் நடவு இயந்திரங்கள் அறிமுகம்#இயற்கை உரங்கள் பயன்படுத்துவதையும் கொண்டு வந்தால் மகிழ்வோம்
கோவையில் ரூ.214 கோடியில் செம்மொழி பூங்கா#முதல்வர் ஸ்டாலின் 25ந் தேதி திறந்து வைக்கிறார்
அகர் பத்தி தயாரிப்பு பயிற்சி சென்னையில் நடக்கிறது
ஆந்திராவில் ஒருங்கிணைந்த நடவடிக்கை#ஐம்பது மாவோயிஸ்ட்கள் கைது
ராகுலின் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக 272 பேர் தேர்தல் ஆணையத்திற்கு கடிதம்
அல்ஃபலா குழுமத்தில் கணக்கில் வராத ரூ.415 கோடி பணம்# அமலாக்கத் துறை
உலகக் கோப்பை குத்துச் சண்டை ஃபைனல்ஸ்#இறுதிச் சுற்றில் எட்டு இந்தியர்கள்
ரஷியாவில் புதிதாக இரண்டு இந்தியத் தூதரகங்கள் திறப்பு
ஏஐ சொல்வதை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம்#சுந்தர் பிச்சை
ஈக்வடார் பேருந்து விபத்தில் 21 பேர் உயிரிழப்பு
ஷேக் ஹசீனா அறிக்கைகளை ஒளிபரப்பக் கூடாது#ஊடகங்களுக்கு வங்க தேச அரசு எச்சரிக்கை
ரஷியாவுடன் வர்த்தகம் செய்தால் 500% வரி#வெள்ளை மாளிகையில் பிரம்மாண்ட விருந்தளித்த அதிபர் டிரம்ப்
உத்தியாக்விக் நகருக்கு சூரியன் பிரியாவிடை: இனி 65 நாட்கள் முழுவதும் இருள்தான்
லெபனானில் பாலஸ்தீன அகதிகள் முகாமின் மீது இஸ்ரேல் தாக்குதல் #13 பேர் உயிரிழப்பு



**- பி. சுரேகா**
சென்னை

---

வணக்கம். 20.11.25 அன்று தமிழ்நாடு இ பேப்பரின் முதல் பக்கத்தில் இந்தியா வேளாண் துறையில் புதிய பாதையில் பயணம் செய்கிறது என்ற பிரதமர் மோடி அவர்களின் பேச்சைக் கேட்டு பெருமிதமாக உணர்ந்தேன். இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக இருக்க எனக்கு உதவியது. திருக்குறளை அதன் பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். உலக. தரம் நிறைந்த நீச்சல் குளம் திறந்த செய்தி மிகவும் அருமையான செய்தி பாராட்டுக்கள். குளிர்காலம் என்றாலே காது வலியால் சிலர் அவதிப்படுவர். குளிர்காலத்தில் காது வலி வராமல் தடுக்க நல்ல வழிமுறைகளை சொன்ன நலம் தரும் மருத்துவ பகுதிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். நெல்லையப்பர் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழாவில் சுவாமி அம்மன் மறு வீடு பட்டினப்பிரவேசம் வீதி உலா என்ற திருநெல்வேலி செய்தி மிகவும் அற்புதமாக என்னை கற்பனையில் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்று விட்டது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் தீன் தயாள் குப்தா அவர்களின் வரலாறு அவருடைய கருப்பு வெள்ளை புகைப்படம் பல சரித்திர கதைகளை என்னுடன் பேசியது போல் இருந்தது ஆரவாரம் இல்லாத பல்சுவை களஞ்சியம் பகுதி பல ஆனந்தமான செய்திகளையும் மீம்ஸ் விடுகதையும் ஜோக்கையும் எனக்கு பரிமாறி உற்சாகப்படுத்தியது. வாங்க சம்பாதிக்கலாம் பகுதி மிகவும் அற்புதம் இது போன்ற முன்பே தெரிந்திருந்தால் நாம் சுயமாக தொழில் செய்து இருக்கலாம் என்ற ஒரு ஆவலை ஏற்படுத்திய பகுதியாக எண்ணி படிக்க வைத்தது. நம் மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நூறாவது பிறந்தநாள் கொண்டாட்டம் படிக்கும் போது மிகவும் அற்புதமாக இருந்தது பாராட்டுக்கள்.

கோவா ஒரு அற்புதமான கடற்கரை. அதை இது வரை பார்த்ததில்லை. ஆனால் சுற்றுலா பக்கத்தில் வந்த பயணிகளின் சொர்க்கம் கோவா கடற்கரை என்ற செய்தியை படித்ததும் கண்டிப்பாக வாழ்க்கையில் ஒரு முறை அந்த கோவா கடற்கரைக்குச் சென்று நம் கால்களை அந்த கடல் அலையில் நனைக்க வேண்டும் என்ற ஒரு ஆர்வம் ஏற்படுத்திய செய்தி. கிரைம் கார்னர் படிக்கும்போது எல்லாம் பல நல்ல தகவல்களையும் விழிப்புணர்வு செய்தியையும் சொல்வது போல இருப்பதால் ஆர்வமுடன் அதிலுள்ளவற்றை படித்து தெரிந்து கொள்ள முடிகிறது. ரஷ்ய நாட்டில் புதிதாக இரண்டு இந்திய தூதரகங்கள் சித்திரப்பு என்ற செய்தி மிகவும் நல்ல தகவலாக எண்ணி படிக்க வைத்தது. ஏ ஐ சொல்வதை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம் என்று சுந்தர் பிச்சை அவர்கள் சொன்ன தகவலை படித்ததும் மனதுக்குள் ஒரு நிம்மதி வந்தது. இன்று ஊடகங்கள் பல தேவையில்லாத செய்திகளைப் பரப்புவதால் அவற்றையெல்லாம் நம்பி விடுகிறோம். இப்படி நம்ப வேண்டாம் என்று உறுதியுடன் சொல்லும் செய்தியை படிக்கும் போது மனதுக்குள் ஒரு சிறு தன்னம்பிக்கை வருகிறது. விறுவிறுப்பான வியாழக்கிழமை விடிய என் கையில் அலைபேசியில் தமிழ்நாடு இ பேப்பரின் வாசகங்கள் அடங்கிய நாளிதழும் வர அற்புதமான விடியலை ஆர்வமுடன் வரவேற்று ரசித்து படித்தேன் இவற்றை தவறாமல் செய்யும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**


















LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்



அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர் 100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிகை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI..
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599


WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

## டிரைவர்கள் தேவை

சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.

ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்

தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.

**ACCOUNTANT**
Tally knowledge must

**OFFICE STAFF**
+2 or Degree

SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.
93676-77779

## WANTED

- Arc-Welder-
- Compressor Air Tank-6
- Gas-Welder Compressor
- Air Driyer-5
- Service-Engineer-
- Compressor-7
- Helper-3
- Compressor Fitter-2

**Jayam Equipments**
Ganapathy,
Coimbatore-06
9944642406

## WANTED

We are Looking For
**BUSINESS PARTNERS**
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
98945 72840


Happy Anniversary
MR.BADHRI-MRS.PRABHA

## ஆட்கள் தேவை

- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெபிள் ஷூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் காண்ட்ராக்ட்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome

jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

## MACHINE REPAIR TECHNICIAN WANTED

Construction Company in
**CALICUT, Kerala**
requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.
GOOD SALARY
Accommodation Available
85938 12049

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
connecting emotions... Globally
A Brand of NexGen Logistics Pvt-Ltd

## International Courier Service

ஆண் / பெண்
வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

MARRIAGE Anniversary

அன்னூர் - பிரியா

## மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்

விகாஸ் மந்திரா பள்ளி அடுத்து
DTCP & RERA
அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்
1200 - 2400 சதுர அடி
அனுக்ரஹா
தொடர்புக்கு: 90477 34343

## ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள

கம்பெனிக்கு
**50 Staff**
தங்குவதற்கு Building
வாடகைக்கு தேவை
97899 85835 / 79046 02553

## LAND FOR SALE

COIMBATORE PEELAMEDU
GV RESIDENCY 4.25 cents,
RAMANATHAPURAM
KRISHNA COLONY
5.50 and 8 and 11Cents
RAMANATHAPURAM
NEAR JUNCTION
1.10Acre & 4Acre
Broker Excuse
Contact: R.Sasikumar
81242 63136

## New House for Sale

@ EB Colony, Veerapandi Pirivu
2BHK House
2.7 cent - North Facing
1000 sq.ft
9751041250

## வள்ளியூர் NH அருகில்

வீட்டுமனை 5 செண்ட் ரூ.2 லட்சம்
வீட்டுமனை 4 செண்ட் ரூ.4 லட்சம்
வள்ளியூர் பூங்கா நகர்
5 செண்ட் ரூ.45 லட்சம்
9940 20 7778

## OMR GOLDEN CITY ALERT!

**THIRUPORUR**
Sold Out in 2019 - Limited Resale Plots Now Open!
Starts : Rs.13 Lacs
90% Bank Loan
Call: 9962 888 888

## Commercial Building for Rent

**THIRUNINDRAVUR**
Main Road 3000Sft, 2nd Floor
Suit for Gym Etc.
**REDHILLS - ORR**
Main Road 2500Sft, Ground Floor
(Via Redhills to Thiruvallur)
Suits for Showroom, Restaurant.
98412 38854

## கட்டிடம் விற்பனைக்கு

பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு
மாத வாடகை வருமானம் ரூ.50,000
CONTACT
98420 14702

## குடோன் வாடகைக்கு

நீலாம்பூர்
கதிர் காலேஜ் ரோட்டில்
500,1000,1600,2600 சதுரடி
(EB 50HP)
குடோன் வாடகைக்கு
98941 09560

## 2 BHK FIRST FLOOR FOR RENT

DVD COLONY, KOTTAR
MARBLE FLOOR
24 HOUR WATER
9840741033

## ADVERTISE WITH US

CONTACT US
9438610756

## JOB VACANCY

- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

**AMRIT MEDICAL CENTRE**
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm

## ஆட்கள் தேவை

திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.

1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்

தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
Ct: 93800 72095 / 98416 46097

## WANTED EXECUTIVES

Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999® BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

## அன்ஜூமன் இ-ஹிமாயத்-இ-இஸ்லாம்

ஆட்கள் தேவை

துப்புரவு பணியாளர்
தோட்டக்காரர், தச்சர்
சமையல்காரர்
உதவி சமையல்காரர்
சமையலறை உதவியாளர்

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் நேரில் அணுகவும். 15, 16 & 17.09.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை

16, பி.என்.ரெட்டி சாலை, தி.நகர், சென்னை - 17.
E-Mail : hr@anjhimayath.com



# பல்சுவை களஞ்சியம்




# ராவ் பகதூர் தி.மா.ஜம்புலிங்கம் முதலியார்

ராவ் பகதூர் தி. மா. ஜம்புலிங்கம் முதலியார் ( 22 சூன், 1890 - 28 அக்டோபர், 1970) என்பவர் ஓர் இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், அரசியல்வாதியும், மக்கள் சேவகரும் ஆவார். இவர் நெய்வேலியில் நிலக்கரி இருப்பதை கண்டறிந்து, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் அமைக்க காரணமாகவும், நிறுவனம் அமைய 620 ஏக்கர் விளைநிலத்தை தானமாக கொடுத்தவரும் ஆவர்.




திரு. ஜம்புலிங்க முதலியார் தனக்குச் சொந்தமான நெய்வேலி கிராமத்து விவசாய நிலத்தில் தண்ணீருக்காகக் புதிய கிணறு தோண்டும்போது, கறுப்பு நிற திரவப்பொருள் தண்ணீரோடு கலந்து வந்தது. அதை அன்றைய ஆங்கிலேய அரசின் புவியியல்துறையின் கவனத்துக்கு அனுப்பிவைத்தார் ஆனால் அரசு கண்டுகொள்ளவில்லை. பின்பு இவரே தன் சொந்த செலவில் ஆய்வுகளை மேற்கொண்டு நிலக்கரி இருப்பதை கண்டுப்பிடித்தார். இந்திய நாடு சுதந்திரம் அடைந்த நிலையில், அப்போது முதலமைச்சராக இருந்த இராஜாஜியிடம் அணுகி இந்த நிலக்கரி இருப்பதை பற்றி விளக்கினார். இருப்பினும் அரசு கண்டுக்கொள்ளவில்லை. பின்பு காமராஜர் முதலமைச்சர் ஆனா பின்பு அவர்களை அணுகி அவரிடம் விளக்கிக் கூறியுள்ளார் பின்பு காமராஜர் மூலமாக அன்று பாரத பிரதமராக இருந்த நேருவை சந்தித்து அவரிடம் விளக்கத்தை தந்துள்ளார்.

நிறுவனம் தொடங்க அன்று 150 கோடி ரூபாயை தேவைப்பட்டதால் மத்திய அரசு இதற்க்கு உதவி செய்ய முடியாது என்று கூறிவிட்டது. இதனை அறிந்த ஜம்புலிங்கம் முதலியார் நெய்வேலி நிலக்கரி சுரங்க நிறுவனம் உருவாக்த் தேவைப்படும் 620 ஏக்கர் நிலத்தை காமராஜர் தலைமையிலான மாநில அரசுக்கு தானமாக கொடுக்கிறேன் என்று அறிவித்தார்.

நிறுவனத்துக்கு தேவைப்படும் நிலங்கள் ஜம்புலிங்கம் முதலியார் தானமாக வழங்கியதால் காமராஜர் தலைமையிலான மாநில அரசு, மத்திய அரசின் உதவி இல்லாமல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் அமைத்தது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (NLC) இந்த நிறுவனத்திற்கு தானமாக ஜம்புலிங்கம் முதலியார் கொடுத்த 620 ஏக்கர் நிலத்தின் இன்றைய மதிப்பு 2,500 கோடி ரூபாய் ஆகும்.இன்றைக்கு தென்னிந்தியாவிற்கு தேவைப்படும் மின்சாரம் 90 சதவீதம் அனல்மின் நிலையத்தில் இருந்துதான் உருவாக்கப்படுகிறது.

இந்த தென்னிந்திய அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் பழுப்பு நிலக்கரி அனைத்தும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் இருந்து அனுப்பப்படுகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் அனல் மின் நிலையம் 50,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது. இந்நிறுவனம் பல லட்சம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டுகிறது.

# மீம்ஸ்







# Never Underestimate The Intelligence Of Senior Citizen...

ஒரு 83 வயது பாட்டி, படுக்கையில் படுத்துக்கொண்டு, தனது 87 வயதான கணவரிடம் கூறினார்:

"இங்க பாருங்க, நான் ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன், கார் நிறுத்தும் ஷெட்டின் வாசல் லைட்டை அணைக்கவில்லைன்னு நினைக்கிறேன். நீங்க போய் லைட்டை ஆஃப் பண்ணிட்டு வாங்க".

முதியவர் மிகவும் சிரமப்பட்டு படுக்கையில் இருந்து எழுந்து, ஜன்னலைத் திறந்து பார்த்தார், ஐந்தாறு திருடர்கள் தனது கார் நிறுத்தியுள்ள ஷெட்டின் ஷட்டர் கதவை உடைக்க முயற்சிப்பதைக் கண்டார். பெரியவர் அங்கிருந்து அருகில் உள்ள காவல் நிலையத்தை ஃபோனில் அழைத்தார்:

"ஹலோ......எனது முகவரியை எழுதிக் கொள்ளுங்கள். வீட்டில் நாங்கள் இரண்டு வயதான கணவன் மனைவி மட்டுமே இருக்கிறோம். இப்போது ஐந்து அல்லது ஆறு திருடர்கள் எங்கள் கார் நிறுத்தியுள்ள ஷெட்டின் ஷட்டர் கதவை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு போலீஸ் குழுவை சீக்கிரம் அனுப்புங்கள்."

மறுபக்கத்திலிருந்து காவல் அதிகாரியின் குரல் வந்தது: "உங்கள் முகவரியை குறித்துக் கொண்டோம். எங்களிடம் தற்போது காவலர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஒரு போலீஸ் டீமுடன் தொடர்பு கொண்டவுடன், அவர்களை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறோம்."



இதைக் கேட்டு, பெரியவர் ஏமாற்றம் அடைந்தார், ஆனால் மறுபுறம், ஷட்டர் கதவை உடைக்கும் பணியில் திருடர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, பெரியவர் மீண்டும் காவல் நிலையத்தை அழைத்தார்: "அய்யா..... இப்போது யாரையும் அனுப்ப வேண்டியதில்லை. ஐந்து திருடர்களையும் சுட்டு விட்டேன்" என்று நிதானமாகக் கூறினார்.

போலீஸ் ஸ்டேஷனில் ஒரே பரபரப்பு. ஐந்து நிமிடங்களில், ஒரு போலீஸ் குழு, ஒரு ஹெலிகாப்டர், ஒரு துணை மருத்துவர், மூன்று டாக்டர்கள் மற்றும் இரண்டு ஆம்புலன்ஸ்களுடன், முதியவரின் வீட்டை அடைந்தது.

ஐந்து திருடர்களும் கைது செய்யப்பட்டனர். பின்னர் போலீஸ் குழுவின் தலைவர் பெரியவரை அணுகி கேட்டார், "நீங்கள் அந்த ஐந்து திருடர்களையும் சுட்டுக் கொன்றதாகச் சொன்னீர்கள், ஆனால் நாங்கள் அவர்களை உயிருடன் பிடித்துள்ளோமே?"

முதியவர் பதிலளித்தார்: "நீங்கள் கூடத்தான் சொன்னீர்கள் போலீஸ் டீம் எதுவும் இல்லை என்று".

மூத்த குடிமக்களின் அறிவாற்றலை என்றுமே குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள்...



# விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



# ஜோக்ஸ்

"டிவி யிலே மழை வரும்னு சொன்னாங்களே நீங்க கேட்டீங்களா...."
"நான் கேட்கல... அவங்களா சொன்னாங்க...."

"குழந்தையை மண்எண்ணெய் ஊத்தி குளிக்க வைக்கிறாங்களே... ஏன் ?"
"துருதுருன்னு இருக்கானாம்..."

"நான் கொடுத்த மருந்திலே ஏதாவது சேஞ்ச் இருந்துச்சா?"
"மருந்தை தலைகீழா கொட்டி பார்த்துட்டேன்..ஒரு பைசா கூட இல்ல... டாக்டர் "

" திருடன் வரும் போது ஏன் கத்தி கூச்சல் போடல......?"
"எங்க வீட்டிலே கத்தி எல்லாம் கூச்சல் போடாது நாங்க தான் கூச்சல் போடனும் ஏட்டய்யா...."



"டாக்டர் என் புருஷன் எப்ப கண் திறந்து பேசுவார்?"
"பேசுவார் ஆனா கண் திறந்து பேச மாட்டார். வாய் திறந்து தான் பேசுவார் .... "

"ஆபரேசனுக்கு பின்னாடி கண் நல்லா தெரியும்னு டாக்டர் சொன்னார்... "
"நல்லா தெரியுதா ?"
"பின்னாடி எங்க தெரியுது இப்பவும் முன்னாடி தான் தெரியுது.."

"தலையிலே முடி கொட்டுறதுக்கு என்ன காரணம்..?"
"வேற என்ன ... தலையிலே முடி இருக்குறது தான் ... "

" தொப்பை குறைய தினமும் வெறும் வயிற்றில் நடக்கனும்.. "
" யார் வயிற்றில் டாக்டர்..?"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## வறுமை நீங்கி செல்வம் பெருக ஐயப்பன் வழிபாடு



கார்த்திகை மாதம் பல தெய்வ வழிபாட்டிற்கு உகந்ததாக கருதப்பட்டாலும், கார்த்திகை என்றால் பெரிய அளவில் பேசப்படுவது சபரிமலை ஐயப்பனுக்கு மாலை அணிந்து விரதம் இருந்து செல்வது தான். அப்படியான ஐயப்பனை 48 நாட்கள் கடும் விரதம் இருந்து, இருமுடி கட்டி அவருடைய தரிசனத்தை காணுவதே பெரும் பாக்கியம் என்று சொல்லலாம். இந்த ஐயப்பனை மட்டும் நாம் நினைத்த போதெல்லாம் தரிசனம் செய்ய முடியாது. அவரை தரிசனம் செய்வதற்கென கடுமையான விதிமுறைகளும் நேரமும் உண்டு.

இந்த இருமுடி வழிபாட்டை அனைவராலும் செய்ய முடியாது அல்லவா? ஆகையால் ஐயப்பனை வீட்டிலிருந்தபடியே கார்த்திகை மாதத்தில் ஐயப்பனை எப்படி வழிபட்டால் நம்முடைய வறுமை நிலை மாறி செல்வ நிலை எட்டலாம் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த வழிபாட்டை கார்த்திகை மாதத்தின் கடைசி நாளில் மேற்கொள்ள வேண்டும். இந்த வழிபாடு செய்வதற்கான காலம் காலை பிரம்ம முகூர்த்த வேளையில் செய்யலாம்.

இந்த வழிபாடு செய்வதற்கு உங்களிடம் ஐயப்பன் திருவுருவப்படம் இருந்தால் அதை வைத்து பூஜை செய்து கொள்ளுங்கள். படம் இல்லை என்றால் பரவாயில்லை தீபம் ஏற்றி வைத்து அந்த தீபத்தையே ஐயப்பனாக பாவித்து வணங்கலாம். அடுத்து ஒரு வாழை இலை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் முழுவதுமாக பச்சரிசியை மஞ்சள் கலந்து பரப்பி விடுங்கள். அடுத்து ஏழு மண் அகல் விளக்கை எடுத்து பஞ்சு திரி போட்டு நெய் ஊற்றி தீபம் ஏற்ற தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.

இதற்கு அடுத்து மூன்று சிறிய கிண்ணங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதில் ஒரு கிண்ணத்தில் நெய், மற்றொரு கிண்ணத்தில் மூன்று பழங்கள் ஒன்றாக சேர்த்து வைக்க வேண்டும். அது உங்களுக்கு விருப்பமான எந்த பழங்களாக வேண்டுமானாலும் இருக்கலாம். இன்னொரு கிண்ணத்தில் நைவேத்தியமாக தேங்காய் சாதம் செய்து வைத்து விடுங்கள்.


இப்போது வாழை இலையில் பரப்பி வைத்திருக்கும் அரிசியை பூஜை அறையில் வைத்து அதை சுற்றி நைவேத்தியத்தை வைத்து விடுங்கள். அதன் பிறகு ஏழு அகல் விளக்கை பச்சரிசியை பார்த்தவாறு சுற்றி வைத்து ஏற்றுங்கள். இந்த விளக்குகளை ஏற்றிய பிறகு நீங்கள் கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி அமர்ந்து ஐயப்பனை மனதார வேண்டிக் கொள்ளுங்கள்.

இந்த நேரத்தில் சுவாமியே சரணம் ஐயப்பா என்று இந்த வார்த்தையை 108 முறை ஐயப்பனை நினைத்து சொல்லிய பிறகு தீப தூப ஆராதனை காட்டி பூஜையை நிறைவு செய்து கொள்ளுங்கள்.

பூஜை நிறைவு செய்த பிறகு நைவேத்தியமாக வைத்த பிரசாதத்தை 10 வயதிற்கும் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு முதலில் கொடுங்கள். அதன் பிறகு வீட்டில் உள்ள அனைவரும் நைவேத்தியங்களை உண்ணலாம்.

ஐயப்பனை நினைத்து செய்யப்படும் இந்த எளிய வழிபாடு நம்முடைய வாழ்க்கையை மாற்றக் கூடிய அற்புத சக்தி வாய்ந்ததாக இருக்கும். ஐயப்பனை காணவும் அவருடைய தரிசனத்தை பெறவும் கோடான கோடி மக்கள் அவரை நாடி சென்று கொண்டிருக்கிறார்கள். நாம் வீட்டிலிருந்தபடியே எளிமையான முறையில் அவரை இப்படி வணங்கி அவருடைய அருளை பெறலாம்.

## கோவிலில் வழிபடும் முறை: தெரிந்து கொள்ள வேண்டியவை!



கோவிலுக்கு சென்று சுவாமியை வழிபடும்போது, பல விதிமுறைகள் இருக்கின்றன. கோவில்கள் அனைத்தும் ஆகம விதிப்படி கட்டப்பட்டது என்பதால் ஆகமவிதிப்படி கடைப்பிடிக்கப்படும் சில நியமங்களை கண்டிப்பாக கடைபிடித்தே ஆக வேண்டும். அதன்படி,

* கோவிலுக்குச் செல்வதற்கு முன் குளித்து, சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும். உடல் தூய்மையுடன் மனத் தூய்மையும் அவசியம்.

* வெறுங்கையுடன் கோவிலுக்குச் செல்லாமல், பூக்கள், பழங்கள், தேங்காய் அல்லது அபிஷேகப் பொருட்கள் போன்றவற்றை இயன்ற அளவில் எடுத்துச் செல்வது நல்லது.

* கோவிலுக்குள் சென்றதும், முதலில் கோபுர தரிசனம் செய்த பிறகு விநாயகரை வணங்கி செல்ல வேண்டும்.

* கொடிமரம், பலி பீடம், நந்தி ஆகியவற்றை வணங்கிய பிறகே சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.

* சுவாமியை தரிசனம் செய்யும்போது, அந்த தெய்வத்துக்குரிய மந்திரம் அல்லது பாடல்களை பாடி வழிபாடு செய்வது நல்லது. பிறகு அம்மன் சன்னதி சென்று அம்பாளை மனதார வணங்க வேண்டும். முருகர், தட்சிணாமூர்த்தி, துர்கை, சண்டிகேஸ்வரர் மற்றும் பரிவார தேவதைகளை வணங்கி பிரகாரத்தை மூன்று முறையாவது வலம் வர வேண்டும். நவக்கிரக மண்டபத்தையும் வலம் வர வேண்டும்.

* திருநீற்றை இரு கைகளாலும் வாங்கி கீழே சிந்தாமல் பூச வேண்டும்.

* கோவில் பிரகாரத்தை வலம் வந்ததும், கொடி மரத்தின் முன்பாக கீழே விழுந்து வணங்க வேண்டும். பின்னர் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்து அல்லது மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்த பிறகே கோவிலில் இருந்து செல்ல வேண்டும்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றி, முழுமையான பக்தியுடனும், அமைதியான சிந்தனையுடனும் இறைவனை வழிபட்டால், இறையருளைப் பூரணமாகப் பெறலாம்.

# மலையாக அருள்பாலிக்கும் அண்ணாமலையார்

திருவண்ணாமலையில் மிகவும் பிரசித்தி பெற்ற அண்ணாமலையார் திருக்கோவில் அமைந்துள்ளது. பஞ்சபூத தலங்களில் அக்னி தலமாகவும், தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் 233-வது தலமாகவும், அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரது பாடல் பெற்ற தலமாகவும் இக்கோவில் உள்ளது.

இந்த ஆலயம் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இங்கு மொத்தம் 9 பெரிய கோபுரங்களும், 140-க்கும் மேற்பட்ட சன்னிதிகளும் அமைந்துள்ளன. அதில் 22 விநாயகர் சன்னிதிகளும் அடங்கும். சிலைகள் என்று கணக்கிட்டால் ஆலயம் முழுவதும் 200-க்கும் மேற்பட்ட சிலைகள் உள்ளன. 2-ம் பிரகாரத்தில் 63 நாயன்மார்களுக்கு கற்சிலைகளும், வெண்கல சிலைகளும் உள்ளன. இங்கு திரும்பும் திசையெல்லாம் லிங்கங்களை காணலாம்.

கோவிலின் கிழக்கு பகுதியில் 217 அடி உயரத்தில் ராஜகோபுரம் காணப்படுகிறது. மேற்கு பகுதியில் உள்ள கோபுரம் 'பேய்க் கோபுரம்' என்று அழைக்கப்படுகிறது. 'மேலக் கோபுரம்' என்பது 'மேக்கோபுரம்' என்றாகி, பின் நாளடைவில் பேய்க் கோபுரமாக மருவியது. தெற்குக் கோபுரம் 'திருமஞ்சன கோபுரம்' என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது. வடக்குக் கோபுரம் 'அம்மணி அம்மன் கோபுரம்' என்றழைக்கப்படுகிறது. அம்மணி அம்மாள் என்ற பக்தை பல தடங்கல்களுக்கு மத்தியில் ஒவ்வொரு வீடாக சென்று பொருள் ஈட்டி வடக்குக் கோபுரத்தைக் கட்டி முடித்தார். இதன் காரணமாகவே இவ்வம்மையார் பெயரில், அம்மணி அம்மன் கோபுரம் விளங்குகிறது.

பொதுவாக ஆலயங்களில் அம்பாள் சன்னிதி முன்பாக சிம்மம்தான் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் திருவண்ணாமலை ஆலயத்தில் உண்ணாமுலை அம்மன் சன்னிதியில் சிம்மத்திற்கு பதிலாக நந்தி உள்ளது. ஈசனிடம் கோபித்துக் கொண்டு பூலோகத்துக்கு வந்த பார்வதி இத்தலத்தில் தவம் இருந்தாள். அவளுக்கு பாதுகாப்பாக நந்தியும் வந்துவிட்டார். இதை பிரதிபலிக்கும் விதமாக உண்ணாமுலை அம்மன் சன்னிதி முன்பு நந்தி உள்ளது.

இத்திருக்கோவிலில் சதுர் புஜத்துடன் வீற்றிருக்கும் அபிதகுசாம்பாள் வேறெங்கும் இல்லாத அளவிற்கு சுமார் 6 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். இந்த அம்பிகை தெற்கு முகமாக வீற்றிருந்து சாந்தமாக தினம் ஒரு விதமான முகத்தோற்றத்துடன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பவுர்ணமி அன்றும் பகல் வேளையில் சிறப்பு பூஜையும், அபிஷேகமும், திருவிளக்கு பூஜையும் மகளிரால் செய்யப்படுகிறது.

இத்தலத்தில் பிரம்ம தீர்த்தம், சக்கர தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் என கிட்டத்தட்ட 360 தீர்த்தங்கள் உள்ளன. பிரம்ம தீர்த்த கரையில் கால பைரவர் சன்னிதி உள்ளது. இவரது சிலையானது திருவாசியுடன் ஒரே கல்லில் சுமார் 6 அடி உயரத்துக்கு காணப்படுகிறது. இவர் எட்டு திருக்கரங்களுடன் ஆயுதம் ஏந்தியும், கபால மாலையுடனும் காட்சி தருகிறார். தேய்பிறை அஷ்டமி நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்திலும் இவரை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.



திருவண்ணாமலையில் மலையே சிவபெருமானாக கருதப்படுகிறது. எனவே இங்கு கிரிவலம் வருவது மிகவும் விசேஷமானது. கிரிவல பாதையின் தூரம் 14 கி.மீ. ஆகும். கிரிவல பாதையில் சன்னிதிகளும், மகான்களின் சமாதிகளும் காணப்படுகின்றன. மேலும், திருவண்ணாமலை மலையை சுற்றி இந்திர லிங்கம், அக்னி லிங்கம், எம லிங்கம், நிருதி லிங்கம், வருண லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் என எட்டு லிங்கங்கள் உள்ளன.

### கார்த்திகை திருவிழா

திருவண்ணாமலையில் கார்த்திகை திருவிழா வருகிற 21-11-2025 முதல் 7-12-2025 வரை வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது. 21-ந் தேதி முதல் நாள் துர்க்கை அம்மன் உற்சவத்துடன் விழா தொடங்குகிறது. 22-ந் தேதி பிடாரி அம்மன் உற்சவமும், 23-ந் தேதி விநாயகர் சண்டிகேஸ்வரர் உற்சவமும் நடைபெறுகிறது. 24-ந் தேதி கோவில் கொடியேற்றப்படுகிறது. அன்றைய தினம், சம்பந்த விநாயகர் சன்னிதியில் அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுகிறது. இறைவன் வெள்ளி வாகனத்திலும், சிம்ம வாகனத்திலும் பவனி வருவார்.

25-ந் தேதி தங்க சூரியபிரபையிலும், வெள்ளி இந்திர விமானத்திலும் உலா வருகிறார். 26-ந் தேதி வெள்ளி அன்ன வாகனத்திலும், 27-ந் தேதி வெள்ளி காமதேனு வாகனத்திலும், 28-ந் தேதி வெள்ளி ரிஷப வாகனத்திலும், 29-ந் தேதி வெள்ளி ரதத்திலும் பவனி வரும் காட்சி நடைபெறும். 30-ந் தேதி கோவிலில் மகா ரத உற்சவம் நடைபெறுகிறது. டிசம்பர் 1-ந் தேதி பிச்சாண்டவர் உற்சவமும், குதிரை வாகனத்தில் பவனியும் நடக்கிறது. 2-ந் தேதி கயிலாச வாகனத்திலும், காமதேனு வாகனத்திலும் உலா வருகிறார்.

3-ந் தேதி அதிகாலையில் அண்ணாமலையார், உண்ணாமுலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று, பின்பு அண்ணாமலையார் கருவறையில் பரணி தீபம் ஏற்றப்படும். தொடர்ந்து அம்மன், விநாயகர், முருகன் போன்ற பிற சன்னிதிகளில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. அன்றைய தினம் மாலையில் கோவில் மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகிறது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வர்.

4-ந் தேதி சந்திரசேகர் தெப்ப உற்சவமும், 5-ந் தேதி பராசக்தி தெப்ப உற்சவமும், 6-ந் தேதி சுப்பிரமணியர் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது. இறுதி நாளான 7-ந் தேதி சண்டிகேஸ்வரர் வெள்ளி ரிஷப வாகனத்தில் பவனி வருவார்.

### தினசரி பூஜை

காலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. காலை 5.15 மணிக்கு கோ பூஜை, 5.30 மணிக்கு பள்ளியெழுச்சி பூஜை, 6 மணிக்கு உஷாகால பூஜை, 8.30 மணிக்கு காலசந்தி பூஜை, 11 மணிக்கு உச்சிகால பூஜை முடிந்து, பகல் 12.30 மணிக்கு நடைசாற்றப்படுகிறது. கோவில் மீண்டும் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். 5.30 மணிக்கு சாயரட்சை பூஜை, இரவு 7.30 மணிக்கு இரண்டாம் கால பூஜை, 9 மணிக்கு அர்த்தஜாம பூஜை, 9.15 மணிக்கு பள்ளியறை பூஜை முடிந்து இரவு 9.30 மணிக்கு நடைசாற்றப்படுகிறது.


# சோழ தேசத்தின் பஞ்சம் போக்கிய 'மகாகணபதி'

இந்து மதத்தில் முழுமுதற் கடவுளாக போற்றப்படுபவர் விநாயகர். இவரை பிள்ளையார், கணபதி, கணேஷா, விநாயகர் என பல்வேறு பெயர்களில் வழிபடுகிறார்கள். விநாயகர் வழிபாடு இந்தியாவில் மட்டுமல்ல நேபாள நாட்டிலும் பரவலாக காணப்படுகிறது. விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் முறை 'காணாதிபத்தியம்' என அழைக்கப்படுகிறது.

காணாதிபத்தியம் பின்பு சைவ சமயத்தோடும், வைணவ சமயத்தோடும் ஒன்றிணைந்தது. வைணவர்கள், விநாயகரை 'தும்பிக்கை ஆழ்வார்' என்று அழைப்பார்கள். இவர் கணங்களின் அதிபதி என்பதால் 'கணபதி' என்றும், யானையின் முகத்தினை கொண்டுள்ளதால் 'யானைமுகன்' என்றும் அழைக்கப்படுகிறார்.

இந்து புராணங்களில் சிவன், பார்வதி ஆகியோரின் பிள்ளையாகவும், முருக கடவுளின் அண்ணனாகவும் விநாயகர் வணங்கப்படுகிறார். விநாயகரின் வாகனம் மூஞ்சூறு. கணேச புராணம் கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய 4 யுகங்களிலும் 4 அவதாரங்களாக கணபதி அவதரிப்பதாக கூறுகிறது. விநாயகப் பெருமானின் புராணத்துடன் காவிரி டெல்டா பகுதிக்கும் தொடர்பு உள்ளது. காவிரி டெல்டா முழுவதும் பல்வேறு பெயர்களுடன் கோவில் கொண்டு அருள்பாலித்து வரும் விநாயகரை தரிசிக்க முடியும். அந்த வகையில் பிரசித்திப்பெற்ற தலம் கணபதியின் பெயராலேயே அமைந்த கணபதி அக்ரஹாரம் ஆகும். இங்கு மகா கணபதியாக விநாயகப்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இந்த தலம் தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டை அருகே உள்ளது.

ஒரு காலத்தில் பஞ்சம் நீங்குவதற்காக இத்தலத்தில் கவுதம மகரிஷி பூஜித்ததாகவும், அதனால் பஞ்சம் நீங்கிய காரணத்தால் இந்த இடம் 'அண்ணகோஷஸ்தலம்' என்று அழைக்கப்பட்டதாக புராணங்களில் கூறப்படுகிறது. ஒரு சமயம் அகத்திய முனிவரின் தவத்துக்கு, காவிரி



ஆற்றின் 'சல சல' என்ற ஆரவார நீரோட்ட சத்தம் இடையூறாக இருந்து, அவரை கோபம் அடைய செய்தது. இதனால் அகத்திய முனிவர், தனது தவ வலிமையால் காவிரியை தனது கமண்டலத்தில் அடக்கிவிட்டார். இதனால் சோழ தேசமானது வளம் குன்றி, பசி, பஞ்சம் ஏற்பட்டு தேவபூஜைகள் நின்று விட, தேவர்கள் எல்லாம் விநாயகப் பெருமானிடம் முறையிட்டனர்.

காவிரி நதிக்காக மனம் இரங்கிய விநாயகப்பெருமானும் காக்கை உருவம் கொண்டு கமண்டலத்தை தனது அலகால் தட்டிவிட்டார். இதனால் காவிரி ஆறு வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடி, சோழ வளநாடு விநாயகப் பெருமானால் மீண்டும் வளம் பெற்றது. கமண்டலத்தை தட்டி விட்ட காகத்தை அகத்திய மாமுனி பின்தொடர்ந்து சென்றபோது இந்த இடத்தில் (கணபதி அக்ரஹாரம்) விநாயகப் பெருமானாக அவருக்கும், காவிரி தாய்க்கும் காட்சி அளித்ததாக தல வரலாறு கூறுகிறது.

இங்குள்ள மகா கணபதி ஆலயத்தில், தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளித்து காத்தருள்கிறார் மகா கணபதி. இந்த கிராமத்தில் பல குடும்பங்களுக்கு இவர் குல தெய்வமாகவும் விளங்குகிறார். பொதுவாக, முருகனின் வாகனமாகத்தான் மயில் கருதப்படுகிறது. ஆனால் இங்கு கணபதிக்கும் மயில்தான் வாகனமாக திகழ்கிறது. ஆகவே இக்கோவில் மகாகணபதியை 'மயூரிவாகனன்' என்றும் அழைக்கிறார்கள்.

இவ்வூரில் விநாயக சதுர்த்தியை கொண்டாடுவது சற்று வினோதமான வழக்கமாக உள்ளது. விநாயகர் சதுர்த்தி அன்று இந்த ஊர் மக்கள், களிமண்ணில் பிள்ளையார் செய்து, வீட்டில் வைத்து பூஜிப்பது கிடையாது. தங்கள் வீட்டில் செய்த கொழுக்கட்டை போன்ற நைவேத்தியப் பொருட்களை எடுத்துக் கொண்டு அனைவருமே மகாகணபதி சன்னிதிக்கு வருகின்றனர். கோவிலில்தான் விநாயகர் சதுர்த்தி பூஜை, நைவேத்தியம் எல்லாம் செய்கின்றார்கள்.

தஞ்சை மாவட்டம் திருவையாறில் இருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது கணபதி அக்ரஹாரம். தஞ்சை - கும்பகோணம் சாலையில் அய்யம்பேட்டைக்கு வந்து அங்கிருந்து காவிரி ஆற்றுப்பாலம் வழியாக சென்றால் 3 கி.மீ. தொலைவில் இக்கோவிலை அடையலாம், மகாகணபதியை கண்குளிர தரிசிக்கலாம்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No
8122664699

## அண்ணாமலையார் ஆலயத்தில் ஐப்பசி மாத பௌர்ணமி உண்டியல் திறப்பு





**திருவண்ணாமலை, நவ.21:**

*நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் ஐப்பசி மாத பௌர்ணமி உண்டியல் திறப்பு வருவாய் 3,47,56,689/, தங்கம் 104 கிராம், வெள்ளி 2690 கிலோ கிராம் கோவில் நிர்வாகம் அறிவிப்பு.* **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதிய நியாய விலைக்கடை திறப்பு



திருமுல்லைவாயல், செந்தில் நகரில், புதிய நியாய விலைக்கடையை பொது மக்களின் பயன்பாட்டிற்காக அமைச்சர் நாசர் திறந்து வைத்தார்.

## கறவை மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கும் திட்டம்



திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் கொளத்தூர் கிராமத்தில் கறவை மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கும் திட்டத்தை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார். இதில் கால்நடை ஆரோக்கியத்திற்கான தாது உப்புகள் வழங்கப்பட்டன.

## வாக்குச்சாவடி முகவர்களுக்கான கள ஆய்வுக்கூட்டம்



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதி அதிமுக வாக்குச்சாவடி முகவர்களுக்கான கள ஆய்வுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் காமராஜ் பேசினார்.

# மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடந்த ஆர்ப்பாட்டம்




கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை முடக்கிய மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, பொங்கலூர் பழனிசாமி உள்ளிட்ட திமுக கூட்டணி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



மயிலாடுதுறையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ஸ்ரீகாந்த் வழங்கினார்.

## அரசு மகளிர் கல்லூரியில் தமிழ் கனவு நிகழ்ச்சி



திண்டுக்கல் அரசு மகளிர் கல்லூரியில் மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சியில் பேராசிரியை பர்வீன் சுல்தானா பேசினார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவி



காஞ்சிபுரத்தில் நடந்த சிறப்பு குறை தீர்க்கும் முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்.

## பழனி முருகன் கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி



பழனி முருகன் கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் பழனியாண்டவர் கல்லூரி மாணவிகள், பேராசிரியர்கள், கோயில் ஊழியர்கள் ஈடுபட்டனர். இதில், காணிக்கையாக ரூ.4 கோடியே 38 லட்சத்து 75 ஆயிரத்து 257, தங்கம் 872 கிராம், வெள்ளி 33.153 கிராம், வெளிநாட்டு கரன்சிகள் 1,089 கிடைத்தன.

## எஸ்ஐஆர் சிறப்பு முகாம்



கோவில்பட்டியில் அதிமுக சார்பில் அமைக்கப்பட்டுள்ள எஸ்ஐஆர் சிறப்பு முகாம் களில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கடம்பூர் ராஜூ எம்எல்ஏ வழங்கினார்.

## எஸ்ஐஆர் குறித்த விழிப்புணர்வு பேரணி



வள்ளியூர் பகுதியில் எஸ்ஐஆர்பணிகள் குறித்த விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## பல்கலைக்கழகக் கண்காட்சி



ஈரோடு ஆர்டி இண்டர்நேஷனல் பள்ளியில் நடைபெற்ற பல்கலைக்கழகக் கண்காட்சியில் 40-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் பங்கேற்றன. கண்காட்சியை, பள்ளியின் நிறுவனர் செந்தில் குமார் ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தார்.

## திராவிட வெற்றி கழகம் என்ற புதிய கட்சி தொடக்கம்




மதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட மல்லை சத்யா, திருப்பூர் துரைசாமி, நாஞ்சில் சம்பத் ஆகியோர் திராவிட வெற்றி கழகம் என்ற புதிய கட்சியை துவக்கினர்.

## சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு



கன்னியாகுமரி முக்கடல் சங்கமம் பகுதியில் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார். டி.ஸ்.பி. ஜெயச்சந்திரன், காவல் ஆய்வாளர் அருண் ஆகியோர் உடனிருந்தனர்.

## கோவை ரேஸ் கோர்ஸில் ஒற்றுமை யாத்திரை




சர்தார் பட்டேல் 150வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை ரேஸ் கோர்ஸில் ஒற்றுமை யாத்திரையை வானதிசீனிவாசன் எம்எல்ஏ நேற்று துவக்கி வைத்தார்.

## 14வது ஆடவர் இளையோர் ஆக்கி வெற்றி கோப்பை



14வது ஆடவர் இளையோர் ஆக்கி வெற்றி கோப்பையை திருப்பூரில் அமைச்சர் சுவாமிநாதன், வரவேற்று போட்டியின் சின்னமான காங்கேயனை அறிமுகப்படுத்தினார்.உடன் கலெக்டர் மணீஸ்நாரணவரே உள்ளார்.

## செஞ்சி அரசு கலை, அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம் திறப்பு



செஞ்சி அரசு கலை, அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடத்தை முதல்வர் ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். கல்லூரி வளாகத்தில் கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். கல்லூரி முதல்வர் ஸ்ரீவித்யா உடன் உள்ளார்.

## ஒற்றுமை தின பேரணி



ஊட்டியில் நடைபெற்ற ஒற்றுமை தின பேரணியில் தேசியக்கொடி, ஒற்றுமை குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்ற மாணவ, மாணவிகள்.

## ரவுசு மணி

**உன் வீட்டின்**
**வெளிச்சமே**
**நீதான் என்று உன்**
**உள்ளம் உணரும்**
**போது ...**
**உன்னிடம்**
**இருக்கும்**
**சோம்பேறித்தனம்**
**ஓடிப்போய்**
**சுறுசுறுப்பு**
**வரும்...**



V.முத்து ராமகிருஷ்ணன்

## ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறந்தது: கலை இயக்குனர் பேச்சு..!

**வந்தவாசி, நவ 21:**

*திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றிய (மே) தொடக்கப் பள்ளியில் உலக குழந்தைகள் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.*



*இந்த நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியை வேளாங்கண்ணி, ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், திரைப்பட கலை இயக்குநர் விஜய் ஆதிநாதன், எய்டு இந்தியா திட்ட மேற்பார்வையாளர் க.முருகன், உதவி ஆசிரியை சுஜாதா உள்ளிட்டோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர். மேலும் மாணவர்கள் திருக்குறள் மற்றும் பழமொழிகளை வாசித்தனர்.*

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## பயனாளிகளுக்கு கடனுதவி



தேனியில் நடந்த கூட்டுறவு வார விழாவில் 1,141 பயனாளிகளுக்கு ரூ.11,16கோடி மதிப்பிலான கடனுதவிகளை கலெக்டர் ரஞ்ஜத்சிங், தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி., சரவணக்குமார் எம்எல்ஏ வழங்கினர்.

# சுற்றுலா: இந்தியாவின் அழகிய மலைப்பாதை ரயில்வேக்கள்!!

இந்தியாவின் மலை ரயில்கள் என்பது இமயமலையின் மலைப்பகுதிகள் தொடங்கி மேற்கு தொடர்ச்சி மலைகள், அஸ்ஸாம் பள்ளத்தாக்கு, காஷ்மீர் பள்ளத்தாக்கு என்று பலபகுதிகளில் இயக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவின் அழகான, பிரம்மிக்கவைக்கக்கூடிய மலைப்பாதை ரயில்வேக்கள் கிராமப்புற இந்தியாவையும் நவீன இந்தியாவையும் இணைப்பது மட்டுமின்றி, மலைப்பாங்கான நிலப்பரப்பில் பயணிகளுக்கு ஈடு இணையற்ற பயண அனுபவத்தையும் வழங்குகிறது.

வடக்கில் காங்க்ரா பள்ளத்தாக்கு இரயில்வேயில் இருந்து தெற்கில் நீராவிவைத்து இயக்கப்படும் நீலகிரி மலை இரயில் வரை, இந்த ரயில்கள் அனைத்தும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட வரலாற்று மலை ரயில் பாதைகளில் இயங்குகின்றன.

டார்ஜிலிங் இமயமலை இரயில்வே: கண்கவர் காட்சிகளுக்கு பெயர்பெற்ற டார்ஜிலிங் இமயமலை இரயில்வே பாதை 1881 இல் தொடங்கப்பட்டது.

நியூ ஜல்பைகுரியிலிருந்து டார்ஜிலிங் வரையிலான 88 கி.மீ தூரத்தை ஏழரை மணி நேரத்தில் கடக்கிறது.

பரந்த புல்வெளிகள், தேயிலை தோட்டங்கள், புகழ்பெற்ற கஞ்சன்ஜங்கா, பசுமையான மலைகள் ஆகியவற்றை டார்ஜிலிங் இமயமலை இரயில்வேயின் பொம்மை ரயிலில் பயணிக்கும் போது நாம் கண்டுகளிக்கலாம்.



8 கி.மீ தூரத்தை ஏழரை மணி நேரத்தில் கிடக்கின்ற இந்த அருமையான ரயில்வே பாதை 1999 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளத்தில் ஒன்றாக உள்ளது.

டீசல் எஞ்சினில் சவாரி செய்ய நபர் ஒருவருக்கு 800 ரூபாயும் நீராவி எஞ்சினில் பயணம் செய்ய நபர் ஒருவருக்கு 1300 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது .

நீலகிரி மலை இரயில்வே: மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டி செல்வதற்காக 1908 இல் கட்டப்பட்ட இந்த மலை ரயில் பாதை நன்கு பராமரிக்கப்படும் பாரம்பரியத்தின் சின்னமாகவும், இந்தியாவின் மிகவும் பரபரப்பான பொம்மை ரயில்களில் ஒன்றாகவும் இருந்து வருகிறது.

2005 ஆம் ஆண்டு யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்ட இந்த ரயில் உங்களை பாறை நிலப்பரப்பு, அழகிய பள்ளத்தாக்குகள், பசுமையான தேயிலை தோட்டங்கள் மற்றும் அடர்ந்த காடுகள் வழியாக அழைத்துச் சென்று கண்கவர் ஊட்டியில் சேர்க்கிறது.

இந்த மகிழ்ச்சிகரமான குட்டி ரயில் மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டி வரையிலான 46 கி.மீ தூரத்தை நான்கரை மணி நேரத்தில் கடக்கிறது.

முதல் வகுப்பில் 205 ரூபாயும், இரண்டாம் வகுப்பில் 30 ரூபாயும், பொது வகுப்பில் 15 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

கல்கா-சிம்லா இரயில்வே: 1903 இல் திறக்கப்பட்ட இந்த 97 கிமீ குறுகிய பாதை 101 சுரங்கங்கள் வழியே சிம்லாவை சென்றடைகிறது

கம்பீரமான இமயமலையின் அழகை அனுபவித்துக் கொண்டே மிகவும் சிக்கனமான செலவில் சிம்லாவை அடையலாம்.

2008 இல், கல்கா-சிம்லா இரயில்வே யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் ஒன்றாக சேர்க்கப்பட்டது.

ரயில் மோட்டாரில் 300 ரூபாய், ஷிவாலிக் டீலக்ஸில் 500 ரூபாய், சிம்லா கல்காவில் 70 ரூபாய் மற்றும் ஹிமாலயன் குயினில் 260 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

மாத்தேரன் மலை இரயில்வே: மாத்தேரன் மலை இரயில்வே மாத்தேரானை நேரலையுடன் இணைக்கிறது.

எந்தவொரு இந்திய மலை ரயில் பாதையையும் ஒப்பிடும் போது இந்த குறுகிய பாதை பாதையானது கூர்மையான வளைவுகளைக் கொண்டுள்ளது. பயணத்தின் போது நாம் பார்க்கின்ற காட்சி நம்மை பிரம்மிப்பில் ஆழ்த்துகிறது.

மாதேரன் என்றால் 'மரம் நிறைந்த தலை' அல்லது 'காடு மேல்' என்று பொருள். 1850 இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அமைதியான மலைவாசஸ்தலத்திற்கு செல்ல ஒரே வழி இந்த சிறிய ரயில் மட்டுமே.

டீலக்ஸில் 1325 ரூபாயும், முதல் வகுப்பில் 265 ரூபாயும், இரண்டாம் வகுப்பில் 65 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

காங்க்ரா பள்ளத்தாக்கு இரயில்வே: காங்க்ரா பள்ளத்தாக்கு இரயில்வே என்பது பனிமூட்டம் நிறைந்த இமயமலை வழியாக செல்லும் ரயில் பயணமாகும்.

இயற்கை அழகுக்கும் காட்சிகளுக்கும் பெயர் பெற்ற இந்த பாதை பதன்கோட்டில் தொடங்கி ஜோகிந்தர் நகரில் முடிவடைகிறது.

164 கிமீ நீளமுள்ள இந்த பாதையானது இரண்டு சுரங்கப்பாதைகள், 950 பாலங்களைக் கடந்து 9 மணி நேரத்தில் இலக்கை சென்றடைகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வங்கிப் பணியிடங்கள்

வங்கி மற்றும் நிதித்துறையில் பணியில் உள்ளவர்களான சூப்பர் வாய்ப்பு வெளியாகியுள்ளது. பரோடா வங்கியில் பெறத்தக்கவைகள் மேலாண்மைத் துறையில் (Receivables Management Department) காலியாக உள்ள பணி வாய்ப்புகளுக்கு ஒப்பந்த முறையில் நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இப்பணியிடங்களுக்கு குறைந்தபட்சம் 5 முதல் 15 வருடங்கள் வரை அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியின் விவரங்கள்: பகுதி மேனேஜர் 13 மண்டல மேனேஜர் 13 ஏரியா மேனேஜர் 49 புகார் மேனேஜர் 2 ப்ராசஸ் மேனேஜர் 1 வெண்டார் மேனேஜர் 1 பிளோர் மேனேஜர் 3 மொத்தம் 82

தகுதிகள்: இப்பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். முதுகலை டிப்ளமோ அல்லது எம்பிஏ முடித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இப்பணியிடங்களுக்கு குறைந்தபட்சம் 5 முதல் 15 ஆண்டுகள் வரை அனுபவம் தேவை.

சம்பளம்: இப்பணியிடங்களுக்கு தேர்வாகும் நபர்களின் கல்வித்தகுதி அம்ற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தைக்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் முறை: பரோடா வங்கியில் இத்துறையின் கீழ் நிரப்பப்படும் பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்வு கிடையாது. நேர்காணல் அடிப்படையில் தேர்வு செய்யபட்டுவார்கள். விண்ணப்பிக்கும் நபர்களில் இருந்து காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப தேர்வு செய்யப்படுவார்கள். நேர்காணலுக்கான அழைப்பு விடுக்கப்படும். விண்ணப்பதார்கள் அனைத்து தகவல்களுக்கான அசல் சான்றிதழ்களை சமர்பிக்க வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பு கட்டாயம் ஆகும்.

விண்ணப்பிக்கும் முறை: பரோடா வங்கி இப்பணியிடங்களுக்கு ஆர்வமாக உள்ள அனுபவமுள்ள விண்ணப்பதார்கள் https://bankofbaroda.bank.in/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம். இதற்கான கட்டணமாக ரூ.850 செலுத்த வேண்டும். ரூ.175 கட்டணமாக எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் பெண்கள் செலுத்த வேண்டும். இதற்கான விண்ணப்பம் நவம்பர் 19 முதல் தொடங்கிய நிலையில், டிசம்பர் 9-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க மற்றும் கட்டணம் செலுத்த கடைசி நாள் 09.12.2025

## தவெக பிரச்சார கூட்டத்தில் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களை தாக்கிய வழக்கில் 7 பேர் நீதிமன்றத்தில் சரண்



கரூர், நவ.21:

கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். அப்போது, அங்கு ஏராளமான ஆம்புலன்ஸ்கள் வந்தன.

சேலத்தைச் சேர்ந்த எஸ்.ஆர் .மணிகண்டன் உள்ளிட்ட 7 பேர் ஒரு ஆம்புலன்ஸை வழிமறித்து, ஓட்டுநர் மீது தாக்குதல் நடத்தியதாக போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த மணிகண்டன், கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1-ல் சரணடைந்து முன்ஜாமீன் பெற்றார்.

இது தொடர்பான மற்றொரு வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மணிகண்டன் உள்ளிட்ட 7 பேர் நிபந்தனை ஜாமீன் பெற்றனர். இந்நிலையில், இந்த 7 பேரும் கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1-ல் மாஜிஸ்திரேட் பரத்குமார் முன்னிலையில் நேற்று சரணடைந்தனர். பின்னர் அனைவரும் ஜாமீனில் சேலம் திரும்பினர். அவர்கள் இன்று (நவ.20) முதல் சேலம் நகர காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடுவர்.

2-வது முறையாக விசாரணை: கூட்ட நெரிசல் உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக கரூர் சுற்றுலா மாளிகையில் கடந்த 13-ம் தேதி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அதிகாரிகள் ஆஜரானார்கள். அவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், மீண்டும் 2-வது முறையாக நேற்று மின் வாரிய செயற் பொறியாளர் கணிகை மார்த்தாள் உள்ளிட்ட 10 அதிகாரிகள் சிபிஐ அதிகாரிகள் முன்னிலையில் ஆஜராகினர். அவர்களிடம், தவெக பிரச்சாரக் கூட்டத்தின்போது மின் தடை ஏற்பட்டது குறித்து அதிகாரிகள் விசாரித்தனர்.

## நிலம் கையகப்படுத்தியதில் பல கோடி ரூபாய் மோசடி: 15 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை

சென்னை, நவ.21:

நெடுஞ்சாலை, சிப்காட் ஆகியவற்றுக்கு நிலம் கையகப்படுத்தியதில் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடைபெற்றிருப்பதாக எழுந்த புகாரில் சென்னையில் 15 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்றது.

சென்னை கே.கே.நகர் லட்சுமணசாமி சாலையை சேர்ந்தவர் மகாவீர். இவர் எம்ஜிஆர் நகர் மார்க்கெட்டில் நகைக் கடை, பைனான்ஸ் நிறுவனம், மருத்துவ உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனங்களை நடத்தி வருகிறார். இவரது வீட்டுக்கு நேற்று காலை 7 மணியளவில் 2 வாகனங்களில் வந்த 6 அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். இதேபோல், சைதாப்பேட்டை ஸ்ரீநகர் காலனி தெருவில் வசித்து வரும் பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர் கலைச்செல்வன் வீட்டிலும் சோதனை நடைபெற்றது.

அம்பத்தூர் திருவேங்கடா நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வரும் பிரகாஷ் என்பவரது வீடு, கோடம்பாக்கம் விஜிசி 2-வது தெருவில் உள்ள தனியார் நிறுவனம், கீழ்ப்பாக்கம் வாக்டல்ஸ் சாலையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்துவரும் இரும்பு வியாபாரி நிர்மல்குமார் வீடு, கே.கே. நகர் முனுசாமி சாலையில் வசிக்கும் தொழில் அதிபர் ஒருவரின் வீட்டிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

எம்ஜிஆர் நகர் அண்ணா மெயின் ரோட்டில் உள்ள ரியல் எஸ்டேட் அலுவலகம், சவுகார்பேட்டை கந்தப்ப முதலி தெருவில் உள்ள பைனான்ஸ் அதிபர் சுனில், வடபழனி 2-வது மெயின் ரோட்டில் நிதி நிறுவன அதிபர் ராகேஷ் வீடு உட்பட சென்னையில் 15 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். குறிப்பாக இந்த சோதனை அரசு ஒப்பந்த தாரர்கள், தொழிலதிபர்கள் வீடுகளைக் குறிவைத்தே நடந்தது.

சோதனை குறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறுகையில், "2022-ம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்தியதில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக காஞ்சிபுரம் சிபிசிஐடி போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதாவது அரசு நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் பல கோடி ரூபாய் மோசடி செய்த புகாரில், சிபிசிஐடி பதிவு செய்த முதல் தகவலறிக்கையின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்றது.

அதேபோல், ஸ்ரீபெரும்புதூரில் நெடுஞ்சாலைகள் அமைக்க நிலம் கையப்படுத்தியதில் அரசு நிலத்தையே வேறொருவருக்கு பட்டா போட்டு, அவரிடமிருந்து அந்த நிலத்தை நெடுஞ்சாலை அமைக்க கையகப்படுத்தியது போல போலி ஆவணங்கள் தயார் செய்து, பல கோடி ரூபாய் மோசடி செய்ததாக காஞ்சிபுரம் போலீஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இது தொடர்பாகவும் சோதனை நடைபெற்றது" என்று அமலாக்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சோதனை முழுமையாக நிறைவடைந்த பிறகே மேற்கொண்டு முழு விவரங்கள் தெரியவரும் என அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

## எஸ்ஐஆர் பணியிலிருந்து விடுவிக்க அங்கன்வாடி ஊழியர்கள் கோரிக்கை


சென்னை, நவ.21:

எஸ்ஐஆர் பணியிலிருந்து அங்கன் வாடி ஊழியர்களை விடுவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் மாநிலத் தலைவர் இ. பாக்கியமேரி, பொதுச் செயலாளர் எஸ். தேவமணி, பொருளாளர் கே. சித்ரா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில், "அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்கள், பல துறைகளின் பணிகளை செய்து வருகின்றனர். இந்தப் பணிச்சுமையோடு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இது சுமையானது மட்டுமல்ல, குழப்பம் நிறைந்ததாகவும் உள்ளது. ஊழியர்களுக்கு போதுமான பயிற்சி இன்மையால் மிகவும் கடினப்படுகின்றனர். இதனை கருத்தில் கொள்ளா மல் கடைநிலை ஊழியர்களை கட்டாயப்படுத்துவது, மிரட்டுவது போன்ற செயலில் தேர்தல் ஆணைய அதிகாரி கள் ஈடுபடுகின்றனர். இதனால், கும்பகோணம் திரு.வி.க. மணியம்மை அங்கன்வாடி மைய ஊழியர் டி.சித்ரா, எஸ்ஐஆர் பணியை செய்ய இயலாமலும், அதிகாரிகளின் மிரட்டலுக்கு பயந்தும் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

ஆபத்தான நிலையில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஊழியரை தற்கொலைக்குத் தூண்டிய அதிகாரிகள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆணையத்தின் பணியிலிருந்து விடுவிக்ககோரி விண்ணப்பித்தவர்களை கட்டாயப் படுத்தாமல் விரைந்து விடுக்க வேண்டும். தேர்தல் ஆணையப் பணியிலிருந்து அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்களை முழுமையாக விடுவிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## மெட்ரோ ரயில் திட்டம் ஆடம்பரமல்ல, அவசியம்! நிதியமைச்சர் தங்கம் தென்னரசு



சென்னை, நவ.21:

மெட்ரோ ரயில் ஆடம்பரம் அல்ல என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தமது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். மதுரை மற்றும் கோவை, இந்தியாவின் வேகமாக வளரும் முக்கிய நகரங்கள் என்றும், இந்ந கரங்களுக்கு மெட்ரோ ரயில் ஆடம்பரம் அல்ல, அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மக்கள் நெருக்கடியைக் குறைக்கவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மெட்ரோ இன்றியமையாதது என்ற வகையில், மதுரை மற்றும் கோவை மெட்ரோ திட்டத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்பதாகவும் நிதியமைச்சர் பதிவிட்டுள்ளார்

## திமுக ஆட்சியில் தமிழக தொழில்துறை உன்னத வளர்ச்சி: அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கருத்து

சென்னை, நவ.21:

'திமுக ஆட்சியில் தமிழகம் தொழில்துறையில் உன்னத வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே எதிர்க்கட்சிகள், அவதூறு அறிக்கைகளை தவிர்த்து மாநிலத்தின் நலனில் அக்கறை செலுத்த வேண்டும்' என்று தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்துக்கு ஒவ்வொரு முறையும் புதிய முதலீடுகள் வரும் போதோ, அறிவிக்கும்போதோ ஒரு சில அரசியல்வாதிகள் அவதூறுகளை அள்ளி வீசுவதையே வேலையாக வைத்துள்ளனர். அவர்களின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை.

கடந்த 2021-ல் திமுக ஆட்சி பொறுப்பேற்றது முதல் இது வரை 1,016 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.11.4 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதோடு, 34 லட்சம் வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதில், இன்று 80 சதவீதம் அதாவது 809 திட்டங்கள் நிலம் ஒதுக்கீடு, கட்டுமானம், சோதனை உற்பத்தி, வணிகரீதியான உற்பத்தி என பல்வேறு நிலை செயல்பாடுகளில் உள்ளன.

திட்டங்களின் செயலாக்கத்தில் நமது அரசு மிகவும் தெளிவாக உள்ளது.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் உள்ளபடி முதலீடுகள் பல கட்டங்களாக வருவதற்கு ஒருசில ஆண்டுகள் ஆகும் என்பதைக்கூட அறியாமல் உளறுவது நகைப்புக்குரியது.

இத்தகைய குற்றச்சாட்டுகள் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடனும், குறுகிய கால அரசியல் நாடகத்துக்காகவும் முன்வைக்கப்படுகின்றன.

குற்றச்சாட்டுக் குரல் எழுப்புவோர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் போன்ற தமிழகத்துக்குத் தேவையான முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் தர மத்தியபாஜக அரசு மறுக்கும்போது மவுனம் காப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அதேபோல், தமிழகத்தில் செமிகண்டக்டர் துறைக்கான நல்ல சூழல் இருந்தபோதும்கூட முக்கியமான செமிகண்டக்டர் திட்டங்கள் வேறு மாநிலங்களுக்குத் திருப்பிவிடப்படும் போதும் இவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்புவதில்லை.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டே, மறுபுறம் தொழிற்பேட்டைகளுக்கான நிலம் கையகப்படுத்துவதை எதிர்ப்பதும், விமான நிலைய விரிவாக்கம் போன்ற வளர்ச்சிக்கான கட்டமைப்புகளை எதிர்ப்பதும் பெரும் முரண்பாடாக உள்ளது.

எனவே, எதிர்க்கட்சியினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தைக் கைவிட்டு, தமிழக நலன் மீது அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா சர்வதேச திரைப்படவிழா 2025: வரலாற்றுச் சிறப்புமிக்க பிரமாண்ட அணிவகுப்புடன் கோவாவில் தொடங்கியது

**கோவா, நவ. 21:**

56வது இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI), வழக்கமான தொடக்க விழாக்களுக்கான இலக்கணத்தை மாற்றியமைக்கும் வகையில், கோவாவில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பிரம்மாண்ட ஊர்வலத்துடன் தொடங்கவிருக்கிறது.

முதன்முறையாக, இந்த திரைப்பட விழா தனது பார்வையாளர்களை ஒரு மாறுபட்ட அனுபவத்திற்கு அழைத்துச் செல்லவுள்ளது. இதில் கதைகள் உயிர்பெறும், இசை காற்றில் தவழும், கதாபாத்திரங்கள் திரையை விட்டு வெளியே நேற்று நவம்பர் 20-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு, கோவாவின் 'என்டர்டெயின்மென்ட் சொசைட்டி' அலுவலகத்திலிருந்து 'கலா அகாடமி' வரை நடைபெற்ற இந்த தனித்துவமான ஊர்வலம், கோவா வீதிகளையே இந்திய சினிமாவின் கலாச்சார ஓவியமாக மாற்றியது.

இந்த அணிவகுப்பை ஆந்திர பிரதேசம், ஹரியானா மற்றும் கோவா மாநிலங்களின் கண்கவர் கலை ஊர்திகள் முன்னின்று நடத்தப்பட்டன. ஒவ்வொரு மாநிலமும் தத்தமது அடையாளம் மற்றும் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் இது அமையும். விசாகப்பட்டினத்தின் பொன்னான கடற்கரைகள், அராகுவின் பள்ளத்தாக்குகள் மற்றும் தெலுங்கு சினிமாவின் துடிப்பான உணர்வுகளோடு ஆந்திரா வலம் வரவுள்ளது. மறுபுறம், ஹரியானா தனது நாட்டுப்புறக் கதைகள், நாடகம் மற்றும் கலாச்சாரப் பெருமைகளை வண்ணமயமான கலவையாக வழங்கவுள்ளது. இவ்விழாவின் நீண்டகால இல்லமான கோவா, ஊர்வலத்தின் உணர்ச்சிகரமான இதயமாகத் திகழும்.

மாநிலங்களின்




அணிவகுப்போடு இணைந்து, இந்தியாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களின் பிரம்மாண்ட சினிமா ஊர்திகளும் அணிவகுக்கின்றன. 'அகண்டா-2'-ன் புராணச் சக்தி, ராம் சரணின் திரைப்படங்களின் ஆழம், மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் ஜீ ஸ்டுடியோஸின் படைப்பாற்றல், ஹோம்பலே ஃபிலிம்ஸின் உலகளாவிய பார்வை, பிந்துசாகரின் ஒடியா பாரம்பரியம் என அனைத்தும் ஒன்றிணைந்து இந்திய சினிமாவின் எல்லையற்றபன்முகத்தன்மையை பறைசாற்றவுள்ளன. இவற்றுடன், நாடு முழுவதும் திரைப்படத் தயாரிப்பாளர்களை உருவாக்கி, சினிமா புதுமைகளை வளர்த்து வரும் NFDC-யன் 50 ஆண்டுகால பொன்விழாகொண்டாட்டத்தை குறிக்கும் வகையிலான சிறப்பு ஊர்தியும் இதில் இடம்பெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்கது.

ஊர்வலத்தின் தொடக்கமாக, மத்திய தகவல் ஒலிப்பரப்புத் துறை வழங்கும் "பாரத் ஏக் சூர்" என்ற நிகழ்ச்சி மெய்சிலிர்க்கும் ஆற்றலுடன் அமையவுள்ளது. பதினாறு மாநிலங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கும் இந்த மெய்மயக்கும் நாட்டுப்புற இசைச் சங்கமத்தில், பாங்க்ரா கர்பாவுடனும், லாவணி கூமருடனும் இணைகின்றன. பிஹு, சாவ் மற்றும் நாட்டின் நடனங்கள் ஒன்றோடு ஒன்று கலந்து, இறுதியில் இந்தியாவின் கலாச்சார இதயத்துடிப்பை வெளிப்படுத்தும் ஒரு பிரம்மாண்டமான மூவண்ணக் கொடி வடிவத்துடன் நிறைவடையும் காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

மொத்தத்தில், இந்திய சர்வதேச திரைப்பட விழா 2025-ன் இந்தத் தொடக்க அணிவகுப்பு என்பது ஒரு சாதாரண தொடக்க விழாவை விட மேலானது; இது ஒரு கலாச்சார வாக்குறுதியாகும்.

கோவா இந்தத் அசாதாரண தொடக்கத்திற்குத் தயாராகிவிட்டது. இந்தியா என்பது வெறும் கதைகளின் தேசம் மட்டுமல்ல, அது மறக்க முடியாத தாளத்துடன் முன்னேறிச் செல்லும் ஒரு இயக்கம் என்பதை உலகிற்கு உணர்த்த சர்வதேச திரைப்பட விழா அனைவரையும் அழைக்கிறது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### பூமி போலவே பாறைகள் உள்ள, 'சூப்பர்-எர்த்'



1. வவ்வால்களின் மூளை செயல்பாடுகளை, கம்பியில்லா முறையில் பதிவுசெய்து ஆராய்ந்தனர் கலிபோர்னியா பல்கலை விஞ்ஞானிகள். ஆய்வின்படி, வவ்வால் மூளையில் நியூரான்கள் ஒரு சேர்ந்திசைக் குழு போலச் செயல்பட்டு, அனுபவங்களை பதிவு செய்கின்றன. இதுவே, வவ்வால்களின் நீண்ட கால நினைவாற்றலுக்கு அடிப்படை.

2. தைவான் தேசிய பல்கலை ஆராய்ச்சி யாளர்கள், நானோ இழைகள், உணரிகள், ஸ்டெம்செல் போன்ற வற்றைக் கொண்ட 'பேண்டேஜ்'களை உருவாக்கி உள்ளனர். இவை தொற்று களைக் கட்டுப்படுத்தி, புதிய திசுக்களை மீண்டும் உருவாக்கி, காயங்களை ஆற்றுவதில், பழைய சிகிச்சை முறைகளை விட வேகமாகச் செயல்படுவதாகத் தெரியவந்துள்ளது.

3. 'நாசா'வின் 'ஆர்டெமிஸ்' நிலவுப் பயணத்திற்காக, தனதுராட்சத 'ஸ்டார்ஷிப்'ராக்கெட்டை எளிதாக்கியுள்ளது 'ஸ்பேஸ்எக்ஸ்.' எரிபொருள் கலன்களை குறைத்து, சுற்றுப்பாதையை மாற்றியமைத்து, விண்வெளி வீரர்களின் பாதுகாப்புக்கும், பயண வேகத்திற்கும் 'ஸ்பேஸ்எக்ஸ்' முன்னுரிமை அளித்துள்ளது.

4. நம் உடலின் சக்தி நிலையமான, 'மைட்டோகாண்ட்ரியா'வின் மேற்பரப்பில் லூசின் என்ற அமினோ அமிலம் உள்ளது. இதுவே, முக்கியப் புரதங்களை பாதுகாத்து, செல்களின் ஆற்றல் உற்பத்தியை அதிகரிக்கிறது என்று கொலோன் பல்கலை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

5. பூமி போலவே பாறைகள் உள்ள, 'சூப்பர்-எர்த்' கிரகத்தை விண்வெளியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். 'ஜிஜெ 251 சி' என்ற இது, பூமியிலிருந்து 20 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. இதுதான், நம் சூரியக் குடும்பத்திற்கு வெளியே, உயிர்களைத் தேடுவதற்கு ஏற்ற 'மிக அருகில்' உள்ள கோள்.

# சட்டவிரோத குவாரி நடத்துவோர் மீது குற்றவியல் நடவடிக்கை: உயர் நீதிமன்றம் உத்தரவு





**மதுரை, நவ.21:**

சட்டவிரோத குவாரிகள் நடத்துவோர் மீது அபராதம் விதிப்பதுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூரை சேர்ந்த காசிராஜன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: 'தமிழகத்தில் சுமார் 1700 கல் குவாரிகளுக்கு அரசு உரிமம் வழங்கியுள்ளது. குவாரி உரிமம் பெறுபவர்கள் அனுமதிக்கப்பட்ட அளவை காட்டிலும் பல மடங்கு அதிகமாக கற்களை வெட்டுகின்றனர். பலர் உரிமம் காலாவதியான பிறகும் சட்டவிரோதமாக கற்களை வெட்டி விற்பனை செய்கின்றனர்.

புதுக்கோட்டைமாவட்டத்தில் மட்டும் பல்வேறு சட்டவிரோத கல் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. சிலர் அரசு புறம்போக்கு நிலங்களை பட்டா நிலமாக போலியாக ஆவணங்கள் தயாரித்து அந்த இடங்களில் கல்குவாரிகள் நடத்தி வருகின்றனர். இதனால் அரசுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்புகள் ஏற்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது.

புதுக்கோட்டையில் எழில் நகரைச் சேர்ந்த முருகேசனும், கரூர் ஆண்டாங்கோயிலில் ரங்கசாமி என்பவரும் சட்டவிரோத குவாரி நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுவாக சட்டவிரோதமாக குவாரி நடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க மனு அளித்தால் அந்த மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

சிலருக்கு சட்டவிரோத குவாரி நடத்தியதற்காக பல கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையை வசூல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை.

அதே நேரத்தில் சட்டவிரோதமாக குவாரிகள் நடத்துவோருக்கு அபராதம் மட்டும் விதிக்காமல் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி சட்டவிரோத குவாரி நடத்துவோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் பி.கணபதி சுப்பிரமணியன் வாதிட்டார். அரசு தரப்பில், 'குளத்தூர் வத்தனாக்குறிச்சி கிராமத்தில் முருகேசன் என்பவர் உரிமம் வழங்கப்படாத நிலங்களில் சுமார் 9 ஆயிரம் கனமீட்டர் கனிம வளங்களை சட்டவிரோதமாக வெட்டி எடுத்ததற்காக அவருக்கு கடந்த 2023-ல் ரூ.3.15 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

அவர் இதுவரை அபராத தொகையை கட்டாததால் வருவாய் துறை சட்டப்படி அபராதத் தொகையை வசூலிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது' எனக் கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், 'சட்டவிரோத கனிம திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது அபராதம் விதிப்பது மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுப்பது குறித்து ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் ஜெயந்த் வழக்கில் தெளிவான உத்தரவை பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவை பின்பற்ற வேண்டும். இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்' என உத்தரவிட்டனர்.

# அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.80.24 லட்சத்தில் 'சிறார் அறிவியல் பூங்கா' திறப்பு

**சென்னை, நவ.21:**

குழந்தைகளின் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் வகையில், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் ரூ.80.24 லட்சத்தில் சிறார் அறிவியல் பூங்கா (சில்ரன்ஸ் சயின்ஸ் பார்க்) புதன்கிழமை திறக்கப்பட்டது.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் அமைக்கப்பட்ட இந்த பூங்காவை துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார்.

இந்த அறிவியல் பூங்காவில் குழந்தைகளுக்கு அறிவியல் கருத்துகளை நடைமுறை அனுபவத்தின் மூலம் கற்றுக்கொடுத்து அவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் கற்றல் செய்முறையில் நேரடியாக ஈடுபட்டு, அறிவியல் கோட்பாடுகளை அனுபவத்துடன் கற்கும் வகையில் மின் இயந்திரம், எர்த் குயிக் கேபிள்,



மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சைக்கிள் உள்பட 21 அறிவியல் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் 10 சாதனங்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த கற்றலை வழங்குகின்றன.

மேலும், இயற்பியல், உயிரியல் அறிவு, கணிதம் தொடர்பான ஒரு சாதனம் குழந்தைகளுக்கு நடைமுறை அனுபவத்துடன் கணித கற்றல் வாய்ப்பை வழங்கும் வகையில் என 8 சாதனங்கள் உள்ளன.

ஒவ்வொரு சாதனமும் குழந்தைகள் நேரடியாகத் தொடர்ந்து, செயலில் ஈடுபட்டு கற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பது சிறப்பு அம்சம். இந்த அறிவியல் பூங்கா, சிறுவர்கள் அறிவியல் உலகில் ஆர்வத்துடன் நுழையவும், புதுமை சிந்தனையை வளர்க்கவும் முக்கிய பங்காற்றும்.

பூங்காவில் உள்ள அனைத்து சாதனங்களையும் அமைச்சர் அன்பில் மகேஸ் மாணவர்களுடன் சேர்த்து இயக்கிப் பார்த்தார்.

நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன், பொது நூலக இணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார், அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர் செ.காமாட்சி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## க்ரைம் கார்னர்

### வறுமையால் 8 குழந்தைகளை பெற்ற கூலித் தொழிலாளி தூக்குப்போட்டு தற்கொலை

**ஐதராபாத், நவ.21:**

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ளது மயிலார்தேவ் பள்ளி. இங்கு பீகாரை சேர்ந்த நவ்ஷாத் (வயது 45), காத்தூன்(38) தம்பதி வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு ஐந்து மகன்கள் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர். கணவன், மனைவி இருவரும் கூலி வேலைக்கு சென்று உழைத்து குழந்தைகளை காப்பாற்றி வந்தனர். ஆனால் குடும்பத்தில் செலவு கூடுதலாகி கொண்டே வந்ததால், நவ்ஷாத் மனைவியிடம் அடிக்கடி புலம்பி வந்தார். இந்த நிலையில் நவ்ஷாத் சம்பவத்தன்று நன்றாக குடித்துவிட்டு வந்து வீட்டின் கதவை உட்புறமாக பூட்டிக் கொண்டார். பின்னர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதைப் பார்த்து அவரது மனைவியும், குழந்தைகளும் கதறி அழுதனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடம் விரைந்து நவ்ஷாத் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

### நக்சலைட்டுகள் சுட்டதில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பலி

**ராஜநந்தகான், நவ.21:**

சத்தீஷ்கார் மாநிலம் ராஜநந்தகான் மாவட்டத்தின் போர்தலவ் பகுதியில் உள்ள காட்டில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

சத்தீஷ்கார் மாநிலம் ராஜநந்தகான் மாவட்டத்தின் போர்தலவ் பகுதியில் உள்ள காட்டில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி மத்திய ரிசர்வ் போலீசார் உள்ளூர் போலீசாருடன் இணைந்து நக்சலைட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு மறைந்திருந்த நக்சலைட்டுகள் போலீசாரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மீது குண்டுகள் பாய்ந்து ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தார். இதனையடுத்து உடனடியாக சக போலீசார் அவரை மீட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். இதற்கிடையில் நக்சலைட்டுடனான துப்பாக்கிச் சண்டை தீவிரமாக நடந்து வருகிறது.

### போலி ஆவணம் மூலம் ரூ.3 கோடி நிலம் அபகரிப்பு: சென்னையில் சகோதரிகள் இருவர் கைது



**சென்னை, நவ.21:**

போலி ஆவணங்கள் மூலம் ரூ.3 கோடி மதிப்புள்ள நிலம் அபகரிக்கப்பட்ட வழக்கில், சென்னையில் சகோதரிகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

டெல்லியில் வசித்து வருபவர் விஸ்வநாதன் மகாதேவன் (58). இவரது தாய்மாமா கணபதி என்பவருக்கு சொந்தமாக சென்னை கொளத்தூரில் ரூ.3 கோடி மதிப்புள்ள நிலம் இருந்தது. கணபதிக்கு வாரிசு கிடையாது. இந்நிலையில், சில ஆண்டுகளுக்கு முன் அவர் இறந்துவிட்டார். இதை தெரிந்து கொண்ட மோசடி நபர்கள் சிலர் போலி ஆவணம் மற்றும் ஆள்மாறாட்டம் மூலம் அபகரித்தனர்.

இதையறிந்த மகாதேவன் இது தொடர்பாக சென்னை காவல் ஆணையரிடம் புகார் தெரிவித்தார். புகாரின்பேரில் மத்திய குற்றப்பிரிவில் உள்ள நில மோசடி புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் நில மோசடியில் ஈடுபட்டது, சென்னை சீனிவாசபுரம் தியாகராய நகரைச் சேர்ந்த குமாரி (42), அவரது சகோதரியான மேற்கு சைதாப்பேட்டை ஜோதியம்மாள் நகரைச் சேர்ந்த மேரி (33) என்பது தெரிந்தது.

இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் ஏற்கெனவே 3 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பெண் மருத்துவர் தற்கொலை வழக்கில் மருத்துவ விஞ்ஞானி கணவர் கைது

**ஆவடி, நவ.21:**

அம்பத்தூர் தொழிற்பேட்டை அருகே உள்ள முகப்பேர் மேற்கு, ரெட்டிப்பாளையம் பகுதியில் வசித்து வந்தவர், ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தைச் சேர்ந்த மருத்துவர் அசாருதீன் (31). இவர் சென்னை, சேத்து பட்டில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலில் (ஐசிஎம்ஆர்) மருத்துவ விஞ்ஞானியாக பணிபுரிந்து வந்தார்.

இவரது மனைவி ஹுருல் சமீரா (29). இவர் அண்ணாநகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வந்தார். இருவரும் காதலித்து, பெற்றோர் சம்மதத்துடன் கடந்தாண்டு திருமணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில் கடந்த ஆக. 25-ம் தேதி, ஹுருல் சமீரா வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர்.

மேலும் அம்பத்தூர் கோட்டாட்சியர் சதீஷ்குமார், அசாருதீன் குடும்பத்தினரிடம் நடத்திய விசாரணையில், அசாருதீன் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதால், ஹுருல் சமீரா தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த அசாருதீனை நேற்று முன் தினம் போலீஸார் கைது செய்தனர்.

# கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களை நிராகரித்தது ஏன்?-மத்திய அரசு விளக்கம்



புதுடெல்லி, நவ.21:

தமிழகத்தில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த திட்டங்களை மத்திய அரசு நிராகரித்து விட்டதாக நேற்று முன்தினம் தகவல்கள் வெளியாகின. இதற்கு தமிழகத்தில் அதிருப்தி கிளம்பியது.

இந்தநிலையில் மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் இந்த நிராகரிப்புக்கான காரணங்கள் குறித்து விளக்கம் அளித்துள்ளது.

தமிழக அரசுக்கு அமைச்சகம் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கான தமிழக அரசின் பரிந்துரையை தெரிவித்து வந்த கடிதங்கள் சரிபார்க்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டதாக தெரிகிறது. அந்த ஆய்வில் சில விஷயங்கள் கவனிக்கப்பட்டன.

கோவையில் 34 கி.மீ. நீளத்துக்கு மெட்ரோ ரெயில் இயக்க திட்டமிடப்பட்ட நிலையில் அங்கு ஏற்கனவே உள்ள சாலைப்போக்குவரத்தின் பயண நேரம் மெட்ரோ ரெயிலின் பயண நேரத்தை விட குறைவாக உள்ளது.

மேலும் மக்கள் தொகையை கணக்கிடும்போது சென்னை 1- ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தை விட 4 லட்சம் பேர் மட்டுமே அதிகமாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

பயண நேரத்தின் அடிப்படையில் மக்கள் மெட்ரோவுக்கு மாற வாய்ப்பில்லை என தெரிய வருகிறது.

மதுரையைப் பொறுத்தவரை அங்கு மக்கள் தொகை குறைவாக உள்ளது. மெட்ரோ ரெயில் இயக்க வேண்டும் என்றால் குறைந்தபட்சம் 20 லட்சம் மக்கள் இருக்க வேண்டும் என திட்டமிடப்பட்டு இருக்கிறது.

ஆனால் 2011- ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மதுரையின் மக்கள் தொகைய 15 லட்சம் மட்டுமே. இந்த காரணங்கள் தவிர மெட்ரோ ரெயில் திட்டத்துக்காக பல கட்டிடங்கள் இடிக்கப்பட வேண்டும். பல கட்டிடங்கள் மிக விலை உயர்ந்ததாக இருக்கலாம். இதனால் பொது மக்களுக்கு சிரமங்கள் ஏற்படலாம். கோவையின் மக்கள் தொகை 15.84 லட்சம் உள்ளது.

எனவே 20 லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகரங்களிலேயே மெட்ரோ ரெயில் திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெறிநாய் கடித்து இறந்த பசுமாட்டின் பாலை குடித்த கிராமத்தினருக்கு ரேபிஸ் தடுப்பூசி

லக்னோ, நவ.21:

உத்தரபிரதேச மாநிலத்தில் விவசாயி ஒருவரின் பசு மாட்டை கடந்த 3 மாதத்திற்கு முன்பு வெறிநாய் ஒன்று கடித்தது.

உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூர் மாவட்டத்தின் ராம்திக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் பசுமாடு வளர்த்து வந்தார். இவரது மாட்டை கடந்த 3 மாதத்திற்கு முன்பு வெறிநாய் ஒன்று கடித்திருந்தது. இந்த நிலையில் அந்த கிராமத்தில் நடந்த விழாவில் கலந்துகொண்ட மக்களுக்கு விவசாயி அந்த மாட்டின் பாலை வழங்கியுள்ளார். இதையடுத்து திடீரென அந்த பசுமாடு இறந்ததால் கிராமத்தினர் அனைவரும் அச்சமடைந்தனர். இதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுகாதார நிலையம் சார்பில் 160 பேருக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டது.

## ஜி20 உச்சி மாநாடு: பிரதமர் மோடி இன்று தென்ஆப்பிரிக்கா பயணம்



புதுடெல்லி, நவ.21:

ஜி20 நாட்டு தலைவர்களின் 20-வது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் வருகிற 22 மற்றும் 23-ந்தேதிகளில் நடக்கிறது. இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இன்று (வெள்ளிக்கிழமை) தென் ஆப்பிரிக்கா செல்கிறார்.

உச்சி மாநாட்டின் 3 அமர்வுகளிலும் பிரதமர் மோடி பங்கேற்று பேசுகிறார். குறிப்பாக ஜி20 நிகழ்ச்சி நிரலில் இந்தியாவின் கருத்துகளை பிரதமர் மோடி முன்வைப்பார் என வெளியுறவு அமைச்சகம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்து உள்ளது. மேலும் இந்த மாநாட்டுக்கு இடையே பல்வேறு உலக தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளையும் நடத்துகிறார்.

அத்துடன் இந்தியா-பிரேசில்-தென் ஆப்பிரிக்கா தலைவர்களின் கூட்டத்திலும் பிரதமர் மோடி பங்கேற்பார் என வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

முன்னதாக இந்த மாநாட்டை புறக்கணிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்து இருந்தார். தென் ஆப்பிரிக்காவில் பழங்குடியினருக்கு எதிராக நடக்கும் அத்துமீறல்களை கண்டித்து இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா-பாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதாக டிரம்ப் 60 முறை கூறிவிட்டார்; காங்கிரஸ் கிண்டல்

புதுடெல்லி, நவ.21:

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான சண்டையை நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஏற்கனவே பலதடவை கூறியுள்ளார். நேற்று முன்தினம், சவுதி அரேபிய பட்டத்து இளவரசருடனான சந்திப்பின்போதும், அதை அவர் தெரிவித்தார். இந்நிலையில், இதுதொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது ‘எக்ஸ்’ வலைத்தள பக்கத்தில், இந்தியா-பாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதாக இதுவரை டிரம்ப் 60 முறை கூறி விட்டார் என்று கிண்டலாக தெரிவித்துள்ளார்.

## மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரம்: சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கு திமுக வரவேற்பு

புதுடெல்லி, நவ.21:

கவர்னர் விளக்கம் கேட்கலாம் மசோதாக்களை நிராகரிக்க முடியாது என்று டிகேஎஸ் இளங்கோவன் கூறினார்.

மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி மற்றும் கவர்னருக்கு காலக்கெடு விதிக்க முடியாது என தீர்ப்பளித்துள்ள சுப்ரீம் கோர்டின் அரசியல் சாசன அமர்வு, இதுகுறித்து இரண்டு நீதிபதிகள் அளித்த தீர்ப்பை அரசியலமைப்புக்கு எதிரானது என கூறி நிராகரித்துள்ளது. மேலும், மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமலும், எந்த பதிலும் அளிக்காமலும் கவர்னர்கள் கிடப்பில் போட அதிகாரம் இல்லை.

மாநில அரசு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல், நிராகரித்தல் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்புதல் ஆகிய மூன்று விருப்பங்களில் ஒன்றை மட்டுமே கவர்னர் தேர்ந்தெடுக்க விருப்புரிமை உள்ளது என்றும் கோர்ட்டு கூறியுள்ளது.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த தீர்ப்பை திமுக வரவேற்றுள்ளது. இது தொடர்பாக திமுக எம்.பி. கனிமொழி கூறியதாவது: “உலகத்தில் கஷ்டமில்லாத தொழில் எது?” என்று கேட்டபோது, “கவர்னர் வேலை பார்ப்பது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் பதிலளித்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு, தனது மக்களுக்கான உரிமைகளைக் காத்திடவும், மாநில நலன்களைப் பாதுகாக்கவும் சட்டமன்றத்தில் இயற்றி அனுப்பும் மசோதாக்களை, காலம் தாழ்த்தாமல் முத்திரையிட்டு டெல்லிக்கு அனுப்புவது என்னும் எளிய பணியை மட்டுமே ஆளுநருக்கு அரசமைப்புச் சட்டம் கொடுத்துள்ளது. இன்று உச்சநீதிமன்றமும் அதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இனி ஏனும் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, ஆளுநர் அவர்கள் அப்பணியை செவ்வனே செய்வார் என்று நம்புகிறேன்” என்று அவர் பதிவிட்டுள்ளார்.


அதேபோல், திமுக மூத்த தலைவர் டி.கே. எஸ். இளங்கோவன் கூறுகையில்:“மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் தீர்மானத்தை கவர்னர் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அரசியல் அமைப்புக்கு எதிராக ஏதேனும் முரண்பாடுகள் தெரிந்தால், கவர்னர் விளக்கம் கேட்கலாம். அதே நேரத்தில் மசோதாக்களை நிராகரிக்க முடியாது. இந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று அவர் கூற முடியாது; அதற்கான அதிகாரம் கவர்னருக்கு இல்லை. எம்.பி., எம்.எல்.ஏக்களால் ஜனாதிபதி தேர்வு செய்யப்படுகிறார்; துணை ஜனாதிபதி எம்.பிக்களால் தேர்வு செய்யப்படுகிறார்; பிரதமரும் தேர்வு செய்யப்படுகிறார். ஆனால், கவர்னர் நியமனம் செய்யப்படுகிறார்” என்று கூறினார்.

## அமெரிக்க வரிகளால் ஏற்றுமதி சரிவு: நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை ரூ. 3.47 லட்சம் கோடியானது !

புதுடெல்லி, நவ.21:

அமெரிக்க ஜனாதி பதி டிரம்ப் விதித்த அதிகப்படியான வரிகளின் காரணமாக 2025 அக்டோபரில் இந்தியாவின் ஏற்றுமதி 11.8 சதவிகிதம் சரிந்து, 2 லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

இதே காலகட்டத்தில் தங்கம் இறக்குமதி அதிகரித்ததன் காரணமாக, வர்த்தகப் பற்றாக்குறையானது (TRADE DEFICIT) 3 லட்சத்து 47 ஆயிரம் கோடியாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.



இதற்கு முன், 2025 செப்டம்பரில் வர்த்தகப் பற்றாக்குறை 2 லட்சத்து 75 ஆயி ரம் கோடி ரூபாயாக அதிகரித்திருந்த நிலை யில், அக்டோபரில் அது மேலும் 72 ஆயிரம் அளவிற்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் இல்லாத அதிகபட்ச வர்த்தகப் பற்றாக்குறை இதுவாகும். திங்களன்று (நவ. 17) வெளியிடப்பட்ட அரசுத் தரவுகளின்படி, இந்தியாவின் இறக்குமதி 16.63 சதவிகிதம் அதி கரித்து, அதன் மதிப்பு 6 லட்சத்து 73 ஆயி ரம் கோடி ரூபாயாக எப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டி யுள்ளது. இந்த இறக்குமதி அதிகரிப்புக்கு, தங்கம், வெள்ளி, கச்சாப் பருத்தி/கழிவு, உரம், கந்தகம் ஆகியவற்றின் அதிக இறக்குமதி முதன்மைக் காரணம் என பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான கால கட்டத்தில், இறக்குமதிகள் 6.37 சதவிகிதம் அதிகரித்து 39 லட்சத்து 89 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால், ஏற்றுமதிகள் ஒரு சதவிகிதம் கூட அதிகரிக்க வில்லை. வெறும் 0.63 சதவிகிதம் மட்டுமே அதிகரித்து 22 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது. 2025 ஏப்ரல் – அக்டோபர் காலகட்டத்தில் சரக்கு வர்த்தகப் பற்றாக்குறை 17 லட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள் ளது. இதுவே கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 63 ஆயிரம் கோடி ரூபாயாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. ஜவுளித் துறைக்கு பெரும் பாதிப்பு இந்தியா மீது அமெரிக்கா விதித்த 50 சதவிகித வரிகள், ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியை கடுமையாகப் பாதிக்கத் துவங்கிவிட்டது. பருத்தி நூல், துணி, துணிகள் மூலம் உருவாக்கப்பட்ட பொருட்கள், செயற்கை இழைகள், சணல் பொருட்கள், தரை விரிப்புகள் மற்றும் கைவினைப் பொருட்கள் உட்பட கிட்டத்தட்ட அனைத்து பிரிவுகளிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 அக்டோபரில் இரட்டை இலக்கச் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 அக்டோபரில் ஜவுளி ஏற்றுமதி 12.92 சதவிகிதம் குறைந்துள்ளது. அதேநேரத்தில் ஆடை ஏற்றுமதியும் 12.88 சத விகிதம் சரிந்துள்ளது என்று இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பு (CITI) தெரிவித்துள் ளது. ஜவுளி ஏற்றுமதி 3.54 சதவிகிதம் குறைந்துள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## ஜூனியர் ஆண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட்: போட்டி அட்டவணை வெளியீடு



துபாய், நவ.21:

16-வது ஐ.சி.சி. ஜூனியர் ஆண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (19 வயதுக்குட்பட்டோர்) அடுத்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஜிம்பாப்வே மற்றும் நமிபியாவில் நடைபெற உள்ளது. 16 அணிகள் பங்கேற்கும் இந்த போட்டிக்கான அட்டவணையை ஐ.சி. சி. நேற்று வெளியிட்டது.

இதில் பங்கேற்றுள்ள அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் தங்களது பிரிவுகளில் இடம்பெற்றுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெறும்.

இதன்படி ‘ஏ’ பிரிவில் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, அயர்லாந்து, ஜப்பான் மற்றும் இலங்கை அணிகளும், ‘பி’பிரிவில் இந்தியா, வங்காளாதேசம், அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகளும், ‘சி’ பிரிவில் ஜிம்பாப்வே, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து அணிகளும், ‘டி’ பிரிவில் வெஸ்ட் இண்டீஸ், ஆப்கானிஸ்தான், தான்சானியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இதில் ‘பி’ பிரிவில் இடம் பெற்றுள்ள 5 முறை சாம்பியனான இந்திய அணி ஜன.15-ந்தேதி புலவாயோவில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் அமெரிக்காவுடன் மோதுகிறது. 17-ந் தேதி வங்காளதேசத்தையும், 24-ந்தேதி நியூசிலாந்தையும் சந்திக்கிறது.

இறுதிப்போட்டி ஜிம்பாப்வேயில் உள்ள ஹராரே மைதானத்தில் நடைபெற உள்ளது.

## உலகக் கோப்பை குத்துச்சண்டை: இந்திய வீராங்கனை இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்

புதுடெல்லி, நவ.21:

உலகக் கோப்பை குத்துச்சண்டை போட்டியின் இறுதி சுற்று உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்களுக்கான 51 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதியில் இரண்டு முறை உலக சாம்பியனான இந்தியாவின் நிகாத் ஜரீன் 5-0 என்ற புள்ளி கணக்கில் உஸ்பெகிஸ்தானின் கானிவா குல்செவாரை பதம் பார்த்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இதன் மூலம் அவருக்கு தங்கம் அல்லது வெள்ளிப்பதக்கம் உறுதியாகியுள்ளது.

20 மாதங்களுக்கு பிறகு பதக்கம் வெல்ல இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக நிகாத் ஜரீன் கூறினார். ஜாஸ்மின் லம்போரியா (57 கிலோ), ஜதுமணி சிங் (50 கிலோ), பவான் பார்த்வால் (55 கிலோ), சச்சின் சிவாச் (60 கிலோ), ஹிதேஷ் குலியா (70 கிலோ) ஆகியோரும் இறுதிப்போட்டியை எட்டினர். இன்றைய தினம் மொத்தம் 15 இந்தியர்கள் தங்கப் பதக்கத்துக்காக கோதாவில் குதிக்கிறார்கள்.

## 1.50 லட்சம் மக்கள் தொகை தான்....கால்பந்து உலகக் கோப்பைக்கு தகுதி பெற்ற மிகச்சிறிய நாடு



வில்லெம்ஸ்டாட், நவ.21:

உலகக் கோப்பை கால்பந்தில் பிரவேசிக்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு என்ற சாதனையை படைத்தது.

அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு குராக்கோ முதல்முறையாக தகுதி பெற்றிருக்கிறது. இதன் மூலம் உலகக் கோப்பை கால்பந்தில் பிரவேசிக்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு என்ற சாதனையை படைத்தது.

‘பி’ பிரிவில் ஜமைக்கா தலைநகர் கிங்ஸ்டனில் அரங்கேறிய குராக்கோ- ஜமைக்கா அணிகள் இடையிலான கடைசி ஆட்டம் கோலின்றி டிராவில் முடிந்தது. லீக் முடிவில் உலக தரவரிசையில் 82-வது இடத்தில் உள்ள குராக்கோ 3 வெற்றி, 3 டிராவுடன் 12 புள்ளிகள் பெற்று தனது பிரிவில் முதலிடம் பிடித்து முதல்முறையாக உலகக் கோப்பை போட்டிக்குள் கால்பதித்தது.

கரிபீயன் தீவுகளில் ஒன்றான குராக்கோவில் தற்போது 1 லட்சத்து 56 ஆயிரத்து 115 மக்கள் வசிக்கிறார்கள். இதற்கு முன்பு 2018-ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிக்கு ஐஸ்லாந்து தகுதி கண்ட போது அந்த நாட்டின் மக்கள் தொகை 3 லட்சத்து 50 ஆயிரமாக இருந்தது. அதுவே முன்னதாக உலக கோப்பை போட்டிக்குள் கால்பதித்த குட்டி தேசமாக இருந்தது.

## கூகுள் 'ஜெமினி 3' புதிய மாடல்




கூகுள் நிறுவனம் தனது செயற்கை நுண்ணறிவு மாடலான ஜெமினி-யின் புதிய மேம்பட்ட வடிவ மான ஜெமினி-3 ஐ வெளியிட்டுள்ளது. இம்மாடல், பன்முகப் புரிதலுக்கான மிகச் சிறந்த மாதிரி என்றும், இது வரை உருவாக்கப்பட்டதில் மிகச் சக்திவாய்ந்த தானாகவே பணிகளைச் செய்து முடிக்கும் திறன் (ஏஜெண்டிக்) மற்றும் சாதாரண மொழியில் கூறும் யோசனையை புரிந்துகொண்டு, அதற்கேற்ற கோட் எழு தும் திறனான "வைப் கோடிங்" மாதிரி என்றும் அறிவித்துள்ளது. ஜெமினி 3 மிகவும் புத்திசாலித்தனமான மாடல், ஜெமினியின் அனைத்துத் திறன்களையும் ஒன்றிணைத்து உதவும் எனவும் கூகுள் தெரிவித்துள்ளது.

## உலகம் அதிக அளவில் நகரமயமாக்கப்பட்டு வருகிறது: ஐ.நா.



உலக நகரமயமாக்கல் வாய்ப்புகள் 2025: அறிக்கையின் சுருக்கத்தை ஐ.நா அவை வெளியிட்டது. அதில் உலகம் அதிக அளவில் நகரமயமாக்கப்பட்டு வருகிறது. 1950 ஆம் ஆண்டில், உலக மக்கள் தொகையான 250 கோடியில் வெறும் 20 சதவீதம் பேர் மட்டுமே நகரங்களில் வசித்தனர். இந்த எண்ணிக்கை தற்போது 45 சதவீதமாக உயர்ந்து, இரண்டு மடங்கிற்கும் அதிகமாகி உள்ளது. பெருநகரங்களின் எண்ணிக்கை 1975 ஆம் ஆண்டில் எட்டாக இருந்தது. 2025 ஆம் ஆண்டில் நான்கு மடங்காக ( 33 )அதிகரித்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

## இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

ஆசியாவில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. இந்நாட்டில் பல்வேறு எரிமலைகள் உள்ளன. இதில் சில எரிமலைகள் அவ்வப்போது வெடித்து எரிமலை குழம்பை வெளியேற்றி வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் ஜாவா தீவில் உள்ள செமேரு எரிமலை இன்று வெடித்து சிதறியது. எரிமலையில் இருந்து கரும்புகையுடன், லாவா எரிமலை குழம்பும் வெளியேறி வருகிறது. இதன் காரணமாக செமேரு எரிமலை அருகே வசித்து வரும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எரிமலை வெடிப்பால் ஜாவா தீவில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# குடியிருப்பு கட்டிடங்களை குறிவைத்து ரஷ்யா தாக்குதல்: 3 குழந்தைகள் உட்பட 25 பேர் பலி

**மாஸ்கோ, நவ.21:**

உக்ரைனின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள டெர்னோபில்(Ternopil) நகரின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்களை குறிவைத்து ரஷ்யா ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது.



இந்த கொடூரத் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 25 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை அதிகாலை நடந்த இந்த தாக்குதலில் 15 குழந்தைகள் உட்பட 73 பேர் காயமடைந்துள்ளனர்.

2022ம் ஆண்டு தொடங்கிய போர் நடவடிக்கைக்கு பிறகு, இந்த பிராந்தியத்தில் நடத்தப்படும் மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

மக்கள் குடியிருப்பு கட்டிடங்கள் மீது ரஷ்யா X-101 ரக குரூஸ் ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்கியதாக உக்ரைன் விமான படை உறுதிப்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் இந்த திடீர் ஏவுகணை தாக்குதலில் டெர்னோபில் நகரம் மட்டுமல்லாமல் லிவிவ், இவானோ-ஃப்ராங்கிவ்ஸ்க் மற்றும் கார்கிவ் ஆகிய நகரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யா ஏவிய 476 ட்ரோன்களில் 442 ட்ரோன்களையும் மற்றும் 48 ஏவுகணைகளில் 41 ஏவுகணைகளையும் சுட்டு வீழ்த்தி இருப்பதாக உக்ரைன் விமானப்படை தகவல் தெரிவித்துள்ளது. இந்த தடுப்பு தாக்குதலுக்கு F-16 மற்றும் மிராஜ் 2000 போன்ற மேற்கத்திய நட்பு நாடுகளின் போர் ஜெட் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

அதே சமயம் அதிகரித்து வரும் ரஷ்ய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள மேற்கத்திய நட்பு நாடுகளிடம் இருந்து தடையற்ற மற்றும் சரியான நேரத்தில் விமான ஆயுதங்கள் தேவைப்படுவதாகவும் உக்ரைன் விமானப்படை வலியுறுத்தியுள்ளது.

# அமெரிக்காவில் ரூ.88 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்: சவுதி அரேபியா அறிவிப்பு

**வாஷிங்டன், நவ.21:**



சவுதி அரேபியா நாட்டின் மன்னராக சல்மான் (வயது 88) உள்ளார். உடல் நல குறைப்பாடு காரணமாக அவருக்கு பதிலாக பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் நாட்டின் நிர்வாகத்தை கவனித்து வருகிறார். இந்தநிலையில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் அரசுமுறை பயணமாக அமெரிக்கா சென்றார். ரியாத் மற்றும் வாஷிங்டன் இடையேயான உறவை வலுப்படுத்தும் விதமாக இந்த சந்திப்பு திட்டமிடப்பட்டது. வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்கு வருகை தந்த இளவரசருக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ராணுவ வீரர்கள் புடைசூழ சிவப்பு கம்பள வரவேற்பு அளித்தார். ஓவல் அலுவலகத்தில் இருபெரும் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம், எப்-35 போர் விமானங்கள் விற்பனை, அமெரிக்காவில் வர்த்தக முதலீடு குறித்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர் கூட்டாக இணைந்து பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது டிரம்ப், "அமெரிக்காவில் ரூ.53 லட்சம் கோடி (600 பில்லியன் டாலர்கள்)முதலீடுசெய்வதாக சவுதி அரேபியா ஏற்கனவே ஒப்புக்கொண்டது. தற்போது அதனை உயர்த்தி ரூ.88 லட்சம் கோடி (1 டிரில்லியன் டாலர்கள்) முதலீடு செய்ய ஒப்பந்தமிடப்பட்டுள்ளது.

இதற்காக நான் கூடுதலாக உழைக்க வேண்டியுள்ளது. சவுதியின் முதலீட்டால் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு மற்றும் வளங்கள் அதிகரிக்கும். பங்குச்சந்தை முதலீடு உயரும்" என்றார். அப்போது பத்திரிகையாளர் ஜமால் கஷோகி படுகொலை தொடர்பான கேள்விக்கு "இளவரசருக்கு அது குறித்து ஏதும் தெரியாது. அப்படியே விட்டுவிடுங்கள்" என்றார். 2018-ம் ஆண்டு இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்தில் ஜமால் கஷோகி டிரோன் தாக்குதலில் உயிரிழந்தார். இதில் இளவரர் சல்மானுக்கு தொடர்பு இருப்பதாக கூறப்பட்டு வருகிறது.

சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், "அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதலுக்கு பின்லேடன் சவுதி மக்களை பயன்படுத்தினார். மேலும் அமெரிக்கா-சவுதி அரேபியா உறவுகளைசேதப்படுத்தினார். இதுபோன்ற பயங்ரவாத சம்பவம் இனிமேல் நடைபெறாமல் பாதுகாக்கப்படும். பயங்கரவாதம் ஒழிக்கப்படும். விரைவில் அமெரிக்காவில் ரூ.88 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்" என்றார்.

## ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ஜெய்சங்கர் சந்திப்பு



**மாஸ்கோ, நவ.21:**

ரஷியாவின் மாஸ்கோ நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் (எஸ்.சி.ஓ.) கலந்து கொள்வதற்காக மத்திய வெளிவிவகாரங்களுக்கான மந்திரி ஜெய்சங்கர் சென்றார். இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு 17 மற்றும்18 ஆகிய நாட்களில் நடந்தது.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக அந்நாட்டு அதிபர் புதினை, மத்திய மந்திரி ஜெய்சங்கர் நேற்று நேரில் சந்தித்து பேசினார். அப்போது, இரு தலைவர்களும் மண்டல மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கான பார்வைகளை பகிர்ந்து கொண்டனர்.

இதுபற்றி மத்திய மந்திரி ஜெய்சங்கர் வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், மாஸ்கோவில் ரஷிய அதிபர் புதினை சந்தித்ததில் மகிழ்ச்சி. பிரதமர் மோடியின் வாழ்த்துகளை அவருக்கு தெரிவித்து கொண்டேன். இந்தியா-ரஷியா வருடாந்திர உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பற்றியும் அவரிடம் எடுத்து கூறினேன். மண்டல மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் பற்றியும் ஆலோசனை மேற்கொண்டோம். இரு நாடுகளின் உறவுகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான அவருடைய பார்வைகளை மற்றும் வழிகாட்டுதல்களை ஆழ்ந்து மதிக்கிறேன் என தெரிவித்து உள்ளார்..

## அமெரிக்க- இந்திய பேச்சுவார்த்தை இறுதிக்கட்டம்



**வாஷிங்டன், நவ.21:**

அமெரிக்கா-இந்தியாவிற்கு இடையிலான ஒப்பந்த பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை நெருங்கி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தேசிய பொருளாதாரக் கவுன்சில் இயக்குநரான கெவின் ஹாசெட், இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. விரைவில் ஒப்பந்தம் செய்யப்படும். இதுதொடர்பாக நான் இந்திய தூதரிடம் பேசினேன் எனக் கூறியுள்ளார். ரஷ்யாவிடம்இருந்து வாங்கும் கச்சா எண்ணெய் அளவை இந்தியா குறைத்ததால் ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது எனக் கூறப்படுகிறது.

## பாதுகாப்புக் கவுன்சில் உறுப்பினர் பதவிக்கு ஜப்பான் தகுதியற்றது : சீனா



பாதுகாப்புக் கவுன்சில் சீர்திருத்தம் குறித்தான வருடாந்திர விவாதத்தில் பேசிய ஐ.நா அவைக்கான சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி ஃபூ காங், ஜப்பான் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றது என கடுமையாக விமர்சித்துள்ளார். சீனாவின் உள்நாட்டு அரசியலில் தலையிடும் வகையில் தைவான் குறித்து பேசிய ஜப்பான் பிரதமர் டகைச்சியின் கருத்துக்கள் தவறானவை மற்றும் ஆபத்தானவை. அவரது பேச்சு ஒரே -சீனக் கொள்கையையும் சீனா மற்றும் ஜப்பானுக்கு இடையேயான உணர்வையும் மிக மோசமாக மீறுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

## நைஜீரியாவில் கடத்தல்காரர்களிடம் இருந்து மாணவிகள் தப்பியோட்டம்



**கெபி, நவ.21:**

நைஜீரியாவின் கெபி மாகாணத்தில் உள்ள மாணவிகளுக்கான உண்டு உறைவிடப்பள்ளி ஒன்று உள்ளது. கடந்த திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் இந்த பள்ளிக்குள் பயங்கரவாதிகள் கும்பல் ஒன்று அத்துமீறி உள்ளே நுழைந்தது. பின்னர் அங்கு தங்கியிருந்த 25 மாணவிகளை துப்பாக்கிமுனையில் கடத்தி கொண்டு சென்றனர். இதனை தடுக்க முயன்ற விடுதி வார்டன் மற்றும் காவலாளியை சுட்டு கொன்றனர். கடத்தப்பட்ட மாணவிகளை மீட்க அந்த நாட்டின் அரசாங்கம் ராணுவத்தினரை களம் இறக்கி உள்ளனர். பயங்கரவாதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி மாணவிகளை உயிரோடு மீட்க முயற்சிகள் நடந்து வருகின்றன.

கூஇந்தநிலையில் கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து 2 மாணவிகள் தப்பி போலீசாரிடம் தஞ்சம் அடைந்தனர். அதில் ஒரு மாணவி பலத்த காயம் அடைந்துள்ளநிலையில் அவரை மீட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இந்தநிலையில் தப்பி வந்த மாணவிகளிடம் போலீசார் விசாரணை நடத்தி கடத்தப்பட்ட மாணவிகள் மற்றும் கடத்தல்காரர்கள் குறித்து தகவல் சேகரித்து வருகிறார்கள்.

# சீனாவில் ஜப்பான் கடல் உணவுக்கு தடை



**பீஜிங், நவ.21:**

அண்டை நாடான தைவானை தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியென கூறி போர் விமான ங்களை பறக்கவிட்டும், போர் கப்பல்களை களம் இறக்கி சீனா அச்சுறுத்தி வருகிறது. ஜப்பான் பிரதமர் சனே தகைச்சி, தைவானை சீண்டினால் சீனாவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்தார். இதனால் வெகுண்டெழுந்த சீனா, ஜப்பானின் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்தது. மேலும் அந்த நாட்டிற்கு தங்களுடைய மக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மேலும் அறிவுறுத்தியது.

சீனாவின் மிகப்பெரிய உணவு ஆதரமாக ஜப்பான் நாட்டின் கடல் உணவுகள் உள்ளன. மீன்கள், இறால்கள், கடல் நண்டுகள், ஸ்குவிட்கள், ஆக்டோபஸ்கள் போ ன்றவை அங்கிருந்து அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இருநாடுகளிடையே ஆண்டுக்கு பல ஆயிரம் கோடிக்கு கடல் உணவுகள் ஜப்பானில் இருந்து சீனாவில் இறக்குமதியாகிறது. இந்தநிலையில் ஜப்பான் கடல் உணவுகளுக்கு சீன அரசாங்கம் நிரந்தர தடை விதித்தது. மேலும் அந்த நாட்டின் சினிமாவுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2023ல் ஜப்பான் தனது புகுஷிமா மின் உற்பத்தி நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்ற முடிவு செய்ததால் விதிக்கப்பட்ட ஜப்பானிய கடல் உணவுகள் மீதான கட்டுப்பாடுகளை சீனா சில மாதங்களுக்கு முன்பு மட்டுமே ஓரளவு தளர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.